M. K. Venugopalachariar
Olaindipakkam

பூபாலன் புவனசுந்தரி

ஓர் இனிய செந்தமிழ் நாவல்.

காஞ்சிபுரம்

தி. அரங்கசாமி நாயுடு அவர்களால்

எழுதப்பட்டு

மூன்றும் பதிப்பு.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS

கீழ்கட்டளை

எஸ். துரைசாமி முதலியார் அவர்களால்

தமது

சென்னை சூளை, ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1922

[ரிஜிஸ்டர் காபிரைட்]

[விலை அணா 0

முகவுரை.

இந்நூலில் வாசிப்பவர் மனதைக் கவரத்தக்க எல்லா விஷயங்களையு மமைத்து ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் விளக்கும் அம்சங்களிருத்தல் வேண்டுமென்பதற்குத் திருஷ்டாந்தமாக இவ்வரிய நூலை எழுதி யுள்ளேன். அநேக அற்புதக் கதைகள் இதிலடங்கியிருக்கினும் முக்கியமாகப் பூபாலன் என்பான் தன் தோழன் சுபுத்தியுடனும் தன் மனைவி சுந்தரவல்லியுடனும் ஓர் தவசியால் அளிக்கப்பெற்ற ஆகாயத்தில் செல்லக்கூடிய ஓர் அஸ்வத்தின் மேல் ஊர்ந்து செல்லும்போது, தன் மனைவியும் தோழனும் ஆழியில் தவறிவிழத் தான் மாவிந்தபுரத்தில் தனஞ்செயன் என்பவனால் ஆதரிக்கப்பட்டு அத்தேயத்தரசன் மகளாகிய புவனசுந்தரியை ஆழியின் மத்திய பாகத்தில் காந்தர்வ மணம்புரிந்து பீமாபுரியடைந்து சுந்தரவதனியை மணம் புரிகின்றான். ஆழியில் விழுந்த சுந்தரவல்லியும் ஆதித்தபுரி யடைந்து ஆநந்தவல்லியால் ஆதரிக்கப்பட்டு தன் கணவனை யடைகின்றாள். தோழன் சுபுத்தியும் கரைசேர்ந்து தன் புத்தி சாதுர்யத்தினால் பூபாலனை யடைகின்றான். புவன சுந்தரி பூபாலனைப்பிரிந்து அநேக துன்பங்களுக்கிலக்காகி மச்சதேசத்தை யடைந்து அம்புஜாட்சியால் ஆதரிக்கப்பட்டுத் தன்நாயகனை யடைகின்றாள். இக்கதையை ஓர் உதாரணமாக எடுத்து யான் எழுதப்புகுந்ததின் காரணம் வாசிப்போர் மனதை நன்னெறியில் செல்லத் தூண்டுதற்கேயாம்.

இங்ஙனம்:

காஞ்சீபுரம். தி. அரங்கசாமி நாயுடு

பூபாலன் புவனசுந்தரி

1-வது அத்தியாயம்.

பூபாலன் அஸ்வத்தை யடைதல்.

பூபாலன்.—ஆ ஹா! இவ்வனத்தின் அழகே யழகு! கடவுளின் சிருஷ்டியின் திறத்தை எவ்வாறு வர்ணிக்கக்கூடும்? பர்வதத் தொடர்ச்சிகளின் வரிசை மேக மண்டலத்தை யளாவி நிற்கின்றன. எப்பக்கம் நோக்கினும் மலைகளும், மலைச்சிகரங்களின் மீதுள்ள நெடிய விருக்ஷங்களும் வானமளாவி நிற்கின்றன. கதிரவன் காட்சியும் களங்கமின்றிக் காணப்படுவதில்லை. வானில் சிலவெளி சுத்த நீலாகாயமாகவும், சிலவெளி வெண்மையாகவும், சிலவெளி கருமையான மேகங்கள் கவிந்து எனக்குக் கிழக்கு மேற்குத் திசைகளை யறிய வொட்டாது மறைத்திருக்கின்றன. என்பிதா ஜீவந்தராயிருந்து அரசியற்றுங் காலத்திலேயே இப்பூமண்டலத்தின் இயற்கை சுபாவங்களைக் கண்ணுற்றுத் திரும்பவேண்டுமென்றும், பூமண்டலத்தைப் பிரதட்சணமாய் வருவதற்கு விசையாய்ச் செல்லக்கூடிய ஓர் யந்திரம் கிடைத்தாலொழிய என்னெண்ணம் பலிக்காதென்றும், அதற்காகக் காட்டில் அருந்தவம் புரியும் தபோதனர்களிடஞ் சென்று வணங்கி அவர்களால் அவ்வித யந்திரம் ஒன்று பெற உத்தேசித்து

நாட்டைவிட்டு இக்காட்டில்வந்தும் எவ்விடம் செல்வதென்றும், தபோதனர்கள் வசிக்குமிட மின்னதென்றும் தெரியவில்லை. எவ்வித கஷ்டங்களை யனுபவித்தாயினும் என தெண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளாவிடின் என் வாழ்நாள் முழுதும் நான் இதைப்பற்றிச் சிந்திக்கவேண்டிவரும். ஆ' ஜெகதீசா ! என்னிடம் உன் கிருபையைக் காட்டவேண்டும். அதோ, யாரோ ஒருமனிதன் கையில் வில்லம்புகளுடன் வருகின்றான். அவனைப் பார்க்கின் வனசரனாகக் காணப்படுகின்றான். அவனைக்கொண்டே தபோதனர் வசிக்குந் திக்கைத் தெரிந்துகொள்வேன். ஐயா ! நீர் எங்கு வசிப்பது? இக்காட்டில் தபோதனர்கள் உறைவிடம் எத்திக்கிலுள்ளது? அதை யெனக்குத் தெரிவிக்கின் பேருபகாரமா யிருக்கும்.

வேடன்.—ஐயா ! தங்களை நோக்கில் இராஜவம்சத்தில் தோன்றியவராகக் காணப்படுகிறது. தாங்கள் எந்த நாடு? இந்த நிர்மானுஷியமான காட்டில் முனிப்புங்கவர்களைக் காணத் தனிமையாய்வரக் காரணம்யாது?

பூபாலன்.—நண்ப ! நான் இக்கானகத்தில் திசைதப்பியிருக்கும்போது கடவுளருளால் நீ எதிர்ப்பட்டதற்காக நான் மெத்த சந்தோஷமடைந்தேன். ஆகையால் என் விருத்தாந்தத்தை உன் விருப்பத்தின்படி சொல்லாமலிரேன். நான் விதர்ப்பநாடாளும் கீர்த்திசீலன் என்னும் அரசனுடைய ஏகபுத்திரன், என் பெயர் பூபாலன். என் பிதாவினுடைய அரசாட்சியை யான் ஏற்றுக்கொள்ளுமுன் பூபிரதட்சணஞ் செய்து பூமண்டலத்தின் இயற்கை சுபாவங்களைக் கண்ணுற

வேண்டுமென்றும், அப்படிச் செய்வதற்கு சமுத்தி
ரங்களையும், காடுகளையுங்கடந்து அதிசீக்கிரமாய்ச்
செல்லத்தக்க யந்திர மொன்றிருந்தாலொழிய என்
யோசனை பலிக்காதென்றும், ஆகையால் அருந்தவம்
புரியும் மகான்களால் அவ்விதயந்திரம்பெற உத்தே
சித்து இவ்விடம் போந்தனன்.

வேடன்.—இராஜதனயா! நீர் கொண்ட எண்ணம் கடவுள்
கிருபையால் கைகூடுமென்பதற்குச் சந்தேகமில்லை.
அதோ பாரும் சற்று தூரத்தில் ஓர் உன்னத சிக
ரத்தையுடைய பர்வதம் காணப்படுகிறது. அதன்
அடிவாரத்தில் அநேக மகான்களுடைய ஆஸ்ரமங்கள்
காணப்படும். ஆகையால் இவ்வழியே செல்வாயாக.
யான் என் குடிசையைநாடிச் செல்கின்றேன்.

பூபாலன்.—வேடன் எனக்குக் காண்பித்தவழி மிகவும்
அழகாயிருக்கின்றது. எதிரில்காணப்படும் முத்துப்
போன்ற தெள்ளிய நீரோடைகளின் ஜலவோட்டம்
ஸ்படிகத்தைத் தோற்கடிக்கின்றது. என்ன விநோ
தம்! நீரோடைகளின் கரைகளில் வரிசையாய்
செழித்து வளர்ந்தோங்கி தழைத்த பலவித புட்பச்
செடிகள் சூரியவெப்பப் பரிசமின்றி ஒய்யாரமாக
அசைந்து நிற்கின்றன. ஆ ஹா! என்னவனப்பு!
ஒருபக்கம் உயர்ந்த மேட்டுப்பாங்கான மலையெழுச்சி
யும், மற்றொருபக்கம் பள்ளத்தாக்கான சுனைகளும்
காணப்படுகின்றன. இவ்வளவுதூரம் நடந்தும் இளைப்
படைய விடமில்லாது குளிர்ந்த விருக்ஷங்களின்
நிழல் ஆதித்தனுடைய தீக்ஷணியத்தைத் தலைக்காட்ட
வொட்டாமல் காத்துநிற்கின்றன. எவ்விடம் நோக்கி

னும் மஞ்சள், சிவப்பு, வெண்மை முதலிய பலவர்ண மான மலர்கள் அபரிமிதமாய்ப் பூத்து காற்றிலசைவ தினல் இதழ்களுதிர்ந்து புஷ்பமாரி பொழிவது போல் காணப்படுகின்றன. நெடிய விருக்ஷங்களின் செழிப்பென்ன! அவைகளின்மீது கொடிமல்லிகை, சண்பகம் முதலிய கொடிவர்க்கங்கள் படர்ந்து மதுர மான மணத்தைவீசி அசைவாடி நிற்கின்றன. மலைக ளின்மீதுத் தங்கிநிற்கும் பனிநீர்த்துளிகள் கதிரவ னது இளங்கிரணபரிசத்தால் ஜொலிக்கின்றன. வேடன் சொன்னபடி அதோ ஓர் அழகான ஆஸ்ரமம் காணப்படுகிறது. ஆஹா! இத்தவசிகள் வசிக்குஞ் சோலை பகையைப் பரிஹரித்ததும், பொறுமையைப் போக்கியதுமா யிருக்கின்றது. இங்கு விவேகமற்ற விலங்குகளுங்கூட சாஸ்வதமாகத் தங்களிடமிருக்கும் இயல்பான பகைமையைப் பரிஹரித்து மிகவும் அமை தியான சுபாவத்தைப் பெற்றவைகளாய்த் தபோ வனந்தன்னில் தங்கி வசிக்கும் ஆனந்தத்தை யனுப விக்கின்றன. இதோ நாகமொன்று வெயிலால் வாடப் பட்டு மயிலினது தோகைக்குள் அஞ்சாமற் பதுங்கு கின்றது. இதோ மான்குட்டியொன்று தன் தாயை விட்டுப் பிடரிமயிர்ப்படராத சிங்கக்குட்டிகளுடன் கூடிப் பரிசயம்பெற்று, நன்கு சுரப்புண்டு பெருகும் பாற்பெருக்குடையதான சிங்கப்பேட்டின் முலையை யுண்ணுகிறது. இங்கு இடைவிடாது செவியுறப்படும் மந்திரங்களை சுககுலங்கள் ஓயாமல் உச்சரித்துக் கொண்டிருக்கின்றன. கிழவரும் கண்தெரியாதவரு மான முனிவர்களை அங்கு பழக்கமுடைய வானரங் கள் கைகொடுத்து ஆஸ்ரமங்களுக்கு உள்ளிருந்து

வெளியிலும் வெளியிலிருந்துள்ளேயும் அழைத்துச் செல்கின்றன. தர்மசாஸ்திரங்கள் தர்க்கிக்கப்படுகின்றன. இத்தகைய ஆஸ்ரமத்தின் மத்தியபாகத்தை அலங்கரிக்கச்செய்யும் ஓர் அசோகமரத்தின் அடி நிழலில் ஓர் முனிபுங்கவர் நிஷ்டையில் வீற்றிருக்கிறார். அவர் வெகு நீண்டு நரைத்துப்போன உரோமச்சடைகளால் தெய்வலோக மேறுவதற்கு சம்பாதிக்கப்பெற்ற புண்ணிய நூற் கயிறுகளுடன் கூடியவர்போல் விளங்குகின்றார். வெகு சபலங்களான இந்திரியங்களாகுங் குதிரைகளை உள்ளேயடக்கிக் கட்டும் வடக்கயிறுகள்போல் நீண்டு படர்ந்திருக்கும் நாடி நரம்புகளால் அவரது சரீரம் கவியப்பெற்றிருக்கின்றது. அவரது திடத்தன்மை பெருங் குன்றங்களுக்கும், காம்பீர்யத்தைக் கடல்களுக்கும், காந்தியைக் கதிரவனுக்கும் பகுத்திடுபவர்போல் காணப்படுகிறார். இம்மஹான் தயாரஸப்பெருக்கு, ஸம்ஸாரக் கடலைக் கடக்கும் சேது, ஆசைகளென்னும் கொடிகளின் அடவிக்குக் கோடரி, அஞ்ஞானமாகும் அந்தகாரத்திற்கு ஆதித்தன். இவருடைய அருட்பார்வை என்மேல் உதயமாகும் வரையில் அவருக்கு முன் அஞ்சலி யஸ்தனாய் நிற்கிறேன்.

முனிவர்.—(கண்ணை விழித்து) இராஜபுத்திரா! நீ இவண் நாடிவந்த குறிப்பை யான் உணர்ந்தேன். நீ நினைத்த போது உனக்குமுன் ஓர் அஸ்வம்தோன்றும். அதின் மேல் நீ ஆரோகணித்து நீ செல்லவேண்டிய இடத்தை நினைத்த மாத்திரத்தில் ஆகாயமார்க்கமாய்ச் சென்று அவ்விடத்தி லுன்னைச் சேர்க்கும். ஆனால் உனக்குப்

பெரிய ஆபத்து சம்பவிக்குங் காலத்தில் அவ்வஸ்வம் உன்னைவிட்டகலும். இனி உன் தேசத்தை நாடிச் செல்வாயாக. (கண்ணை மூடிக்கொள்ளுதல்.)

பூபாலன்.—(தனக்குள்) சர்வாந்திரியாமியாகிய பகவானுடைய கிருபையால் யான் நாடிவந்த கோறிக்கை ஈடேறின. இனி என் நகரஞ்சென்று தாய், தந்தை, மனைவி, சிநேகிதன் முதலானவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு பூபிரதட்சணம் செய்ய சித்தப்படுவேன்.

2-வது அத்தியாயம்.

பூபாலன் பூபிரதட்சணஞ்செய்யத் தன் தந்தையின் அனுமதிப்பெறல்.

கீர்த்திசீலன்.—அமாத்தியவர்யா ! எனக்கோ வயதாய் விட்டபடியால் இனியான் இராஜ்யபாரத்தைச் சுமக்கக்கூடாமலிருக்கிறது. என் குமாரனாகிய பூபாலனும் தக்கவயது வந்தவனா யிருக்கிறான். ஆகையால் அவனுக்கு முடி சூட்டி அவனுக்கு சினேகிதனாயும் உம்முடைய குமாரனாயுமிருக்கிற சுபுத்தியை மந்திரியாகச் செய்ய எண்ணங்கொண் டிருக்கின்றேன். ஆகையால் இதைப்பற்றித் தாங்கள் என்ன தெரிவிக்கிறீர்.

மந்திரி சுகநாசன்.—அண்ணலே!

> "முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
> கிறையென்று வைக்கப்படும்."

என்பதுபோல ஈஸ்வரன் எறும்புகடை யானை முதலாகவுள்ள எண்பத்து நான்கு லக்ஷம் யோனி பேதமான சகல ஜீவராசிகளையும், அதற்குத் தக்க உணவும், இடமும், செயலும் அளித்து, ஒவ்வோராத்துமாவிலுந் தானே பரமாத்துமாவாக விருந்து எப்படிக் குறைவின்றி இரக்ஷித்து வருகின்றானோ, அவ்வண்ணமே நட்பினர், பகைவர், உறவினர், அயலார், உயர்ந்தோர், இழிந்தோரென்னும் பேதமின்றி தன்னுடைய ராஜ்யத்திற்குட்பட்ட சகல ஜனங்களுக்கும் வேண்டிய உதவிசெய்து, யாதோர் வித்தியாசமுமின்றி, ஒவ்வொருவரையும் தன்னைப் போலவே பாவித்துச் சிறு

குழந்தைகளுக்கும் தாய் தந்தையரெனப் பழிபாவங்க ளுக்கஞ்சி செங்கோல் செலுத்திவந்தீர். தங்களைப்போலவே தங்களுடையச் செல்வக்குமாரரும் அரசாண்டு வருவார். ஆயினும் அவரை இங்கழைத்து அவருடைய எண்ணத் தைத் தெரிந்து, பிறகு யோசிக்கலா மென்று எண்ணுகி றேன்.

கீர்த்திசீலன்.—நல்லது அப்படியே என்குமாரனை இங்கழை த்து அவனெண்ணத்தைத் தெரிந்துக் கொள்ளுகி றேன். (குமாரனை வரவழைத்தல்) குழந்தாய்! பூபாலா! யான் உன்னை இச்சபையின்கண் வரவழைத் தக் காரணம் யாதெனில், நானோ விர்த்தாப்பிய தசை யையடைந்தேன். இனி இப் பூபாரத்தைத் தாங்க என்னாலாகாது. ஆகையால் நீ இப்போது தக்க பக்குவத்தையடைந் திருக்கிறபடியால் நீ முடி சூட் டிக்கொள்ள வேண்டுமென்பதே எனக்கும் இச் சபையிலுள்ளோருக்கும் கருத்தாகும்.

பூபாலன்.—பிதா! தாங்கள் தெரிவித்த துண்மையே யாயி னும், யான் உலகியல்பறியாது இப்பூபாரத்தை வகிப்ப தெங்ஙனம்? ஆதலின் என்மீது மனமிரங்கி விடை யளிக்கின் யான் பூபிரதக்ஷணம் செய்து உலகியல்ப னைத்தையு மறிந்து திரும்பிவந்தவுடன் தங்களெண் ணத்தின்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன்.

ம. சுகநாசன்.—அரசே! தம்முடைய விருப்பத்திற்கும் தமது குமாரருடைய நோக்கத்திற்கும் சரியா யிரா விடினும், பூபாரத்தை ஏற்றுக்கொள்ளுமுன் உலகியல் பறிவதே மேலானது. எப்படியெனில், ஒருபுருஷராசு

தன் பரிவாரங்களுடன் காட்டின்வழியாய்ச் செல்லும் போது, ஓர் வேடனால் வலைவிரிக்கப்பட்டு அதன்மேல் தெளிக்கப்பட்டிருந்த தானியத்தைப்பார்த்து, அப் புறுவரசு தன் பரிவாரப்புறுக்களுடன் "இந்த நிர்மா னுஷியமான காட்டில் தானியமெப்படி வரும்? யாரா வது கொண்டுவந்து போட்டிருக்க வேண்டும். இது நமக்குத் தெரிந்தாலல்லாமலிதைப் பக்ஷிக்கலாகாது. ஆகையால் ஆலோசனைசெய்து யாதொன்று செய்யத் தக்கதோ வதைச்செய்யவேண்டும்" என்று சொல் விற்று. இதைக்கேட்ட ஒருபுறு கர்வத்தோடு "இப்படி யாலோசித்தா லோரிரையு நமக்ககப்படாது. மேலும் வெட்கப்படுகிறவன், பொறுமையுள்ளவன், சந்தோ ஷப்படாதவன், குரோதமுள்ளவன். நிராச்சந்தேக முள்ளவன், பிறர்பொருளாற் சீவிக்கிறவன் இவ்வாறு பேருந் துக்கத்தையே யனுபவிப்பார்கள்." என, இதைக்கேட்டுப் புறுக்களெல்லாம் தானியத்தைத் தின்னும்பொருட்டுப் போய் நிலத்திலிறங்கி வலையி லகப்பட்டன. புறுவரசு இதைப்பார்த் தெல்லாரு மென்சொல்லைக் கேளாமற்போனார்கள், இப்போது நானொன்றியாயிருந்து பயனில்லை, என்று சொல்லி அதுவும் வலையில் வந்தகப்பட்டது. வேடன் பக்ஷி கள் வலையில் சிக்கிக்கொண்டதைப்பார்த்து அதனி னிடத்திற்கு வரத்தொடங்கினான். அதைப் புறுக்கள் கண்டு. அரசனைப்பார்த்து "நாங்கள் நீசன் புத்தி யைக்கேட்டுன்னை யவமானம் பண்ணினோம். அதன் பலன் பிராப்தியாயிற்று" என, அப்போது புறுவரசு "இப்போதிதைச் சொல்லிப் பலனென்ன? இதற் கோருபாய மிருக்கிறது, எல்லோரும் வலையோடுகூட

வொருமிக்கப்பறந்து வேறிடத்திற்குப் போகவேண்டும், அப்படிச்செய்தாற்றான் பிராணனைக் காப்பாற்றலாம்'' என, இதைக்கேட்டவுடனே யெல்லாப்பறவைகளும் வலையோடேகூடச் சடுதியில் பறந்து போயின. அதைப் பார்த்த வேடன் தூரத்திலிருந் தாச்சரியப்பட்டு இவைகளெல்லாமொரே மனதாய் வலையைக் கொண்டு போயின. ஆயினுமிவைகளி லொன்றுக்கொன்று சண்டை நேரிடும். அப்போதென்கையி லகப்படுமென நினைத்துக்கொண் டவைகளின் பின்னே போகும்போது புறாக்கள் அவன் கண்ணுக்கு மறைந்துபோய் விட்டன. பிறகவன் வருத்தப்பட்டுத் திரும்பி வந்துவிட்டான். புறாவரசு தன் கூட்டத்தைப்பார்த்து "கண்டகிநதி தீரத்திலிருக்கும் சித்திர வனத்தில் என் சிநேகனான ஓர் எலியரசனிருக்கின்றான். அவன் பல்லினாலே நம்முடைய வலையை யறுப்பான். அங்கே நடவுங்கள்'' என, இதைக் கேட்டபடியே யெலியரசன்வளையண்டை யிறங்கின. எலியரசன் புறாக்களின் சப்தத்தைக்கேட்டு வளையினின்றும் வெளிவந்து புறாவரசரின் அவஸ்தையைப்பார்த்து மிகவும் துக்கித்து, "மித்திரா! எல்லாரைக் காட்டிலும் நீ சமர்த்தனாமே. உனக்கிப்படிப்பட்ட காரியமெப்படி நேரிட்டது?'' என, புறா "எந்தகாலத்திலெதுநடக்குமோ வது நடக்கும்; விதிவலிது, அதன்முன் யாருடைய வுபாயம் நடக்கும்? கடல்பெருகி மேலிட்டாலதற்குக் கரையேது?'' என எலியரசன், "ஆம், நூறு நாழிகை வழித்தூரத்தி லிருந்தே வஸ்துக்களைத் தெரிந்துகொண்டு போகிற நீ இன்றைக்கு வேடன் வலையிற் பாராமற் சிக்கிக்கொண்டாயே பார். சந்திர சூரியர்

களுக்கு ராகு கேதுக்களாற் பீடைவருதலும், யானை யும் பறவையும் பாம்புந் கட்டுப்படுதலும், புத்திசாலி களுக்கும் வருமைவருதலுந் தெய்வத்தின் மகிமையே யல்லாமல் வேறல்ல'' என்று சொல்லி புருவரசு கட் டுண்டிருக்கிற வலைக்கயற்றை யறுக்கத்தொடங்கிற்று. அப்போது புருவரசு, மித்திரா! முன்னே யென் பரி வாரத்தினுடைய கயற்றையறுத்துப் பிறகென் பா சத்தைத்துணி'' எனக்கேட்க, எலி ''என்பல்லு மிகவு மெதுவானது. அதற்குப் பலமுங்கொஞ்சம். இத்தனைப் பெயருடைய பந்தனைக ளெனக்கெப்படி யறுபடும்? உன் தளையை யறுத்துப் பின்னென் சாமர்த்தியத்துக்குத் தக்கதாக வவர்களுடைய தளை யையு மறுப்பேன்'' என, எலியரசு, ''தன்னைக் காப் பாற்றிக்கொண்டு தன் பரிவாரங்களைக் காப்பாற்ற வேண்டும். அறம் பொருளின்பம் வீடாகிய விவை களுக்குப் பிராணன் முக்கிய சாதன மாகையால் அதைக்காப்பாற்றி னெல்லாவற்றையுங் காப்பாற்றி னாற் போலாகிறது'' எனப் புருவரசு, ''இந்த நீதி சரி தான். ஆயினு மிப்படிப்பட்ட வேதனையினின்றும் பாலனம் பண்ணுகிறதற்கல்லவோ என்னை இவர்கள் ராஜாவாக நினைக்கிறார்கள்? ஆகையால் என்பிராண னிடத்திலிச்சையை விட்டிவர்களைப் பிழைப்பி'' என அதைக்கேட்டெலி, ''நீ பரமசாது, அடுத்தவர்களை யாதரிக்கிறவனா யிருக்கிறாய். எஜமானிடத்தில் விசு வாசமாயிருக்கிற சேவகனும், சேவகனிடத்தில் பிரீதி யாயிருக்கிற வெசமானனுஞ் சுகமடைவார்கள்'' என்று சொல்லி, எல்லாவற்றின் பாசங்களையு மறுத்துப் புருவரசனுடைய கட்டையுஞ்சேதித்தது. ஆகையால்

பறவை முதலிய ஜந்துக்களுங்கூட அரசநீதியை யுணர்ந்து நீதி செலுத்துகின்றன. அதுவும் அனு போகத்தினாலேயே பெறவேண்டியிருக்கிறது. ஆகை யால் தங்கள் குமாரர் தெரிவித்தபடி உலக இயற் கையை யறிந்து, பின் அரசகாரியத்தை நடத்துவது மிகவும் சிலாகிக்கத்தக்கதான படியால் அவருக்கு விடைகொடுத்தனுப்புவதே யுக்தமாகத் தோன்று கிறது. என் குமாரனாகிய சுபுத்தியையும் கூட அனுப்ப உத்தேசித்திருக்கிறேன்.

கீர்த்திசீலன்.—தனயா! உன்னைப் பிரிந்திருப்பதினால் எனக் குண்டாகும் வருத்தத்தைவிட நீ உலகியல்பறிந்து வர பூசஞ்சாரம் செய்துத் திரும்புவதானது எனக்கு சந்தோஷத்தை யுண்டாக்குகிறது. பூசஞ்சாரம் செய் வதினால் அநேக ஆபத்துகள் சம்பவிக்கலாம், உன் புத்தி சாமர்த்தியத்தினால் அவைகளை வென்று கால தாமதம்செய்யாமல் விரைவில் வரக்கடவாய். பெரும் முயற்சி செய்பவனானாலும் ஈசன்செயலை மாற்றிவைப் பதியலாது; யாண்டரால் செப்பவியன்ற தெய்வ ளமேவா அவ்வளவும் அனுஷ்டிக்கக்கடவாய்.

"மகன் றந்தைக்காற்று முதவியிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ்சொல்"

என்றபடி என்பெயருக்கு கீர்த்திகொண்டுவர வேண்டுமா னால் காலம், இடம், தேசம், வர்த்தமானம் முதலியவைகளை ஓர்ந்து மனவலி குன்றாமல் நீ சந்திக்கும் மன்னவர்களது நோக்கத்திற் கிணங்க நடந்து மேன்மையான கீர்த்தியுடன் திரும்புவாயாக. நினது தோழனாகிய சுபுத்தியையும் உட னழைத்துச் செல்லக்கடவாய். [சுபுத்தியினிடம் செல்லுதல்.]

சுபுத்தி.—தோழா! நீ கொண்டிருக்கும் எண்ணம் ஏற்கெனவே என் தந்தையாலுணர்ந்தேன். நானும் உன்னுடன் பூசஞ்சாரம் செய்ய சித்தப்படுத்திக்கொண்டிருக்கிறேன். ஆனால் பிரபஞ்ச முழுவதும் சுற்றி, அரசவளப்பத்தையும், உலகியல்பையும் அறியவேண்டுமானால் சமுத்திரங்களையும் காடுகளையும் கடக்கக்கூடியதா யிருக்கின்றதே. அதிலும் நம் ஆயுட்காலமெல்லாம் போக்கினாலும் உலகமனத்தையும் சுற்றி வருவதற்குக் காலம் போதுமான தல்லவே. இப்பெரியதோர் காரியத்தை எவ்வாறு முடிப்பதாக உத்தேசித்தனை? உன்னெண்ணத்தை நினைக்குந்தோறும் என் மனந் திடுக்கிடுகின்றது.

பூபாலன்.—நண்ப! நன்கு மொழிந்தனை. நான் இக்கஷ்டங்களனைத்தும் முன்னதாகவே யோசித்து அதிசீக்கிரத்தில் இப்பூமண்டலத்தைச் சுற்றி வருவதற்காக தவசிகளின் கிருபையால் ஓர் அஸ்வத்தைப் பெற்றிருக்கிறேன். சமுத்திரவழியானாலும் கரைவழியானாலும் அது நம்மைத் தூக்கிக்கொண்டு அதி சீக்கிரத்தில் செல்லும் சாமர்த்தியத்தை யுடையது. நான் என் மனைவியிடஞ் சென்று விடை பெற்றுக்கொண்டு இப் பட்டணத்திற்குச் சமீபத்திலுள்ள நந்தவனத்திற்கு வந்து சேருகிறேன். நீ காலதாமதஞ் செய்யாமல் அவ்விடம் வந்திரு.

3-வது அத்தியாயம்.

சுந்தரவல்லியின் அரண்மனை.

பூபாலன் உலகியல்பறிய பூபிரதட்சணஞ் செய்ய நிர்மானித்துத் தந்தையிடம் விடைப்பெற்றுச் சென்ற சங்கதியை தோழிகளாலறிந்த சுந்தரவல்லி அதிக சோகமுற்றவளாய் தன் கணவனாகிய இராஜகுமாரன் தன்னைத் தனியாய் விட்டுப் போகிறபடியால் ஆபரணமேதும் அணிந்துக்கொள்ளாதவளாய் அம்புய மலர்போன்ற தனது வதனத்தை இடது கரதலத்தில் சாய்த்து வைத்துக்கொண்டு, இடைவிடாது சொரியும் கண்ணீர்ப்பெருக்கினால் வெண்பட்டாடையும் நனைய, வெகு நெருக்கமான சிறியதோர் மஞ்சத்தின்மீது ட்கார்ந்தபடி அழுதுக்கொண்டிருந்தாள். பணிவிடை செய்பவர் பலர், சிந்தையுடன் கண்களசையாமல் துயரத்தினால் வாய்ப்பேச்சின்றி வரிசையாய்ச் சூழ்ந்திருந்தனர். அந்தப்புரத்துக் கிழவிமார்கள், ஆங்கு சற்று தூரத்திலிருந்துக் கொண்டு, அவளைத் தேற்றிக்கொண்டிருந்தனர். அவளது தலையின் மயிர்கள் கோதி முடியப்படாமலே கலைந்திருந்தன. இராஜகுமாரன் வருவதைக் கண்டு, எதிர்கொண்டெழுந்திருக்கும் தன்மனைவியை பூபாலன் அதே மஞ்சத்தில் உடனே உட்காரச்செய்து, தானும் உட்கார்ந்து, கண்ணீர் பெருகுவதற்குப் பொருந்திய காரணமறியாமல், மிகவும் திகிலடைந்து, தனது கரத்தினால் அவள் கன்னங்களிரண்டிலும் உதிரும் கண்ணீர்த்துளிகளைத் துடைத்துவிட்டு, மனைவியை நோக்கி பூபாலன் இவ்வாறு கூறலானான்:—

பூபாலன்.—“தேவி! மனந்தனில் பெருந்துயரம் நிறைந்து வாய்திறவாமலே நீ ஏன் அழவேண்டும்? உனது இவ்

விமைகள் கண்ணீர்த் துளிகளை, நல்முத்துச் சரங்களைத் தொடுப்பது போல் உதிர்க்கின்றனவே! மெலிந்து அழகிய மத்தியபாகத்தை யுடையவளே! நீ ஆபரணங்களை யணிந்துக்கொள்ளாம லிருப்பதேனோ? இரு செந்தாமரை மலர்களில் இளம் வெயில் விழுந்தாற் போல், உன் பாதங்களிரண்டிலும் செம்பஞ்சுக் குழம்பு ஏன் இடப்படவில்லை? முத்துச்சரமணிந்து கண்டத்தை யலங்கரிக்காமலிருக்கக் காரணம் யாது? ஓ மானினி! கோரோசனைப் பொட்டிடாமலும், தலைமயிரைச் சேர்த்து முடியாமலும் இருப்பதேன்? தேவி! என்மீது அருள்புரிந்து, துயரத்தின் காரணத்தை மொழிந்து விடுவாயாக. நான் எவ்விஷயத்திலேனும் அபராதம் செய்ததுண்டோ? சுந்தரி! மனத்துயரத்திற்கு முகாந்தர மின்னதெனக் கூறுவாயாக.

சுந்தரவல்லி.—நீர் உலகவியற்கையை யறிய பூசஞ்சாரம் செய்யப்போகிறதாய் தங்களுடைய தந்தையிடம் விடைபெற்றுக்கொண்ட சங்கதியை என் தோழிகளாலுணர்ந்தேன். எனது உடலும் உயிரும் போன்ற காதலரே! உடலைவிட் டுயிர்பிரிந்தா லவ்வுடலுக்கு என்ன மேன்மையுளது? தாங்கள் என்னைத் தனியாய் விட்டுப்போன பிறகு யானிங்கிருந்து செய்யுங் காரியம் யாது? தேசசஞ்சாரம் தாங்கள் செய்யும்போது பலவகையிலும் கஷ்டங்க ளனுபவிக்கவேண்டி வரு மல்லவா? அவ்வித கஷ்டங்களுக்கும் நான் உடனிருந்து அனுபவிக்காமல் இவ்விடமிருந்து சுகத்தை யனுபவிக்க மாட்டேன். அப்படிச் செய்வது பதிவிரதைகளுக் கடுத்ததல்ல. புருடனைப் பிரிந்த பூவை விவளென உலகோர் எண்ணும்படி நான் உம்மைப்

பிரிந்திரேன். தம்மோடுகூடவே வந்து தங்களுடைய சுகதுக்கங்களைப் பகுத்தனுபவிப்பதே என் கருத்து. ஆகையால் அடியாளையும் தங்களுடன்கூட அழைத்துக்கொண்டு போக வேண்டுகிறேன்.

பூபாலன்.—பிரியே! நீ இதுவரையில் கஷ்டங்களை யனுபவியாதவளானதால் பிரயாணத்தில் ஏற்படும் அல்லல்களுக்குப் பாத்திரமாவாயே யென்று உன்னை இவ்விடமே விட்டுப்போக உத்தேசித்தேன். நீ கட்டாயம் என்னுடன் கூட வர உன் மனதைத் திடப்படுத்திக்கொண்டமையால் உன்னிஷ்டத்திற்கு யான் தடை செய்யவில்லை. எனது நண்பனுன சுபுத்தியும் பிரயாண சித்தனாய் நகர்புரத்திலிருக்கும் நந்தவனத்தில் நமக்காகக் காத்திருப்பான், ஆகையால் உடனே பிரயாணப்படவேண்டும். [இருவரும் நிட்கிரமித்தல்.]

பூபாலனும், சுந்தரவல்லியும் நகரைநீங்கி நந்தவனஞ் சேர்ந்தார்கள். மந்திரி குமாரனுன சுபுத்தியும் அவ்விடம் முன்னதாக வந்திருந்தான். உடனே பூபாலன் அஞ்சலியஸ்தனாய் முனிவரை மனதில் தியானித்து, தனக்கு அருளிய அஸ்வத்தை நினைத்தான். உடனே இருபுறமும் கனகமயமான கடிவாளங்களையுடையதும், அகில அஸ்வங்களையும் அதிசயிக்கத் தக்கதான ஓர் அஸ்வம் அவ்விடம் வந்தது. அது ஒரு புருடன் தனதுபுயத்தை உயரத்தூக்கித் தொடக்கூடிய அவ்வளவு உன்னதமான முதுகை யுடையதாகவும், ஜடாக்குழியைப் படபடத்து நடுங்கச்செய்வதும் கர்ணகடோரமுமான அடிக்கடி கனைக்கும் தொனியினால் பொய்யாகவே வேகசாலியென்று கர்வங்கொண்ட கருடனை வெருட்டுவதுபோல் தோற்றுவதாயும் இருந்தது. மேலும்

அதன் கால்கள் செதுக்கி, ஒழுங்காக்கப்பட்டதுபோலவும், மார்பு விசாலமாக்கப்பட்டது போலவும், முகம் மழமழ வென்று மெருகிடப்பெற்றது போலவும், வேகத்தில் கருத் மானுக்கு எதிரிபோலவும், உலகமனத்தையும் கொண்டு விலைமதிக்கத் தகுந்ததாகவும் காணப்பட்டது. இதுகாறும் தான் பார்த்திராததும், இலட்சணங்கள் யாவும் அமையப் பெற்றதுமான அந்த அஸ்வத்தினது அதிசயிக்கத்தக்க வடிவத்தைப் பார்வையிட்டதும் வெகு தீரத்தன்மையனான பூபாலனது இருதயத்தையுங்கூட ஆச்சரியமானது பரி சிக்கலாயினது.

பூபாலன்.—(சுபுத்தியை நோக்கி) நண்ப! வாசுகியைச் சுற்றிக்கட்டி மந்தரகிரிகொண்டு வெகு விரைவுடன் சுழற்றிக் கடல் நீரைக்கடைந்து, இந்த அஸ்வரத்தினத்தைப் பெறுது தேவாசுரர்கள் வேறென்ன இரத்தினத்தைக் கண்டெடுத்தார்கள்? உச்சைச்வரஸ் என்னும் அஸ்வத்தைக் கண்டு வியப்புற்றமனத்தை யுடையவனாகச்செய்து, மஹேந்திரனை சமுத்திரம் வஞ்சனையல்லவா செய்துவிட்டது. பகவானான ஸ்ரீமந் நாராயணமூர்த்தியினுடைய கண்களுக்கு இவ்வளவு காலமாகவும் இவ்வித அஸ்வம் புலப்படாமல் போய்விட்டதல்லவா? ஏனெனில், அவர் இன்னமும் கருடன்மீது ஏறும் விருப்பத்தை விட்டாரில்லை. முனிவர் எனக்கு தெரிவித்தபடி இக்குதிரை நம் மூவரையும் சுமந்துக் கொண்டு அதிவிரைவில் ஆகாயமார்க்கமாய் போகக் கூடியதா யிருக்கிறது'' என்று சொல்லி அக்குதிரையின் முன்பக்கத்தில் சுந்தரவல்லியும், மத்தியில் பூபா

லனும் பின்னால் சுபுத்தியுமாக ஆரோகணித்தார்கள். உடனே அக்குதிரை வாயுவேகமாகச் செல்லத்தொடங்கிற்று.

பூபாலன்.—எனதாருயிர்க்காதலி! இக்குதிரை எவ்வளவு வேகமாய்ச் செல்லுகின்றது பார்த்தனையா? இதோ நமக்கெதிரில் தோன்றும் வனத்தின் வனப்பே வனப்பு! முன்பு பஞ்சவடி யென்னும் ஓர் இடத்தில் தசரத சக்கரவர்த்தியின் சொற்களைச் சிரமேற்கொண்டு ஸ்ரீராமர் அகத்தியமா முனியின் அடிபணிந்துக் கொண்டு இலட்சுமணரால் அமைக்கப்பெற்ற அழகிய பர்ணசாலையில் சீதையுடன் சுகமாகச் சிலகாலம் வசித்த விடமிதுதானோ வறிகிலேன்! அதோ பார் ஓர் பங்கயப் பொய்கை காணப்படுகிறது. அகத்திய முனிவர் கடல் நீரனைத்தையும் குடித்துப் பின்பு உமிழ்ந்து அந்நீரை இம்மடுவில் பகுத்து விட்டனர் போலும். அக்குளந்தனில் தாமரைமலர்களது மதுவையருந்தி மதப்பட்ட காரன்னப்பேடுகள் கலகல வென்று அழகாய் ஆர்ப்பரிக்கின்றன. காற்றினால் அசைக்கப்பெற்ற அலைகளின் உச்சியிலிருந்து உதிக்கும் திவலைகள் மாரிகாலத்தைத் துவக்குவனபோல் தோற்றுகின்றன. ஒருபுறம் இறங்கும் இருஷி ஜனங்கள் ஜலம் நிரப்பும் கமண்டலங்களிலிருந்து தோன்றும் இனியதொனியால் மனோஹரமாயிருக்கின்றது. நீர்வாழும் தபோதனர்களால் தமது தேவதைகளின் அர்ச்சனைக்காக உபயோகிக்கப்பெற்ற பூக்களையுடையதும், கொடிவீடுகளிலிருந்து கூத்தாடும் மயில் கூட்

டங்களுடன்கூடியதும், பலவகையான புஷ்பங்களின் பரிமளங்களைப் பரவச்செய்வதுமான வனத்தின் வரிசையால் நாற்புரமும் அத்தடாகத்தின் தடம் தழுவப்பட்டிருக்கிறது. அதோபாராய்! அனவரதமும் தண்ணீரருந்த வருகிறவைகளான மிகுந்த சேற்றினால் அழுக்கடைந்த அங்கங்களையுடைய காட்டானைகள் இப்பங்கயத்தை மற்றொருமா கடலென்று மயங்கித் தண்ணீரெடுக்க இழியும் கார்முகில்கள்போற் காணப்படுகின்றன. இதோ வராஹங்கள் கடித்து மெல்லும் மேன்மையான கோரைக்கிழங்குகளின் கந்தம் கமழுகின்றது. சிங்கத்தினது நகங்களால் கும்பஸ்தலங்கள் பிளக்கப்படுவதுபற்றி கீச்சிடும் குஞ்சரங்களது கூக்குரலைக்கேட்டாயா? அதோபார், காட்டெருமைக்கடாக்கள் கொம்புகளின் முனைகளாற் கொந்திய புற்றுகளிலிருந்துப் புழுதி கிளம்புகின்றது. அங்குமிங்குமாய் அலைந்துத் திரியும் வேடுவக்கூட்டத்தைப் பார்த்தனையா? இடைவிடாது பாணங்களை மாரிபோல் சொரிந்து ஸ்ரீராமபிரானால் இயமனுக்கு இறையாக்கப்பட்ட கரதூஷணர்களது சேனைகளின் சமூஹமானது ஸ்ரீராமபிரான்பால் தீங்கெண்ணிய தோஷத்தால் பிசாசங்களாகப் பிறந்து வந்தவர்கள் போலப் புலப்படுகிறார்கள். அவ்வேடர்கள் அம்புகளாலடித்த கேசரியினுடைய கர்ஜனையினாலும், வேட்டைநாய்கள் வெகு வேகமாக அவயவங்களைக்கடித்துப் பிடுங்குவதால் திகிலடைந்து அங்கு மிங்கும் வெருண்டு விழிக்கும் கருவிழிகளையுடைய கலைமான்களினது கருணை புரியக்கூடிய கூக்குரலாலும், விருக்ஷங்களின் உச்சிகளிலிருந்து உயரக்கிளம்பி வெகு பரபரப்

புடன் பறக்கும் பறவைகளின் ஆரவாரத்தாலும் இவ்வடவியெல்லாம் அசைக்கப்பட்டதுபோல் காணப்படுகிறது. காதலி! இதோ சமுத்திரதீரம் வந்துவிட்டோம். இன்னும் சற்றுநேரத்திற்கெல்லாம் அக்கரை சேருவோம்.

சுந்தரவல்லி.—நாதா! என்னை நகரத்தின்கண்ணே விட்டுத் தாங்கள்மாத்திரம் வந்திருப்பீராகில் இவ்வதிசயங்களையெல்லாம் நான் எப்படி பார்க்கக்கூடும்? ஆஹா! இவ்வாழியில் அலைகள் படிப்படியாயுயர்ந்து கோஷித்து கரையில்வந்து மோதி முத்துக்களையும் இரத்தினங்களையும் கரையிலொதிக்கி, பின் இச்சமுத்திரத்திலேயே சென்றுவிடுகின்றது.

பூபாலன்.—ஆம். இத்திவலைகளை நோக்கினவுடன் திருமழிசைப்பிரா னருளிச்செய்த.

தன்னுளே திரைத்தெழுந்தரங்க வெண்டடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந்தடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திருந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே''

என்கிற பாசுரம் ஞாபகத்திற்கு வருகிறது. மாதே! அதோ பார், மச்சங்களானது உன் கண்களைப் பார்த்து தன்னினமென்று நினைத்து ஜலத்தின்மேலெழுந்துபார்த்து உடனே உனது புருவங்கள் கூரிய வேலாயுதங்கள்போல் அவைகளுக்குப் புலப்பட்டவுடன் ஜலத்தில் மூழ்கி ஒளித்துக் கொள்ளுகின்றன. தவிர ஜலமானது நிர்மலமாய் உள்ளிருக்கும் வஸ்துக்களும் தெரியக்கூடியதாயிருக்கிறது.

[சுந்தரவல்லி சற்றுக்குனிந்து பார்க்கவும் அஸ்வத்தின் முதுகின்மீதிருந்து நழுகி சமுத்திரத்தில் விழுந்தாள். உடனே சுபுத்தி எட்டிப்பிடிக்கப் பிரயத்தினப்பட்டதும் அவனும் சமுத்திரத்தில் விழுந்துவிட்டான்.]

பூபாலன்.—ஆ! என் ஆருயிர்க்காதலி! ஆ! என்பிரியநேசா! இனி யென்ன செய்வேன்? இருவரும் இச்சமுத்திரத்தில் விழுந்து ஆழ்ந்து விட்டனரே! கிணறு வெட்டப் போகப் பூதம் புறப்பட்டதுபோலாயிற்றே. நான் பூ பிரதட்சணம் செய்து உலகியல் அறியப் புறப்பட்டது இதற்குத்தானோ? ஆ! என் கண்மணி! ஆ! என் மனோநாயகி! எவ்வாறுன்றன் பிரிவைச் சகிப்பேன். என் மனதுக்கிசைந்த மயிலே! உன்னையான் என்று காண்பேன்? நண்பா! உன்னை விட்டுப்பிரிந்து நான் எங்கென்று செல்வேன்? ஆ! என் பிரிய சகி! நான் கண்ணிழந்தவனேனே! திசைகள் யாவும் என்றனக்குப் பாழடைந்து விட்டனவே! நான் உயிர் பிழைத்திருப்பது இனி உபயோகமற்றது. இவ்வுலகமெல்லாம் எனக்கு இனி இன்பமில்லாதவை. இனி எவருடன் நடமாடுவேன்? எவரோடு சல்லாபம்செய்வேன்? பலவகையினும் பரிஹரிக்கக்கூடாத ஆபத்து வந்து நேர்ந்ததே. இப்பொழுது யான் செய்யத்தகுந்தது யாது? நடக்கவேண்டிய விதம் என்ன? எத்திசைக்குப் போகலாம்? கதியென்ன? உபாயம் யாது? புகலிடம் யாது? எந்த சாமர்த்தியத்தினால் எவ்வித யுக்தியினால் எந்தெந்த வகையினால், எந்த ஆதாரத்தினால், எந்த அறிவால், நான் என் காதலியையும் நண்பனை

யும் காணப்போகிறேன். ஏ! ஜெகதீசா! உன் திருவடியைத் தஞ்சமென்பதே தவிர வேறு எனக்கு ஒன்றும் தோன்றவில்லை.

" நீரகத்தாய்! நெடுவரையி னுச்சிமேலாய்!
நிலாத்திங்க ளுண்டத்தாய்! நிறைந்தகச்சி
ஊரகத்தாய்! ஒண்துறைநீர் வெஃகாவுள்ளாய்!
உள்ளுவா ருள்ளத்தாய்! உரகமேத்தும்
காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால்மன்னு
பேரகத்தாய்! பேராதென் நெஞ்சினுள்ளே!
பெருமானுன் திருவடியே பேணினேனே.

(அஸ்வத்தின் மேலேயே மூர்ச்சித்துச் சாய்தல்.)

A. Rangachari
10.7.23

4-வது அத்தியாயம்.

ஆழியில்விழுந்த சுந்தரவல்லி கரைசேர்தல்.

சுந்தரவல்லி,—ஆ ஹா ! இஃதென்ன இவ்வண்ணம் நேர்ந்தது? அநாதையாயினேனே! என் நாதர் என்பிரிவாற்றுமையினுல் என்னபாடுபடுகிருரோ. இவ் வாழியில் யான் தவறிவிழுந்தும் நான் முழுகிப்போகாவண்ணம் ஓர் துண்டுப்பலகை என்கரத்தில் தெய்வாதீனமாய் அகப்பட்டது. பிராணநாதா ! யான் தங்களிடம் யாதுபிழை செய்தேன் ? என்னுல் தங்களுக்குச் செலுத்தப்படாத கடமையாது ? தங்களுடைய எந்த ஆஞ்ஞையை நான் ஆதரிக்கவில்லை ? கிருபாநிதியாகிய கடவுள் ஏன் என்னைப் பிரிக்கவேண்டும்? ஐயோ ! அலைகளால் மோதுண்டு சரீரமெல்லாம் நடுங்குகின்றதே ! உம்மைப்பிரிந்தும் நான் இன்னும் உயிர் பிழைத்திருக்கின்றேனே. ஆ ! துரதிஷ்டசாலியான நான் அநியாயமாய் அழிந்துவிட்டேனே. இனி யான் என்னசெய்வேன்? சர்வவல்லமையும் வாய்ந்த விதியல்லோ மேலானது ? தெய்வச்செயலோ மிகவும் வலுவானது. வெகு கடோரத் தன்மையான பாழுந் தெய்வத்தின் பொல்லாத செயல்களோ, சுபாவமாகவே மிக மனோஹரமாயுண்டான பிரீதியை வெகுநாட்கள் நீடித்திருக்க ஸகிப்பதில்லையே, புருடனுடன் உலகியல்பறிய சந்தோஷப்பட்டுவந்தயான் சடுதியில்

இக்கஷ்ட மனுபவிக்க சம்பவித்தது. ஆனது பற்றியே பெரும்பாலும் இன்பங்க ளெல்லாம் இயல்பாகவே குறுகியவைகளாதலால் திடீரென பங்கத்தைப் பெறு கின்றன. துன்பங்களோ மிகவும் நீடித்திருப்பவை யாதலால் நான் இக்கஷ்டத்தை யனுபவிக்கலானேன். ஆ! நாதா! தமது கதி எவ்வாறாயிற்றோ? அந்தப் பாழான அஸ்வம் தங்களை எங்கு கொண்டுபோய் சேர்த்ததோ? அல்லது என்னுடன் தாங்களும் இச் சமுத்திரத்தில் வீழ்ந்து அமிழ்ந்துபோனீரோ? அல் லது எவ்விடம் சேர்ந்து தவிக்கின்றீரோ? அல்லது யான் மாண்டு போனதாய் நினைத்து ஜீவனைத் துறந்தீரோ?

இவ்விதமாக சுந்தரவல்லி சோகமுற்று, மூர்ச்சை யடைந்து தான் கைப்பற்றியிருந்த பலகையின்மேல் சாய்ந்துவிட்டனள். அப்பலகை சுந்தரவல்லியுடன் அன்றிர வெல்லாம் அலைகளினு லலைப்புண்டு ஓர் தீவின்கரையி லொ திக்கிற்று. விடியற்காலமானதால் கானன்னங்களின் ஆர்ப் பரிப்பு சுந்தரவல்லியின் காதுகளுக்கு இன்பமாய் இசைந் தெழும்பியது. தனது கண்களை மெள்ள விழித்துப்பார்த்த னள்; அத்தீவிலுள்ள விருக்ஷங்களானது உதயகிரிச் சிகரத் தில் வந்துதித்த ஆதித்தனை நோக்கிப் பனித்துளிகளால் நன்கு நனைந்த தாதுக்களுடன்கூடிய புஷ்பங்களைத் தளிர்க ளாகும் அஞ்சலிகளைக்கொண்டு அர்க்கியம் விடுவதுபோல் உதிர்த்ததைக்கண்டாள். பிரகாசமான சோதியுடன் சூரிய னும் உதயமானன்.

சில ஆண்டுகளுக்குமுன் அங்கதேசத்துப் பிராம்ம ணர் ஒருவர் சம்சாரம் சார மற்றதென உணர்ந்து அன்பா

னது அதிக துன்பத்தைத் தரக்கூடிய தென்பதையும் ஆலோசித்து, இன்பங்களனைத்தும் திடீரென அழியுங்குண முடையவை யென்பதையும் நிச்சயித்து, தாய் தந்தையரை யுங் கவனிக்காது, உறவினர் அனைவரையும் பரிஜனங்களு டன் பரிஹரித்து, சிற்றின்பங்களி லிருந்து சித்தத்தைத் திருப்பி, இந்திரியங்களையும் இறுகக்கட்டி பிரம்மசார்ய விர தத்தைக் கைப்பற்றியவராய் இத்தீவுக்கு வந்து, மரவுரி தரித்து, தீவினை நிறைந்ததும், பல்லாயிரந் துன்பங்களுக்கு இருப்பிடமுமான இப்பாழுமுடலை பலவகையான நியமங் களாலும் உலர்த்தி, திரிகால ஸ்நானம் அனுஷ்டித்து, காடு களிலிருக்கும் காய் கிழங்கு தண்ணீர் இவைகளை யருந்தி, கடவுளை ஸ்மரித்துக்கொண்டு வருகிறார். அவர் அன்று காலையில் சமுத்திரத்தில் ஸ்நானம் செய்வதற்காக வந்ததும் சுந்தரவல்லி சோகத்தினால் களைத்து நிலத்தில் சாய்ந்திருப் பதைப் பார்த்து "இதென்ன புதுமை! இந்த நிர்மானு ஷியமான தீவில் இச்சுந்தரவதி எவ்வாறிங்கு வந்திருக்கக் கூடும்? அம்மா! நீயார்? இங்கு எவ்வாறு வந்தனை? உன் னைப் பார்க்கில் இராஜவம்சத்தில் சேர்ந்தவளாகக் காணப் படுகிறது. உன் வதனத்தைப் பார்த்தால் அதிக விசனத் தில் ஆழ்ந்திருப்பதாகத் தெரிகிறது. உன் விருத்தாந்தத் தைத் தெரியப்படுத்தினால் என்னால் கூடியவரையில் உனக்கு ஒத்தாசைச் செய்கிறேன்" என்றார்.

சுந்தரவல்லி.—ஆ! சர்வவல்லமையுள்ள கடவுளின் கிருபை யை நான் என்னவென்று புகழ்வேன்! ஆழியில் விழுந்த என்னை இறக்கவொட்டாமல் ஓர் துண்டு பல கையை எனக்குதவிசெய்து, கரைசேர வைத்து, பின் னும் என்னைக் காப்பாற்ற யோகி வடிவங்கொண்டு

என்முன் தோன்றினர்போலும். "ஐயன்மீர்! என்னைப்போன்ற துர் அதிர்ஷ்டசாலியும் உலகத்தி லுண்டோ? யான் தாராதேசத்து இராஜன்குமாரத்தி; என் பெயர் சுந்தரவல்லி; என்னை மணம் புரிந்தவர் விதர்ப்பதேசத்து அரகுமாரராகிய பூபாலன்; அவர் உலகியல்பறிய ஆசைகொண்டு மந்திரிகுமாரனுடன் என்னையும் அழைத்துக்கொண்டு ஓர் முனிவர் உதவிய அஸ்வத்தின்மீ தாரோகணித்து ஆகாயமார்க்கமாய்ச் செல்லுங்கால் யான் தவறி ஆழியில் விழுந்துவிட்டேன். ஓர் துண்டுப்பலகையின் உதவியால் தெய்வாதீனமாய் இங்குவந்து சேர்ந்தேன். தங்களைக் கண்டதும் ஆனந்தமடைந்தேன். எனதாருயிற் காதலர் எவ்வாறாயினரோ? யான் அறியேன்."

யோகீஸ்வரர்.—அம்மா! நீ துயருறாதே. எல்லாம் ஈசன் செயலின்படி முடியும்.

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றியது வரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாது முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல்."

என்றபடி விதியைக்கடக்க யாராலாகும்? ஆகையால் நீ உன் விசாரத்தை யொழித்து நற்காலம் வருமளவும் காத்திருக்கவேண்டும். ஓ பாக்கியவதி! உன் மனோ துயரத்தை ஆற்றல் செய்வதற்குப் போந்த திருஷ்டாந்தமாக ஓர் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக:—கனகபுரியின் அரசகுமாரியாகிய பத்மாவதிக்கு வயது நான்கானதும் தாய்தந்தைகளிருவரும் இறந்துபோனபடியால் மந்திரி, பிரதானி, படைத்தலைவர், குடிகள் முதலானவர்களேகோபித்து பத்மாவதிக்கு இளவரச பட்டங் கட்டினர்

கள். மந்திரி மதியூகி என்பவர் பிரதிநிதியாக அரசாண்டு வந்தார். பத்மாவதி சகலகலை வல்லவளாகி தேசகாரியங் களைச் செங்கோல் வழுவாது நடத்தும் முயற்சியைக் கைக் கொண்டு பட்டத்துரிமையை யடைந்து அரசாளும்படி யான போந்த பிராயம் வந்தது. ஆனால் துர்தசையானது செங்கோல் பிடித்து அரசாளுவதற்குப் பதிலாய் உன்னைப் போல் நிர்பாக்கியத்தை அநுபவிக்கும்படி நேர்ந்தது. எவ் வாறெனில், நெடுநாளைக்கு முன் தேசாந்தரம் சென்றி ருந்து இறந்துபோனதாகக் கருதியிருந்த பத்மாவதியின் சிற்றப்பனை குலசேகரன் என்பான் பட்டணத்திற்குள் பிரவேசித்து தனக்குச் சிநேகிதர்களா யிருந்த பல பெரிய மனிதர்களுடைய வொத்தாசையைக் கொண்டு, அரசைக் கபடமாய் அபகரிக்கவேண்டுமென்ற அபிப்பிராயத்துடன் குடிகளை பத்மாவதிக்கு விரோதிகளாக்கினான். இதைப் பற்றி மந்திரி மதியூகி எவ்வளவு பிரயாசைப்பட்டும் கடை சியில் குலசேகரனுக்கே ராஜமுடியைச் சூட்டி சிம்மாச னத்தி லேற்றினார்கள். குலசேகரன் அரசாட்சியைக் கைப் பற்றிக் கொண்டதும் பத்மாவதியைக் கபடமாய்க் கொல் லப் பிரயத்தனம் செய்துகொண்டிருந்தான். இதையறிந்த மந்திரி தன் மனைவியுடன் பத்மாவதியையும் அழைத்துக் கொண்டு இரவில் யாருக்கும் தெரியாமல் பிரயாணப்பட்டு சுவர்ணபுரியென்னும் நாட்டைச்சேர்ந்து தனக்குத் தெரிந் திருந்த சித்திரம் எழுதும் தொழிலை நடத்திக்கொண்டு ஜீவ னம் செய்துகொண்டு வந்தான்.

பத்மாவதி இராஜவம்சத்தில் அதிக செல்வாக்கி லிரு ந்தபடியால் மந்திரியினால் கிடைக்கும் பொருள் ஜீவனாம் சைக்கேபோதாமல் அதிக தாரித்திரிய தசையையடைந்து

வந்தாள். மந்திரி மதியூகி அதிக சாமர்த்தியமாய்ப் படம் எழுதுவதை அந்நகரத்திலுள்ளா ரனைவரும் பார்த்ததி சயித்து அரசனுக்கறிவிக்க அரசன் மதியூகியினுடைய வீட்டுக்குப் போய் அவருடைய சுகுணத்திற்காகவும் சாதுர்யமான பேச்சுக்காகவும் சந்தோஷமாக அவருடன் சம்பாஷித்துக்கொண் டிருந்தான். பத்மாவதி அரசனைப் பார்ப்பதற்காக அங்குவந்தனள். அரசன் பத்மாவதியைப் பார்த்து அவள்மேல் அதிக காதல்கொண்டவனாய்ப் பிரதிதினமும் அவ்வீட்டுக்கு வருவதும் போவதுமா யிருந்தான்.

மந்திரி மதியூகி அரசனுடைய கருத்தை அறிந்து பத்மாவதியைத் தன்னருகிலழைத்து, "அம்மா! அரசன் நல்ல பாலியனாகவும் சுந்தரமுள்ளவனாகவு மிருக்கிறான். உன்மேல் அதிக காதலுள்ளவனாகப் புலப்படுகிறது. அவன் அப்படி தன் காதலை உனக்குத் தெரிவிக்க சமயம் வாய்ந்தபோது உன்னைச் சகலருமறிய மணஞ் செய்துக்கொண்டு பட்டத்தரசியாக்க உடன்படுவானேயானால் நீ அவனுடைய எண்ணத்திற்கு உடன்படுவாயாக" என்று சொன்னார். அரசன் ஓர்நாள் பத்மாவதியினிடம் வந்து தன் காதலை தெரிவித்தவுடன் சகலருமறிய மணஞ்செய்துக்கொண்டு பட்டத்தரசி யாக்குவதாகவும் வாக்களித்தார். பத்மாவதி மிகவும் சந்தோஷமடைந்து தன் சரித்திரத்தை ஆதியோடந்தமாகத் தெரிவித்தாள். அரசன் பத்மாவதியை நோக்கி, "பெண்ணே! நீ எனக்குப் பட்டத்தரசியான பிறகு உன்னைத் துரோகம் செய்து ராஜ்ஜியத்தை உன்னிடம் அபகரித்துக்கொண்டு உன்னை கொல்ல நினைத்த குலசேகரனைப் பழிக்குப்பழி வாங்கி உன்னையே கனகபுரிக்கு இராணி யாக்குகிறேன்" என்று

சொல்லி சகலருமறிய பத்மாவதியைப் பாணிக்கிரஹணம் செய்துகொண்டனர். விவாகம் நடந்த மறுதினமே அரசன் படைத்தலைவர்களை கனகபுரிக்கு அனுப்பி பத்மாவதியைத் தான் மணஞ்செய்துகொண்டமையால் இனி பத்மாவதியே கனகபுரிக்கு இராணியாக வேண்டுமென்றும், அப்படி குலசேகரன் ஒப்புக்கொள்ளாவிடில் யுத்தத்துக்கு வருவதாகவும் குலசேகரனுக்குத் தெரிவிக்க ஏற்பாடு செய்தான். ஆனால் குலசேகரன் இச்செய்தியறிந்ததும் யுத்தத்திற்குத் தான் ஆயத்தமாயிருப்பதாகவும், அரசை பத்மாவதிக்கு ஒப்புவிக்க இயலாதென்றும் தெரிவித்ததின்மேல், அரசன் படைவீரர்களை ஒருங்குசேர்த்துக்கொண்டிருந்தான். இத்தருணத்தில் குடியானவனொருவன் அதிதீவிரமாக பத்மாவதியினிடம் வந்து, "அம்மா! குலசேகரன் சிலநாட்களாய் வியாதியுடனிருந்து பரலோகப் பிராப்தியானான்; கனகபுரியில் குடிகளனைவரும் உம்மைப் பட்டத்தாசியாக்க ஏகசிந்தையோடு நிர்ணயித்துக்கொண்டிருக்கிறார்கள்; இனி தாங்கள் காலஹரணம் பண்ணாமல் விரைவில் வரவேண்டும்" என்றான். பத்மாவதி இச்செய்தியை அரசனுக்கறிவித்ததும் யுத்தத்திற்காக ஆயத்தப்படுத்தின போர்வீரர்களை தம்தம் பதிக்கேகும்படி உத்தரவுசெய்து, மந்திரி மதியூகியை பத்மாவதிக்குப் பதிலாக கனகபுரியில் பிரதிநிதியாக விருந்து அரசாளும்படி ஏற்பாடு செய்தார். மந்திரி மதியூகியும் பிரயாணத்திற்குச் சித்தம் செய்துகொண்டிருந்தார்.

அம்மா, சுந்தரவல்லி! காலவித்தியாசங்கள் எவ்வாறு ஏற்படுகின்றனவோ? இதைச் சற்று கவனமாய் கேட்பாயாக.

பத்மாவதி வழக்கப்பிரகாரம் அரசனுடைய படுக்கையறைக்குச் சமீபமாய்ப் போகிறபோது அங்கு அகோர ரூபத்தை யுடைய ஆவேசமொன்று பத்மாவதிக்கு எதிரில் தோன்றி அவளைக் கூச்சலிடும்படிச்செய்தது. இக்கூச்சலைக் கேட்ட அரசன் நித்திரைப் பங்கமாகி எழுந்து வெளியில் வந்து, பத்மாவதியை உற்றுப்பார்த்து, அவள் யாரென்றும் அவள் பெயரென்னவென்றும், கூச்சல்போட்டதற்குக் காரணமென்ன வென்றும் விசாரித்தார். இக் கேள்விகளினால் பத்மாவதி ஆச்சரியப்பட்டவளாய் தான் அகஸ்மாத்தாய்க் கண்டு பயந்த ஆவேசத்தின் சங்கதியைத் தெரிவித்தாள். அரசன் பத்மாவதியைநோக்கி, "நீபயப்படாதே, நீ கண்டுமிரண்ட அகோரக் காட்சியைவிட நான் உன் பிரத்தியட்சபேத ரூபத்தால் திகிலடைந்திருக்கிறேன். நான் இப்படிச் சொல்வதற்காக நீயும் அதிசயிக்காம லிருக்கமாட்டாய். என்மனைவியும் பட்டத்தரசியுமாகிய பத்மாவதி இதோ என் படுக்கையின்மீது சயனித்துக்கொண்டிருக்கிறாளே. நீயாரென்று எனக்குவிளங்கவில்லை. நீ அவளது ரூபத்தையெடுத்துக்கொண்டு என் மனைவிதானென்று சொல்லத்தக்கதாய் மாரீசங்கொண்டு வந்திருக்கின்றனையே" என்றார். அரசன் மொழிந்தவைகளைக் கேட்ட பத்மாதி திகிலையும் கலக்கத்தையு மடைந்து அரசனுடைய மஞ்சத்தை யணுகிப் பார்த்தவுடன் தன்னைத்தானே நிந்தித்துக்கொள்ளும் விதமாய் தன் சாயலையொத்த பேரழகுடைய ராஜஸ்திரீ நித்திரைச்செய்யக் கண்டு ஆச்சரியப்பட்டு, அங்கம் பதைத்து சிந்தனை யுற்றவளாய் கோவென்றலறிக் கூச்சலிட்டாள். அரசனுடைய மஞ்சத்தில் படுத்திருந்தவள் இக் கூச்சலினால் விழித்தெழுந்து பத்மாவதியைப் பார்த்து, "அடி பா

தகி! நீ மோசம்பண்ணி என் வாழ்வைக் கைப்பற்ற என்சாயலேயும் பேரழகையுங்கொண்டு வந்தனையோ? நீ அஞ்சாது நெஞ்சுபடைத் திவ்விடம்வர உனக்கு வெட்கமில்லையா? என் நாயகனை என்னைவிட்டுப் பிரியும்படிச்செய்து என்னைப் பஞதியாக்க என்சாயலை எடுத்துவந்தனையா? நீ ஓர் மாந்திரீக ஸ்திரீயென்று அரசன் உன்னை அறிந்துக் கொள்ளுவார். நீ எடுத்துவந்த மாரீசவேஷத்தால் அரசனுக்குரிய மனைவி நீயோ நானோவென்றரசன் மயங்கும்படி செய்தனையல்லவா! உன்னெண்ணம் இங்கு பயனற்றது" என்று கடுகடுத்துப்பேசி அரசனைப்பார்த்து, "ஆ! எனது பிரியநாயகா! இவளைக்கண்டு நீர் கவலைப்படவேண்டாம். என்னை மோசஞ்செய்யக்கருதி என்ரூபத்தை எடுத்துக் கொண்டுவந்த மாந்திரீகஸ்திரீ இவள். இப்பொழுதே இவளைச் சிறைப்படுத்தி நாளையதினம் அக்கினிகுண்டத்தில் போட்டு தகனித்துவிட உத்திரவு செய்யுங்கள்'' என்றாள்.

இவையனைத்துங் கேட்ட பத்மாவதி பதில்சொல்வதின்னதென்றுந் தெரியாமல் துக்க மதிகரித்தமையால் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய்ச் சொரிய அரசனை நோக்கி, நாதா! எதார்த்தமாய் நானே உமது சொந்தநேசமனைவி, என்பாக்கியத்தைப்பார்க்கச் சகிக்காமல் பொறாமையடைந்தவர்கள், மோகனங்கி என்னும் பைசாசைத்தூண்டி இவ்வாறு ஏக்கத்துக்குள்ளாக்கி யுள்ளார்கள். நானே கனகபுரியின் இராஜகுமாரத்தி. சர்வேந்திரியாமியாகிய கடவுளொருவரே இதற்குச் சாட்சி! என்றாள்.

இதைப் படுக்கையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த மாயமனைவி பரப்பரப்புடனெழுந்து, "அடி பாதகி! நீ மெய் போலும் பொய்யைப் புகட்டிப் பேசுகிறாய். நீ சொரியும்

கண்ணீரினாலும், நீ காட்டும் நீலித்தனத்தினாலும் நீ பெருந் துரோகியென்று வெளிப்படுத்துகிறது'' என்றாள்.

இச்சம்பாஷணைகளால் அரசன் கலக்கங்கொண்டு இருவரில் யார் தனக்குப் பட்டத்தரசியென்று நிச்சயமறிந்துக் கொள்ளக்கூடாதவராய் "நீங்கள் வார்த்தை யாடுவதைச் சற்று நிறுத்துங்கள். இதனால் என் சந்தேகம் நிவர்த்தியாகவில்லை. உங்களிலொருத்தி பட்டத்துஸ்திரீயாகவும், மற்றொருத்தி என்னை மோசஞ்செய்யவந்த மாயக்காரியாகவுமிருக்கவேண்டும். என்னைக் கலகத்துக் குள்ளாக்கினவள் இன்னாளென்று நான் தெரிந்துகொண்டால் அவளுக்குத் தக்க சிட்சைசெய்வேன்.'' என்றுசொல்லி இருவரையும் அன்றிரவெல்லாம் பிரத்தியேகமாய் இருக்கும்படிச்செய்து பொழுது விடிந்ததும் மந்திரி மதியூகியையும், அவரது மனைவியையும் அழைத்து நடந்த சவிஸ்தாரங்களை யாவும் மொழிந்து கனகபுரியின் ராஜகுமாரத்தியாகிய பத்மாவதி இன்னாளென்றுதெரிந்து சொல்லும்படிக் கட்டளையிட்டார். மந்திரி மதியூகியும், அவர் மனைவியும் குழந்தைப்பருவத்திலிருந்து பத்மாவதியை நன்றாயறிந்தவர்களானதால், ஒரேரூபந்தரித்திருந்த இருவரையும் பரிசோதனைசெய்து, பத்மாவதி இன்னாளென்று அறியக் கூடாதவர்களானார்கள். அரசன் சங்கத்தாரையெல்லாந் தமது சபைக்கழைத்து அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டபோது நியாயாதிபதிகளெல்லாம் ஒன்றாய்க்கூடி ஆலோசித்து அரசனுடைய மஞ்சத்தில் சயனித்திருந்தவளே பட்டத்தரசியாக வேண்டுமென்றும், மற்றொருத்தி மோசஞ்செய்யவந்த மாந்திரீகஸ்திரீயென்றும், அந்த மோசக்காரியை அக்கினிக்கிரையாக்குவதே தக்கதண்டனை யென்றார்கள். அரசன்

இத்தீர்ப்பைக் கேட்டதும் சகியாதவராய், ஒருவேளை காரியமெய்ப்படியாமோவென் றுலோசித்து "என் கண்முன் பாக ஸ்த்ரீஹத்தி செய்வது தகுதியல்ல, ஆகிலும் என்னை வஞ்சித்தற்பொருட்டுவந்த அந்த துரோகியை இனி என் முன்வரவொட்டாமல் என் அரண்மனையினின்றும் துரத்தி, காட்டில் விட்டுவிடுவதே தகுதி" என்றார்.

உடனே அரசனுடைய உத்திரவுக்கு எதிர்பார்த்திருந்த பணியாட்கள் பத்மாவதி தரித்திருந்த உடைகளையும் ஆபரணங்களையும் கழற்றிக்கொண்டு கந்தலை உடுத்திக்கொள்ளச் செய்து அரண்மனையைவிட் டப்புரப்படுத்தி காட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டார்கள். அரசகுமாரத்தியும் மற்றோர் அரசனுக்கு மனைவியுமாயிருந்த பத்மாவதியின் தற்காலஸ்திதியை என்னவென்று புகல்வது. அவளுடைய விதிவழி எவ்வாறு கொண்டுவந்துவிட்டது பார்த்தனையா? பத்மாவதி அக்காட்டில் காய் கனி கந்தமூலங்களைப் புசித்துக்கொண்டு சிலநாட்கள் கழிக்கையில் வேட்டையாடச் சென்றிருந்த ஓர் அரசகுமாரன் பத்மாவதியைப்பார்த்து அவளுடைய விருத்தாந்தத்தை விசாரித்து மிகவும் வருத்தமடைந்து, "ஓ பாக்கியவதி! இனி நீ உன் கஷ்டகாலங்களுக்காக துயரப்படவேண்டாம். உன் நாயகரையும் போக பாக்கியங்களையும் அதிசீக்கிரத்தில் அடைவாய்" என்றிவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில், இவர்களுக்கெதிரில் வஸ்திரங்க ளொன்றுமில்லாமலும், நிராயுதபாணியாயும் ஒருவன் குதிரையின்மே லேறிக்கொண்டு அதிவேகமாய்ச் சென்றான். பத்மாவதி அவனைக்கண்டு, "ஆ! தெய்வமே இதோ என் புருடன் அதிவேகமாய்ச்செல்கின்றாரே. என்

ளைக் கடைக்கண்ணாலும் பார்த்தாரில்லையே" என்று பிர லாபித்தாள். இதற்குள் வேறொரு மனிதன் குதிரையின் மேலேறி அதிக வேகத்துடன் முன்சென்றவனைத் தொடர்ந்து உயிர்ப்பழி வாங்குபவன்போல் உருவின உடைவாளுடன் சென்றான். பத்மாவதி அம்மனிதனை உற்றுநோக்கி முன்போலவே, ஆ இதென்ன புதுமை! இதோ என் புருடன் என்னைக் கடைக் கண்ணாலும் பார்த்தாரில்லையே! முன் குதிரையின்மேல் சென்றவருக்கும், இப்போது செல்கின்றவருக்கும் ரூபத்தில் யாதொரு வித்தியாசமும் இல்லையே. இதைவிட ஆச்சரியப்படத்தக்கது வேறென்ன இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டிருக்கையில், மற்றோர் மனிதன் குதிரைமேலேறி அதிவேகத்துடன் வருவதைக்கண்டு அரசகுமாரனும், பத்மாவதியும் திகைசமுற்றார்கள். அம்மனிதன் சமீபத்தில் வரவே அவன் மந்திரி மதியூகியா யிருக்கக்கண்டனள். பத்மாவதியைக் கண்டதும் மந்திரி குதிரையை விட்டிறங்கி,பத்மாவதியின் பாதத்தில் விழுந்து நமஸ்காரஞ்செய்து, "மண்டலத்தோர் புகழ்ந்து போற்றும் அன்னையே! உம்மை இங்கு கண்டுகளிக்க யான் என்ன பாக்கியஞ்செய்தேன்? இதுவரையிலும் உம்மை இந்த ஆரணியத்தில் காப்பாற்றிய கடவுளுக்கு துதிசெய்கிறேன். நீர் அரசனுக்கு குற்றமொன்றுஞ் செய்யாதிருந்தும், உம்மை சிறிதுகாலம் சிறுமையனுபவிக்கும்படி கடவுள் நிர்ணயித்திருந்தனரோ? இப்பொழுது நீர் பட்ட சிறுமை பெருமையாகவும், துன்பம் இன்பமாகவும் மாறுதலடையக் காலம் சமீபித்தது, இனி நீர் சஞ்சலப்பட வேண்டியதில்லை. உம்முடைய இக்கோலத்திற்குக் காரணமாயிருந்த உமது சத்துருக்களுயிர் இனி நீடித்திருக்கப்

ஒருவாறு தன் வியாகூலத்தை விட்டொழித்தவளாய் 20-நாள் வரையிலும் அத்தீவிலேயே காலங்கழித்து வந்தாள்.

ஆதித்தபுரியின் அரசன் மனைவி ஆநந்தவல்லி வழக்கம் போல் தன் சகியுடன் இத்தீவை யடைந்து யோகிகள் வாசஞ் செய்யும் பர்னசாலையை யடைந்தனள். அவள் அங்கிருக்கும் சுந்தரவல்லியைக் கண்டதும் ஆச்சரியப்பட்டவளாய், "ஆ! இதென்ன விந்தை! இந்த நிர்மானுஷியமான தீவில் இம்மாது நல்லாள் எவ்வாறு வந்தனள்? சகி! இவ்வணங்கின் வடிவழகை உற்றுநோக்கில் இப்பெண்மணியாள் நம்மைப்போல் ஒரு அரசகுலத்தில் ஜனித்தவளாகத் தோற்றுகிறாள். அருந்தவர்களுக் கருள்புரியும் அந்திவண்ணன் பாகத்தமர்ந்த அன்னபூரணியோ? அலைகடலில் அரிய துயில்கொள்ளும் அச்சுதனார் அகத்திருக்கும் ஆதிலட்சுமியோ? அன்றேல் அரிய சிருட்டிசெய்யும் அயனார் நாவில் வாழ் நாமகளோ? இன்றென்று அம்மாதை விசாரித்துத் தெரிந்துக்கொள்ளுவோம்.

ஆனந்தவல்லி.—அம்மா! தாங்கள் யார்? எந்தநாடு? இந்த நிர்மானுஷியமான தீவில் தனியாய் தாங்களெவ்வாறு வந்தீர்? தங்களுடைய வதனத்தைப்பார்க்கில் ஏதோ ஆபத்து நேர்ந்திருப்பதாகப் புலப்படுகிறது.

சுந்தரவல்லி.—அன்னையே!

ஆரெனவென்னை அன்புடன்கேட்ட
பூரணியேநான் புகலுவேன்கேளாய்
கனகபுரியெனும் கடிநகர்தன்னில்
வினவியசெல்வம் வேண்டுவோர்க்களித்து
அரசாளும்பூபதிக் கருந்தவப்புதல்விநான்,

யான் கனகபுரியாளும் அரசன்குமரி. என்பெயர் சுந்தர வல்லி. விதர்ப்பநாடாளும் கீர்த்திசீலமகாராஜன் குமாரரான பூபாலன் என்பவர் எனைமணந்தனர். நாங்கள் நேயம் பாராட்டி வாழுங்கால் என் மகுணரை முடிசூட்டிக்கொள்ளும்படி அவர் தந்தை கேட்க, அவர் உலகியல்பறியாது முடி சூட்டிக்கொள்ள சம்மதிப்படாமல், தபோதனர்களால் ஆகாயமார்க்கமாகச் செல்லக்கூடிய அஸ்வமொன்றைப் பெற்று, துரதிஷ்டசாலியான என்னையும், மந்திரி குமாரரையும் உடனழைத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாய் அவ்வஸ்வத்தின்மேல் செல்லும்போது யான் தவறி சமுத்திரத்தில் விழுந்துவிட்டேன். ஒரு துண்டுப் பலகையின் உதவியால் இத்தீவை யடைந்தேன். இவ்விடத்திலுள்ள கருணைவள்ளலாகிய யோகிகளால் நான் என் விசனத்தினின்றும் தேற்றப்பட்டவளாய் அவருடைய ஆதரவில் ஜீவித்திருக்கிறேன். அம்மா! தாங்கள் யார்! யோகிகள் எனக்கு தெரிவித்திருந்த ஆதித்தபுரியின் பட்டமகிஷியான ஆனந்தவல்லிதானோ? யான் அறியேன். எனது நாதர் எவ்வாறாயினரோ? அடியாள்மீது தாங்கள் கிருபைபுரிந்து என்னை ரக்ஷித்து எனது இன்னுயிர்க் காதலரது சுகக்ஷேமத்தை தமது ஏவலாளரால் விசாரித்து என்னை ஜீவவந்தியாகச் செய்ய வேண்டுகிறேன்.

ஆனந்தவல்லி.—கண்மணி! நீ கலக்க முறாதே! நானோ சந்ததியற்றவளாயிருக்கிறேன். உன்னை என் பட்டணத்துக் கழைத்துக்கொண்டுபோய் என் குமாரத்தியைப்போல் பாதுகாத்து வருகின்றேன். என்னுடைய நாதரோ, மிகவும் அன்பார்ந்தவரும், நூல்களிற் செப்பியவாறு நீதிகளைப் பிரயோகிப்பதில் மிக்க திறமை வாய்ந்தவர். மிக சங்கடமான பெருஞ்செ

யல்களிலும் அஞ்சாத நெஞ்சத்தையுடையவரும், தைரியத்திற்குத் தங்கும் அகம்போன்றவரும், காரியங்களிலெல்லாம் மிக்க ஊக்கமுள்ளவர். ஆனதுபற்றி அவரிடம் உன் கணவருடைய விருத்தாந்தத்தைத் தெரிவித்து அவரைக் கண்டுபிடித்து உன்னிடம் ஒப்புவிக்கும்படிச் செய்கிறேன்.

சுந்தரவல்லி.—தாயே! தாங்கள் இவ்வித ஆறுதல் சொன்னதினால் நான் மெத்த பாக்கியவதியாகினேன். ஆதரவற்ற எனக்கு நின் கருணை வாய்த்ததற்கு நான் மிகுதியும் சந்தோஷமடைந்தேன்.

யோகீஸ்வரர்.—அம்மா! ஆனந்தவல்லி! நிராதரவான சுந்தரவல்லியைக் காப்பாற்றி அவளுடைய கணவனிருக்குமிடம் அறியவேண்டுவது உம்முடைய கடைமையாகும். சென்றுவாருங்கள்; உங்களுக்கு சர்வமங்களமுண்டாவதாக.

(நிட்கிரமித்தல்)

5-வது அத்தியாயம்.

ஆழியில் விழுந்த சுபுத்தி கரைசேர்தல்.

சுபுத்தி.—ஜெகதீசா! இனி நான் என்னசெய்வதும் புலப்படவில்லை, ஆழியில் தவரிவிழுந்த என் நண்பனின் நாயகியைக் காப்பதற்கு எத்தனித்து யானும் இச்சமுத்திரத்தில் குதித்ததின் பயன் ஒன்றுமில்லை. என் நேசனின் மனைவியோ கண்ணுக்குப் புலப்படவில்லை. அலைகளினால் எந்ததிசையில் மோதப்பட்டனளோ? அறிகிலேன். மனைவியின் வியோகத்தால் துன்புறும் என் நேயனுக்கு தைரியஞ்சொல்லி காப்பாற்றவும் அருகிலிராமற் பிரிந்தேன். என்னுயிரையும் காப்பாற்றிக்கொள்ள வகை யொன்றும் புலப்படவில்லை. பேதையான சுந்தரவல்லி எப்பாடுபடுகின்றனளோ? இச்சமுத்திரத்தில் இந்நேரம் ஜலத்தில்மூழ்கி உயிர்விட்டிருப்பாள். என் நண்பனும் மனைவியை இழந்த சோகத்தால் இச்சமுத்திரத்தில் குதித்தனனோ? அல்லது நாடடைந்தனனோ? ஒன்றுமறிய ஏதுவில்லையே! யானும் இவ்வாழியில் உயிரைநீக்க நேரிடும்போல் தோன்றுகின்றது. ஏனெனில் கண்ணுக்கெட்டியவரையில் கரை தென்படவில்லையே. எவ்வளவுகாலம் இவ்வலைகளினால் மோதுண்டு நீந்திக்கொண்டிருப்பேன்? ஆ! கைகால்களின் வலிவு ஒடுங்குகின்றன. கூடிய சீக்கிரத்தில் இவ்வாழிக்கிரையாகுங் காலம் சமீபிக்

தது. அனுதாரக்ஷகா! ஆபத்பாந்தவா! இனி என்னலாவ தொன்றுமில்லை. ஆதரிப்பது நின் கருணையே.

என்று இவ்வாறு இவன் பரதவித்துக் கொண்டிருக்கையில், மார்வார் தேசத்திலிருந்து கோவிந்ததாஸ் என்னும் ஓர் சவுக்கார் இராஜாக்கள் உடுக்கத்தக்க சால்வைகள், பீதாம்பரங்கள், தாப்தாக்கள் முதலியவைகளைக் கப்பலிலேற்றிக்கொண்டு வியாபாரநிமித்தம் பலதேசங்கள் சென்று திரும்பி ஆழியில் நீந்திக்கொண்டிருக்கும் சுபுத்தியின் சமீபமாய்க் கப்பலைச் செலுத்தி, தன் வேலையாட்களைக் கொண்டு சுபுத்தியைத் தூக்கிக் கப்பலில் சேர்த்தான். சுபுத்தி கப்பலில் சேர்ந்ததும் பிராணனை இழக்குந்தருவாயில் தான் காப்பாற்றப்பட்டதற்கு சர்வவல்லமையுள்ள கருணைக்கடலான சர்வேஸ்வரனைத் தியானித்துப் பின் அக்கப்பலதிகாரியான கோவிந்ததாஸின் பாதங்களில் வணங்கி தன்னை ஆழியில் ஆழாவண்ணம் ஆண்டருளியதற்காக ஸ்தோத்திரம்செய்து தான் ஓர் தனவானுடைய புதல்வனென்றும், தானும் வியாபார நிமித்தம் கப்பலில் செல்லும்போது துரதிஷ்டவசத்தால் கப்பலானது திசை தப்பி ஓர் கற் பாறையில் மோதியதால் அதிலுள்ள சாமான்களும் மனேக ஏவலாளர்களுடனும் நீரில் அழுந்தியதால் தன் ஆஸ்திமுழுவதும் நாசமாயிற்றென்றும், தான் மாத்திரம் பரமேஸ்வரனுடைய அருளால் ஜலத்தில் உடனே முழுகிப்போகாமல் நீந்திக்கொண்டிருந்ததாகவும் இனி தான் ஜீவிப்பதற்கு திரவியம் கிடையாதென்றும், ஜீவகால பரியந்தம் தன்னைக் காப்பாற்றவேண்டுமென்றும் சொன்னான்

கோவிந்ததாஸ்.—குழந்தாய்! நீ இனி பயத்தைவிட்டொழி. நீ கோறியவண்ணம் நான் உன்னை ஆதரித்து வருகிறேன். என் வியாபாரத்தொழிலில் நீயும் ஓத்தாசையாக விருந்து நடத்தவேண்டும். நீ செல்வந்தனாக விருந்தும் லட்சுமியினுடைய கடாட்சம் உடனே உன்னை விட்டு நீங்கிற்றல்லவா?

சுபுத்தி.—ஐயா! லட்சுமி பாற்கடலை விருந்து உதிக்கையில் இளம்பிறையான மெல்லிய இந்துவினிடமிருந்து தனிமையாக வக்கிரத்தன்மையையும் உச்சைச்வரஸ்வினிடமிருந்து நின்றவிடத்தில் நில்லாத நிலையற்ற நிலைமையையும், காலகூடத்தினிடமிருந்து மோகத்தை யுண்டாக்கும் மஹிமையையும், மதுவினிடமிருந்து மதத்தையும், கௌஸ்துவ மணியினிடமிருந்து கடினத் தன்மையையும், அவற்றுடன் சேர்ந்திருந்த பரிசயப்பற்றினால் பிரிந்திருக்கையில் மனதை ஆற்றுதற்பொருட்டு இவ்வித சின்னங்களையெல்லாம் பெற்றுவந்திருக்கிறாள். மிகவும் இழிகுணமுள்ள இவ்விலட்சுமியைப்போல் இவ்வாறு பரிசயத்திற்குரித்தாகாதவர் வேறொருவரும் இவ்வுலகில் திடமான நற்குணங்களாகும் பாசங்களால் இறுகக்கட்டி இடம்விட்டுப் பெயரமுடியாமற் செய்தபோதிலும், இருந்தவிடம் தெரியாது மறைந்துவிடுகின்றாள். இவள் பரிசயத்தைப் பரிபாலிக்கின்றாளில்லை. உயர்ந்த ஜாதியை உற்றுப்பார்க்கின்றதில்லை, ஒழுக்கத்தை யுணர்வதில்லை, சந்ததியின் வரிசையை சற்றும் பின்பற்றுவதில்லை, தர்மத்தைத் தழுவுவதில்லை. கொடையைக் கொண்டாடுவதில்லை. அறிவின் அருமையை

விசாரிப்பதில்லை. சாஸ்திரத்தைச் செவியுறுகின்றதில்லை. தர்மத்தைத் தழுவுவதில்லை. வானத்தின்கண் முகில்கள் அசைகையில் அவைகளிற்றோன்றும் விதம் விதமான விசித்திர வடிவங்களின் வரிகள்போல் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே பாழாக்கி விடுகின்றனள். அந்த மந்தர பர்வதத்தைப் பாற்கடலிற் சுழற்றுகையில் அதனிடமிருந்து பயிற்சி பெற்றவள்போல் இன்றைக்கும் இவள் அங்குமிங்குமாய் சுழன்றோடுகிறாள். தீட்சணத் தன்மையைக் கற்றுக்கொள்பவள்போல் கத்திகளின் கூர்மையான முனைகளிற் குடி யிருக்கிறாள். பாதாள கெவியில் பேரருளைப் பரப்புகின்றாள். மாரிகாலத்துமின்னல்போல் ஒளித்து மறைகின்றனள். பலங் குன்றியவனைப் பித்தனுக்குகின்றாள். சரஸ்வதியின் அனுக்கிரஹம்பெற்ற ஜனத்தை அசூயையால் தழுவுகின்றாளில்லை. நற்குணம் பொருந்தியவனை தூய்மையற்றவனென் றெண்ணியவள்போல் பரிசிப்பதுமில்லை. உதாரத் தன்மையனை அமங்கலனைப்போல் அவமதிக்கின்றாள். சத்புருடனை அபசகுனம்போ லெண்ணிக் கண்ணெடுத்துப் பார்ப்பதுமில்லை. நற்குலத்தவனை நல்லபாம்பென்று எண்ணியவள்போல் தாண்டி விடுகின்றனள். சூரனைக் கண்டகம்போலெண்ணிப் பரிஹரித்து விடுகின்றாள். கொடையாளியைக் கெட்ட கனவைப்போல் நினைப் பது மில்லை. வினய முள்ளவனைப் பாதகனைப்போ லெண்ணி அவன் பக்கத்திலும் அணுகாள். தீரத்தன்மையனைப் பித்துப்பிடித்தவனைப்போல் பரிஹசிக்கின்றனள்: மிக்க, நிலையில்லாதத் தன்மையுள்ள இவ்விலட்சுமியானவள் தீபத்தின் சுடரொளிபோல் எவ்வள

வுக் கெவ்வளவு ஒடுங்கிப் பிரகாசிக்கின்றனளோ, அவ்வளவுக் கவ்வளவு தூமம்போல் மலினமான தீராத தீவினைகளையே தருகின்றனள். இவள் பேராவா என்னும் விஷச்செடியை வளர்ப்பதற்குத் தண்ணீர். ஐம்புலன்களாகும் அடவி மிருகங்களை மயக்கச் செய்யும் மறவர்களின் பாட்டு. சச்சரிதமென்னும் சித்திரங்களைச் சிர்குலையச்செய்யும் தூமக்கொடி. மோகமாகும் நீண்ட நித்திரைக்கு மாயப்படுக்கை. பாவங்களென்னும் பெரும் பாம்புகளுக்குப் படுக்கும் பாழி. நற்குணங்களாகும் அன்னப் பறவைகளுக்கு அகாலத்தினுதித்த மாரிகாலம். கபடநாடகத்திற்குப் பிரஸ்தாவனை. தர்மமென்னும் இந்துமண்டலத்திற்கு இராகுவின் நாக்கு. பழக்கத்தைப் பாராட்டாதவளான இவளால் திடமாகத் தழுவப்பெற்று வஞ்சிக்கப்படாமலிருந்த அத்தகைய ஒருவரையும் நான் கண்டதில்லை. நிச்சயமாய் சித்திரத்திலிருந்தாலும் இவள் சலிக்கின்றனள். செவியுற்றபோதிலும் ஏமாற்றிவிடுகிறாள். சித்தத்திற் சிந்தித்தாலும் மோசம் செய்கின்றனள். இங்ஙனம் நல்லொழுக்கமற்றவளான இவ்விலட்சுமியை விட்டு நான் பிரிந்திருப்பதே நல்லதாக எனக்குப் புலப்படுகிறது. ஆகையால் தாங்கள் அதைப்பற்றி கவலைப்படாதிருக்க உம்மை வேண்டுகிறேன்.

கோவிந்ததாஸ்.—(தனக்குள்) இவன் நற்குலத்தில் பிறந்தவனாகவும், மரியாதை முதலிய ஒழுக்கங்கள் தெரிந்தவனாகவும், கல்வியில் மிக்க தேர்ச்சி யடைந்தவனாகவும் காணப்படுகிறான். இவனை நாம் போஷித்து வரு

வோமாயின் நம்முடைய வியாபாரத் தொழிலுக்கு தகுந்த உதவி புரிவதுடன் நமக்கு வியாபாரமும் அதிகரித்துவரும். (பஹிரங்கமாய்) அப்பா! சுபுத்தி! நாம் இப்போது மார்வார் தேசத்திற்குச் செல்வோம். பிறகு, சிலநாள் கழித்து நாம் வியாபார நிமித்தம் வெளியில் செல்லவேண்டும். இதற்குள்ளாக என்வர்த்தகத் தொழிலில் நீ கவனத்தைச் செலுத்தி அத்தொழிலைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

A. Rangachari
10-7-23

6-வது அத்தியாயம்.

பூபாலன் மாவிந்தபுரத்தை யடைதல்.

பூபாலன்.—ஆ, பிராணசகி! என் பிரியநண்பா! நீங்கள் இருவரும் சமுத்திரத்தில் விழுந்ததற்குப் பாவியாகிய நானே காரணனாயினேன். இதுவரையில் உயிர் துறந்தீர்களோ? அல்லது கடவுளுடைய கிருபையால் இரட்சிக்கப்பட்டீர்களோ? ஏ ஜெகதீசா! எனக்கோ மிகவும் தாகமாயிருக்கிறது. பசியோ என்னை பிடிக்கின்றது. ஓ! இதோ கடற்கரை தென்படுகின்றது. ஆகையால் அஸ்வத்தினின்றும் இங்கு இறங்கி பசிப் பிணியை நிவர்த்தி செய்துக்கொண்டு பிறகு மேல் நடக்கவேண்டியதை யோசிப்போம். அதோ சற்று தூரத்தில் செழிப்பான விருக்ஷங்கள் காணப்படுகிறது. அங்கு நல்ல ஜலம் கிடைக்கும். ஆகையால் அங்குச் செல்வேன். ஆ ஹா! இத்தடாகம் என்ன அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. இக்குளத்து நீரைப் படைத்துவிட்டுப் பிரமதேவன், மீண்டும் அமுதத்தை ஏன் உண்டாக்கினார்? அவர் ஏற்கனவே செய்த ஸ்ருஷ்டியை மறுபடியும் வீணாகச்செய்தவரானார். இந்நீரும் அமுதம்போல் புலன்கள் அனைத்தையும் ஆனந்தப்படுத்துகிறது. மிகவும் நிர்மலமாயிருப்பதால் இக்குளம் கண்களைக் களிக்கச் செய்கின்றது. குளிர்ந்திருக்கின்ற தாகையால் பரிசசுகத்தையளிக்

கின்றது. தாமரை மலர்களின் வாசனைபொருந்திய தால், நாசியைத் திருப்தி செய்கின்றது. அன்னப் பற வைகள் ஆர்ப்பரிப்பதால், செவியை ஆனந்தப்படுத்து கின்றது, நல்லசுவையை பொருந்தியதானதால் நாவை சந்தோஷிக்கச் செய்கின்றது. என்ன ஆச்சரியம்! அமுதுபோல் நல்லசுவையுள்ள இந்த ஜலத்தை விட்டு விட்டு, உப்புடன்கூடி பானம் முதலியதற்குச் சற்றும் பயன்படாத சாகரத்தில் படுத்துறங்கும் மகாவிஷ்ணு, ஜலசயனத்திலுண்டான தனது ஆவலைத் தகுந்தவாறு செலுத்திக்கொண்டாரில்லை. உண்மையாக இப்பொய் கையானது ஆதியில் உண்டாக்கப்பட்டதல்ல; ஏனெ னில், பிரளயகாலத்து மஹா வராஹனது மூக்கினால் தாக்கப்படுவதிலிருந்து பயந்த பூதேவியானவள், சிறு கும்பத்திலுதித்த முனிவரால் அருந்தப்பெற்ற நீர னைத்தையு முடைய கடலிலல்லவோ மறைந்துக் கொள்ள இறங்கினள். அகாதமான அனேக பாதா ளங்கள்போல் மிகவும் ஆழமான ஜலத்தையுடைய இம்மஹா சரஸ்ஸில் இருந்திருப்பாளாகில், ஒருவரே யல்ல, ஆயிரம் மஹா வராஹராலும் அடையக்கூடா தவளாய் விட்டிருப்பள். பிரளயகாலத்துப் பெரும் முகில்கள் இதிலிருந்தே சொற்ப நீர்களை யெடுத்தெ டுத்து பிரளயகாலத்தில் பூமியெங்கும் பொழிந்து அவைகளை நாசமாக்குகின்றன வென்பது உண்மை. பூர்வத்தில் பிரம்ம ஸ்ருஷ்டிக்கு முன்பு ஜலமயமா யிருந்த பிரம்மாண்டரூபமான இப்புவனமானது ஒரு மிக்கத் திரண்டு இவ்வாறு தடாகமென்னும் பெயர் பெற்று தோன்றி யிருக்கின்றதெனை யான் நினைக்கின்

றேன். இந்த நீரையருந்தி சற்று என்களைலயைத் தீர்த்துக்கொள்ளுகிறேன்.

தனஞ்செயன் (மாவிந்தநகரத்து ஒரு தனவந்தனுடைய குமாரன்).—யான் மிகுந்த ஐஸ்வர்யத்திற்கதிபதியாகியிருந்தும் இச் செல்வத்தை எவ்வாறு உபயோகப்படுத்தவேண்டுமென்பதை உணர்த்த எனக்கோர் சன்மார்க்கநண்பன் கிடைக்கவில்லை. சிலர் செல்வத்தைப் பெற்ற இருமாப்பினால் தமது பிறப்பையும் மறந்தவர்களாய் விதம் விதமான விஷயங்களை யனுபவிப்பதில் விழைவைக் கொண்டவர்களாகவும்; சிலர், இயல்பாகவே சபலத்தன்மையதானதால் எங்கும் அலைந்துதிரிவதும், ஒன்றாக விருப்பினும் இலக்ஷக்கணக்கானது போல்தோற்றுவதுமான மனத்தினால் அலைக்கப்பெற்றவர்களாகவும் குழப்பத்தை யடைகின்றனர்; சிலர் செல்வச்சூட்டினால் சமைக்கப்பெற்றவர்போல் துள்ளித் துடிக்கின்றனர்; சிலர் செல்வச் செருக்கினால் வலுவான அடியினால் தாக்கப்பட்டவர்போல் தங்கள் அங்கங்களைத் தாங்களே தாங்கிக்கொள்ள மாட்டாமல் நண்டுகளைப்போல் ஒரு பக்கமாய் சாய்ந்து நடக்கின்றனர்; சிலர் அறநெறித்தவறியதால் நடமாட்டத்திற் றடுமாற்றமடைந்து முடவர்போல் பிறருதவியினாற்றானே சஞ்சரிக்கின்றனர்; சிலர் பொய்பேசுவதால் வாயிற் பொங்கியெழும்பிய புண்களையுடையவர்போல் பெரும் பிரயாசத்துடன் பிதற்றுகின்றனர். மரிக்குங்காலம் மிக நெருங்கியதோவெனத் தோன்றும்படி உறவினரையும் உணர்கிறாரில்லை; சிலர் கண்

ளைப் பெற்றவர்போல் களங்கமற்றிருக்கும் பெரியோரைப் பார்க்கின்றனரில்லை; சிலர் பேராசையென்னும் நஞ்சினால் மூர்ச்சை யடைந்தவர்களாய் பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள் யாவற்றையும் கனகமயமாகப் பார்க்கின்றனர்; அன்னோருடையப் பெயர் செவியுறப்படினும், சாவுப்பறைகள்போல் வெகுட்டலையுண்டாக்குகின்றது; இவர்கள் தினந்தோறும் பாவங்களால் நிறப்பப் பெற்றவர்போல் உடல்பூரித்தவராகின்றனர்; இத்தகைய நிலைமையிலிருக்கும் மனிதர்கள் புற்றுப் புற்களின் முனையிலிருக்கும் பனித்துளிகளைப்போல் தாம் வீழ்ந்துபோவதையும் கண்திறந்து பார்க்கின்றனரில்லை; சிலர் சூதாட்டத்தைப் பொழுதுபோக்கென்றும், வேட்டையாடி மிருகம் முதலான ஜந்துக்களைக்கொல்வதை சீரஉழைப்பென்றும், மதுபானத்தை மனமகிழ்ச்சியென்றும், பெரியோருடைய வார்த்தைகளைப் புறக்கணித்தல் பராதீனமற்ற தன்மையென்றும், பரிபவங்களைச் சகிக்குந் தன்மையைப் பொறுமையெனவும், சுதந்தரம் பாராட்டியிருத்தலைப் பிரபுத்தன்மை யெனவும், கடவுளை அவமதித்தல் மிகுந்த மனோதைரியமெனவும் எண்ணி இருக்கின்றனர். சிலர் தமக்குள் கடவுளும தங்கியிருப்பதாக தாம் ஆரோகணம் செய்துக்கொண்டு தமது புயங்களிரண்டிலும் வேறு இரண்டு கரங்கள் மறைந்திருக்கின்றனவென்றும் மனதில் தியானம் செய்கின்றனர்; தமது நெற்றியிலும் மூன்றாவது கண் மறைக்கப்பெற்று இருப்பதாகவும் மதிக்கின்றனர்; கள்ள மகிமையாலுண்டான கர்வம் நிரம்பியவர்களாய் தைவங்களைத்

தொழுகின்றாரில்லை, அந்தணரை ஆராதிப்ப தில்லை, மேன்மக்களை சம்மானிப்பதில்லை, குருமார்களுக்கு மரியாதை செய்கின்றாரில்லை, பண்டிதரைப் பரிஹஸிக்கின்றனர், விருத்தர்களின் உபதேசத்தை உணர்கின்றாரில்லை, உசித முரைப்போரை வெறுக்கின்றனர்; வேறுதொழில் ஒன்றுமில்லாது அல்லும்பகலும் அஞ்சலிசெய்துக்கொண்டு. யாவனொருவன் போற்றுகிறானோ, எவனொருவன் எப்பொழுதும் மாய மஹாத்மியத்தை யுண்டாக்குகின்றானோ, எவ்வகையிலும் அன்னவனையே சந்தோஷத்துடன் ஆமோதிக்கின்றனர். அவனுடனே சல்லாபம் செய்கின்றனர், அவனையே சதா அருகிலிருக்கச் செய்கின்றனர், அவன் வார்த்தைகளையே செவியுறுகின்றனர், அவனுக்குத் தான் செல்வத்தைச் சொரிகின்றனர்.

இவ்வாறு மிகவும் முரண்பட்ட கோடிக்கணக்கான கொடிய செயல்களை யுடையவர்களுடைய பிறவி மிகவும் கோரமானது! ஆஹா!! இதென்ன விந்தையாயிருக்கிறது. நான் வழக்கம்போல் இச்சரஸினிடம் நீராடவந்தவிடத்தில் கரையின்மேல் ஓர் வாலிபப் புருடன் களைத்து நித்திரை செய்கின்றான். இவன் மகா புருடலட்சணம் முழுதும் தன்னிட மமைக்கப்பெற் றிருக்கிறான். குன்றென உயர்ந்து எழுந் தூணெனத்திரண்டு பணைத்து முழந்தாள் தடவும் தடங்கையன். காதளவும் நீண்டு செவ்வரிபரந்து விசாலமாய்க் கருணையொழுகும் கஞ்சமலரன்ன கண்களை யுடையவன். மதிபோன்ற முகத்தினன். புன்னகைபொலியும் வாயினன். நல்ல உயர்குலத்தில் பிறந்த உத்தமன்

போல் காணப்படுகிறான். நான் நெடுநாளாக வேண்டுமெனத் தேடியிருந்த நண்பன் எனக்குக் கிடைத்தனன்போலும். இவனுடைய களையையகற்றிப் பின் அவனுடைய விருத்தாந்தத்தைத் தெரிந்துக்கொள்வேன்.

(மூர்ச்சையைத் தெளிவித்தல்.)

பூபாலன்.—(தனக்குள்) ஹா! எனது மூர்ச்சையைத் தெளிவித்தவன் ஓர் நற்குடியிற் பிறந்தவனாகக் காணப்படுகிறான். ஆயினும் என்னுடைய விருத்தாந்தத்தை மன்றத்து வேறுவிதமாகச் சொல்லி இவனுடன் சிநேகம் பாராட்டி என்னுடைய காரியங்களைச் சரிப்படுத்திக்கொள்ளுவேன்.

தனஞ்சேயன்.—நண்பா! தாம் யார்? தாம் இக்குளக்கரையில் மூர்ச்சித்திருக்க நேரிட்ட காரணம் யாது? தயைசெய்து தெரிவிக்கவேண்டுகிறேன்.

பூபாலன்.—அண்ணலே! யான் மந்தரதேயத்தை யாளும் அரையன் மதலை. என்பெயர் தருமநந்தன். யான் என் தந்தையினால் யுவராஜபட்டாபிஷேகம் பெற்ற காலையில் பல்லாயிரக் கணக்கானதும், அதிபயங்கரமானதும், உற்பாதவேளையில் உதித்த வேதாளக்கூட்டம் போன்றதுமான வேடர்களுடைய படையொன்று என் நாட்டை எதிர்த்தது. அது அங்குமிங்குமாய் அலைந்து திரியும் எமனுடைய பரிவாரம்போலவும் ஓரிடத்தில் கூடிய தீவினைத்திரள்போலவும், பாணங்களை கோடைமழைபோல் சொரிந்து இராமசந்திரனால் இயமனுக்கு இரையாக்கப்பட்ட கரதூஷணர்க

ளது சேனைகளின் சமூகமானது இராமச்சந்திரன்பால் தீங்கெண்ணிய தோஷத்தால் பிறந்து வந்ததுபோல வும் நாட்டில் பிரவேசித்து, என் தாய்தந்தைகளை வதைத்து, குடிகளெல்லோரையும், தும்சப்படுத்தி என்னையும் சிறைப்படுத்தினார்கள். நான் அவர்களுடைய காவலில் சிறிதுகாலம் இருந்தேன். அவர்களுடைய ஆஹாரமோ சத்புருடர்களால் நிந்திக்கப்பெற்ற மது மாம்சம் முதலியன, நரிகள் ஊளையிடுவதே அவர்களுடைய சாஸ்திரம், நன்மைதீமைகளை உபதேசிப்பவைகள் ஆந்தைகள், நாய்களே அவர்களுக்கு பரிசயத்திற்குரியவை, கொடுந்தொழில்புரிய சாதனங்களான வில்லம்புகளே அவர்களுக்குத் தோழர், குரூரத்தன்மையுண்டைய வேங்கைகளுடன் அவர்களுக்குச் சகவாசம், பசுக்களின் உதிரத்தினால் அவர்களுடைய தேவதார்ச்சனை, களவாடுதலே அவர்களுடைய ஜீவனம், சர்ப்பங்களின் சிரசிலிருக்கும் மாணிக்கங்களே அவர்களுடைய பூண்கள், காட்டானைகளின் மதநீர்களே அவர்களுக்குச் சந்தனப்பூச்சு, இப்படிப்பட்டவர்களுடைய சிறையில் அநேகநாள் கஷ்டப்பட்டிருந்து ஓர்நாள் கடவுளினுடைய கிருபையால் யாருக்கும் தெரியாமல் தப்பித்துக்கொண்டு சமுத்திரதீரம் சேர்ந்து கப்பலேறிச் செல்கையில் கப்பலுடைந்து ஆழியிலாழ்ந்தது. ஒரு துண்டுப்பலகையி னுதவியால் இத்தீவையடைந்து நெடுநாள் வருந்தினவனாகையால் இக்குளத்தின் ஜலத்தை யருந்தினதும் மெய் மறந்து விழுந்துவிட்டேன். பிறகு உம்முடைய மடியிலிருக்கக்கண்டேன். இதுதான் என்னுடைய வரலாறு.

தனஞ்செயன்—இராஜகுலத்தில் தோன்றிய உத்தமனண்பா! நீர் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டிய அவசியமில்லை. நீர் தெரிவித்த கொடிய கிராதகர்களிடமிருந்து நீர் தப்பிவந்தது கடவுளின் கிருபையே யொழிய வே றொன்றுமல்ல. யானோ இம்மாவிந்த நகரத்து ஒரு தனவந்தனுடைய ஏகபுத்திரன். எனக்கோ அளவு கடந்த செல்வமிருக்கின்றது. தங்களுக்கிஷ்டமான படி தாங்கள் செலவிடலாம். இனி என்மனைக் கேக லாம் வாருங்கள்.

(இருவரும் நிட்கிரமித்தல்.)

7-வது அத்தியாயம்.

பூபாலன் புவனசுந்தரியின் அரண்மனைக்கேகுதல்.

பூபாலன்.—(தனக்குள்) ஆ ஹா! இம்மாவிந்தநகரம் எவ்வளவு அழகாகக் காணப்படுகிறது. பாதாளமட்டும் ஆழமுள்ள தண்ணீர் நிரம்பியதுமான அகழியினால் சூழப் பெற்றிருக்கின்றது. ஆகாயத்தை யளாவிய கொடிமுடிகளுடன் கூடியதும், சுண்ணப் பூச்சினால் வெளுத்ததுமான மதிலானது கைலையங்கிரிக்குச் சமானமாகவிருக்கிறது. சங்குகள், முத்துச்சிப்பிகள், முத்துகள், பவழங்கள், மரகதக் கற்கள், இன்னும் பற்பல இரத்தினங்களின் குவியல்களுடன் கூடியவைகளும், தங்கத்துகள்களாகும் மணல்களின் இராசிகள் பரப்பப்பெற்றவையுமான வெகு நீண்ட பெருங்கடை வீதிகள் விளங்குகின்றன. (தனஞ்செயனுடைய வீட்டையடைந்ததும், பஹிரங்கமாய்) மித்திரா! இந்நகரத்தின் சவிஸ்தாரத்தை எனக்கு விவரமாய்த் தெரிவிக்க விரும்புகிறேன்.

தனஞ்செயன்.—நண்பா! இந்நகரத்தின் பெயர் மாவிந்தநகரமென்று முன்னமேயே தெரிவித்திருக்கிறேன். இந்நாட்டையாளும் அரசனுக்கு ஜெயசீலனென்றுபெயர். அவ்வரசனுடைய ஜேஷ்ட மனைவியானவள் ஒரு பெண்ணைப்பெற்று இறந்தனள். அப்பெண் தாதிமார்

களால் வளர்க்க வளர்ந்து பருவமடைந்தனள். அப்பெண்ணின் பெயர் புவனசுந்தரி. அவளுக்கு மணம் செய்விக்கப் பிதா கருதியதற்கு, புவனசுந்தரி தான் விரும்பும் நாயகனையே காதலனாகச் செய்யவேண்டுமென, இதனைக் கேள்வியுற்ற அரசனுடைய இளைய மனைவியான ரூபாவதி அதிக கோபமடைந்து தன் கணவனைநோக்கி, "நாதா! சகல அரசர்களும் தங்களுக்குக் கப்பம் செலுத்தி தங்களுடைய வார்த்தைக்கு எதிர் பேசுவாரில்லாமல் அஞ்சிநிற்க, கேவலம் சிறியவயதையுடைய ஓர் பெண் சற்றாகிலும் அச்சமின்றி தங்களுடைய வார்த்தைக்கு எதிர்மொழி பகன்றனளல்லவா? தான் இச்சிக்கும் நாயகனையே தான் வரிப்பதாகச் சொன்னாளன்றோ! அன்னவளை என்ன செய்தால்தானென்ன? இவளைத் தகுந்த காவலுடன் புருடர்கள் நெருங்கக்கூடாத விடத்தில் சிறைப்படுத்துவோமாயின், இவள் நம்முடைய மனமொப்ப நடப்பாளென மொழிய, அரசனும் அதற்குச் சம்மதிக்க, ரூபாவதி அதிக திரவியத்தைச் செலவிட்டு ஆழிமத்தியில் ஓர் அரண்மனைப் புதுக்கி, அதற்கும் அரசமாளிகைக்கும் நிலவறையுண்டாக்கி, அதில் புவனசுந்தரியை அதிக வீரத்தன்மைபொருந்திய காவற்காரர்களை வைத்து அருஞ்சிறை வைத்திருக்கின்றனள். அந்த புவனசுந்தரியின் அழகை என்னென்றுரைப்பேன். மதியைப் பழித்த வதனமும், தனுசைப்பழித்த புருவமும், வேலைப்பழித்த கண்களும், கண்ணாடியைத் தோற்கடிக்கும் கபோலமும், மூன்றாம்பிறைச் சந்திரனைப்போன்ற நெற்றியும், முல்லையரும்பைப் பழித்த தந்த வரி

சையும், குயிலைப்பழித்தக் குரலும், சங்கை நிகர்த்தக் கழுத்தும், வேயைநிகர்த்த கைகளும், தாமரையைப் பழித்த கரங்களும், ஸ்வர்ணகலசத்தையொத்த ஸ்தனபாரங்களும், வாழையை நிகர்த்த தொடைகளும், நண்டைப்பழித்த முழங்காலும், அன்னத்தைப் பழித்த நடையும், வண்டைப்பழித்த கூந்தலும், மின்னலைப்பழித்த சாயலும் உடையயவள். இவ்வித அழகினையுடைய அப்பெண்மணியை ஆழிமத்திய கிரகத்தில் சிறைப்படுத்தி இருப்பதுதான் ஒரு ஆச்சரியம்

பூபாலன்.—நேசா! நீ சொன்னதைக் கேட்டவுடன் என் சரீரம் பரவசமாகின்றது. அவ்வித அழகு படைத்த அணங்கை எவ்விதத்திலாகிலும் பார்க்கவேண்டும்.

தனஞ்செயன்.-நண்பா! நன்கு மொழிந்தனை. அவ்வணங்கை அவ்வளவு சுலபமாகப் பார்க்கக்கூடிய இடத்தில் வைக்கப்பட்டில்லையென்று நான் முன்னதாகவே தெரிவித்திருக்கின்றேன். அப்படி சுலபமாகப் பார்க்கக்கூடிய இடமாக விருக்குமாயின் இதுவரையில் எந்த அரசகுமாரனாகிலும் அங்குச் சென்று அவளை மணந்திருப்பானல்லவா? அத்துடன் அவள் அரச குமாரர்கள் விரும்பக்கூடிய அவ்வளவு சுந்தரவதியல்ல. நான் உம்முடைய மனதை சோதிப்பதற்காகவே அவ்வாறு வர்ணித்துச் சொன்னேன்.

பூபாலன்.—நண்பா! நீ சொல்லும் சமாதானத்தை யான் கிரகிக்கக்கூடவில்லை. நீ முதலில் அவ்வணங்கைப்பற்றி வர்ணித்தது முதல் எனது அங்கங்கள் அவிந்துபோ

கின்றன போலவும், இருதயம் கொதிப்பிக்கப்படுவது போலவும், திருஷ்டி தஹிக்கப்படுவது போலவும், சரீரம் எரிகின்றது போலவும் நான் உணருகின்றேன். உலகத்தில் உனக்கீடான வேறு உறவினரும் என்றனுக்கு உளரோ? என் செய்வேன்? நான் என்னைக் கட்டுப்படுத்த மாட்டாதவனா யிருக்கிறேன்?

தனஞ்செயன்.—மித்திரா! என்ன விபரீதமாக முடிந்தது. கருங்குவளை மலர்களாலாக்கிய மாலையென்றெண்ணி வாளை எவனாகிலும் ஆலிங்கனஞ் செய்வானா? காரகிற் கட்டையின் தூமக்கொடி யென்று எவனாகிலும் கிருஷ்ணசர்ப்பத்தைக் கட்டிக்கொள்வானா? மாணிக்கமென்றெண்ணி நன்கு மினுக்கும் கனலை எவனாகிலும் பரிசிப்பானா? எனதன்பார்ந்த சிநேகிதா! இஃது உனக்குற்றதல்ல. அற்ப ஜனங்கள் போய் பழகும் பாதை நீ செல்லத்துணிவது, எவனோ சாமானியனைப் போல் நீயும் என்ன இக்குழப்பத்திலிருந்து உன்னை விலக்கிக்கொள்ள மாட்டவில்லையே?

பூபாலன்.—(தனக்குள்) இவனோ நம்மை அக்கன்னிகையிருக்கும் இடத்திற்குச் செல்லவிடமாட்டான்போலிருக்கிறது அல்லது இவன் வார்த்தைக்கு மீறி நாம் செல்வதாயிருந்தாலும் நம்மைத் தொடர்ந்தே வருவான்போல் தோன்றுகிறது. அப்படி இவன் வந்தால் ஆகாயமார்க்கமாய்ச் செல்லக்கூடிய நம்முடைய அஸ்வத்தின் இரகசியம் தெரிந்துவிடும். தெரிந்தால் நாம் இவனுக்குச் சொல்லியிருக்கும் விருத்தாந்தம் பொய்யாகிவிடும். பின் நம்முடைய காரியங்கள் ஒன்றும்

கைகூடாது. ஆகையால் நாம் இவனுடைய வார்த்தைக்கு உள்பட்டவனாக நடித்து இவனுக்குத்தெரியாமலே நாம் அக்கன்னியிருக்கும் இடம் செல்லவேண்டும். (பஹிரங்கமாய்) நண்பா! உன் வார்த்தையை யான் கேளாவிடிற் றருமமன்று. நீ இரண்டாவதாகச் சொன்ன வார்த்தைகளை நிசமென்று தெரிந்துக் கொண்டேன். தோழா! நேரமாயிற்று, நாம் போஜனம் செய்து சயனித்துக்கொள்ளுவோம்.

(நிட்கிரமித்தல்.)

பூபாலன்.—(தனக்குள்) நண்பன் தனஞ்செயன் நித்திரையிலிருக்கிறான். புவனசுந்தரியின் சரித்திரம் கேழ்விப்பட்டதுமுதல் எனக்கோ ஒன்றின்மேலேயும் நாட்டம் செல்லவில்லை. ஆகையால் நான் சமுத்திரக்கரை சென்று, அங்கிருக்கும் என்னுடைய அஸ்வத்தின் மேலேறி ஆழிமத்தியிலுள்ள கிருகத்தை யடைந்து அப்பெண்மணியைக் கண்டு வருவேன்.

(நிட்கிரமித்தல்.)

பூபாலன்.—ஆ ஹா! என்ன இவ்வரண்மனையின் விநோதம். இங்கு காவற்காரர்கள் அதிக ஜாக்கிரதையுடன் காவல் புரிகின்றனர். னும், நான் வந்தவேளை நல்லதாயிருப்பதினால் அவர்கள் அயர்ந்து நித்திரைச் செய்கின்றனர். இம்மண்டபத்தின் மத்தியபாகத்தில் மிகவும் ஒளிவீசும் ஆபரணங்களை யணிந்துக்கொண்டு நீலநிறமான மேல்விரிப்பால் மறைக்கப்பெற்றதும், அதிகப்பெரிதல்லாத கட்டிலில், வெண்ணிறத் தலையணை

யிற் சார்ந்து நித்திரை செய்யும் இப்பெண்மணிதானோ புவனசுந்தரி? என்னே அதிசயம்! கீழே மணிமயமான தரையின்கண் இவளது பிரதிபிம்பம் தோன்றியிருப்பதால் நாகங்களால் பாதாள லோகத்திற்கு அபகரித்துக்கொண்டு போகப்படுபவள் போலவும், பக்கங்களில் நாற்புறமு மிருக்கும் இரத்தினச் சுவர்களில் இவளது பிரதிபிம்பம் தோன்றியிருப்பதால் திக்பாலகரால் எடுத்தேகப் படுபவள் போலவும், மேலே மணிமண்டபங்களுள் இவளது பிரதிபிம்பம் தோன்றியிருப்பதால் தேவர்களால் தூக்கிக்கொண்டு போகப்படுபவள்போலவும் காணப்படுகிறது. என்ன இவளது சுந்தரம்! இவள் அண்டர்பூபதி வனிதையோ? தங்கத்தைப் பங்கம்செய்த மேனியையுடையவளா யிருக்கிறாள். இவளுடைய உதடுகளைப் பார்த்தால் புதிய வாலிபப் பருவமென்னும் வாயுவினால் அலைக்கப்பெற்ற காதலாகும் கடலிற்கிளம்பிய இரண்டு அலைகளுக்கொப்பான பவளக்கொடிபோல் சிவந்திருக்கின்றன. மிக்க மதங்கொண்ட யௌவனமாகும் யானையின் மதநீர்ப்பிரவாகம்போன்ற இரண்டு புருவங்களாலும், முகத்திற் பற்றியிருக்கும் மனச்சிலைச் சார்ந்துகொண்டு இட்டப்பட்ட திலகத்தினாலும் இவளது நெற்றிக்கட்டுத் துலங்குகின்றது. இவளுடைய நித்திரையை நான் இப்போது பங்கம்செய்தால், ஒருக்கால் என்மீது விருப்பமில்லாவிடில், சேவர்களால் என்னைப் பிணித்துச் சிறையிடில் நிராதவசையும், சங்கடமும் சம்பவிக்கும். ஆகையால் முன்னதாக இவளுடைய மனதைச் சோதித்தல்வேண்டும். இவளருகில் வைத்திருக்கும் வாசனைத் திரவியங்களை நான் எடுத்

துச் செல்வேனுகில் இவள் விழித்தவுடன் சுகந்தங்கள் களவாடப்பட்டிருப்பதைப்பார்த்து, யாரோ ஆடவன் இக்காரியம் செய்திருக்கவேண்டும் என்று நினைத்து நாளைக்கு விழித்திருப்பாள். அப்போது யான் நேரில் பேசிக்கொள்ளுவேன்.

(நிட்கிரமித்தல்)

புவனசுந்தரி.—சகி வனஜாட்சி! இஃதென்ன புதுமை பார்த்தனையா? நேற்றிரவு யான் நித்திரைக்குச் சென்றபோது உன்னுல் அவ்விடம் கொண்டுவந்து வைக்கப்பட்ட வாசனைத்திரவியங்களை ஏதோ என் மனேவியாகுலத்தால் நான் அணிந்துகொள்ளாமல் அப்படியே வைத்துவிட்டு சயனித்துக்கொண்டேன் இப்போது அவைகளிருக்கின்றனவா பார்த்தனையா?

வனஜாக்ஷி.—சகி! வாஸ்தவந்தான். அவை காணப்படவில்லை. இவ்வளவு துணிகரமாக ஒருவரும் இவ்விதம் எடுக்கமாட்டார்களே.

புவனசுந்தரி.—சகி! இதனுல் என்ன புலப்படுகின்றதென்றால், யாரோ ஒரு சுந்தர புருஷன் இவ்விடம் வந்திருக்கவேண்டும். அவன் இராஜவம்சத்தில் தோன்றிய க்ஷத்திரியனுகவுமிருக்கவேண்டும். என்னைவிட சுந்தரவானுக இருக்காவிடில் அவன் என்னைப் பார்த்து மன்மதனுடைய உபத்திரவத்தினுல் என்னைப் பரிசிக்காமல் சென்றிரான். இன்று வந்து போனவன் நாளைக்கும் வாராமலிரான். ஏதோ என்மனதைப் பரிட்சிக்கும்பொருட்டே சுகந்தங்கள் மாத்திரம் அபகரித்துச் சென்றிருக்கிறுன். இன்று இரவு விழித்திருந்து அன்னவனைக் காணவேண்டும்.

பூபாலன்.—நேற்றைய இரவு நான் சுகந்த பரிமளங்களை பள்ளியறையிலிருந்து களவாடிவந்த சங்கதி புவனசுந்தரிக்குத் தெரிந்திருக்கும். அன்றிரவு அவள் விழித்துக்கொண்டுதா னிருப்பாள். ஆனால் இரவு 12-மணியாகியும் என் நண்பன் தனஞ்செயன் தூங்காமல்விழித்திருக்கிறான். என்செய்வது..........? நண்பா ! ஓ ஓ! நல்ல நித்திரையிலிருக்கிறான்; நான் சமுத்திரக்கரை சேர்ந்து அஸ்வத்தின் மேலேறி புவனசுந்தரியினிடம் செல்வேன்.

புவனசுந்தரி.—சகி வனஜாக்ஷி ! நேற்று வந்த கள்வனைப் பிடிக்க இன்று 12-மணி வரையில் விழித்திருந்தும் யாரும் வரக்காண்கிலேன். ஒருவேளை நம்முடைய சேடியர்களால் களவாடி யிருத்தல்கூடும். எனக்கோ நித்திரை வருகின்றது. நீ உன் படுக்கை யறைக்குச் செல்வாயாக. நான் சயனித்துக்கொள்ளுகிறேன்.

பூபாலன்.—என்ன ஆச்சரியம் ! இன்று கூட இக்காவலர்கள் நல்ல நித்திரையிலிருக்கிறார்கள். என்ன, நான் நினைத்திருந்ததற்கு முற்றும் மாறாகவே யிருக்கிறது. இன்றைக்கிவள் விழித்திருப்பாளென்று நினைத்தேன். அப்படிக்கில்லாமல் அயர்ந்து நித்திரை செய்கின்றாள். ஒருவேளை நான் நேற்றையதினம் களவாடிச் சென்றதைக் கவனித்திராள் போலும். இவ்விடம் நடந்த சங்கதி ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. காமர்பூங் கொடியே ! கற்பகத்தருவே ! கருணையங்கொழுந்தே! கண்ணினுண் மணியே ! மணியினுள் ளொளியே ! ஒளியினுட்சுவையே ! என் மனத்தை யுறைவிடமாகக் கொண்டிங் கெழுந்தருளிய கண்ணே! நின் பொன்னடி

டிப்போதை யணைந்த தென்னுருயிர், அதையே யிறையா யங்கீகரிப்பையே மானே! நின்னையன்றி யினிமேல் வருங் காலந்தன்னில், யானும், என்னன் பும் வாழ்தலும் வீணே. தேன்மொழிச் செல்வி! நினது கமல இதழ்போன்ற கோமளமான கரங்களால் என்னை யழுந்தப்புல்லி ஆசையைத் தீராயோ? இன்று நீ விழித்திருந்து என் ஆவலைத்தீர்ப்பாயென்று எண்ணியிருந்தேன். நீ நாளை இரவாகிலும் விழித்திருந்து என் மனோரதத்தை நிறைவேற்றுவாயென்று நம்புகிறேன். உன்கழுத்தி லணிந்திருக்கும் இரத்தினமாலையைக் கழற்றிச் செல்வேனாகில் உனக்கு அது ஆச்சரியத்தை யுண்டுபண்ணாமலிராது, இதோ கழற்றிச் செல்கிறேன்.

புவனசுந்தரி.—(விழித் தெழுந்ததும்,) சகி! வனஜாக்ஷி! என்ன ஆச்சரியம். நாம் இருவரும் இரவு 12-மணி வரையிலும் விழித்திருந்தும் யாரும் இவ்விடம் வரவில்லை. பின்பு அயர்ந்து நித்திரைப் போய்விட்டேன். என் பிராணனுக்குச் சமானமான சகி! நான் என்னவென்று சொல்வேன். சொல்ல எனக்கே லஜ்ஜையாகவிருக்கிறது. ஆயினும் உன்னுடன் சொல்லாமல் இனி யாருடன் சொல்வேன். மூன்று நாளிரவில் இங்கு வாசனைத் திரவியங்கள் களவு செய்யப்பட்டதென்று நான் தெரிவித்ததற்கு, ஏதோ ஒரு போக்காக நீ மறுமொழி புகன்றனை. இப்போதோ என் கழுத்திலணிந்திருந்த இரத்தினமாலை களவுபோயிருக்கின்றது. இது ஓர் யௌவன க்ஷத்திரிய குலத்தில் பிறந்து, மன்மதனைப் பழிக்கும் ரூபத்தையுடையவனே செய்திருக்க வேண்டுமே யொழிய வேறெவராலும்

செய்யப்பட்டதல்ல. ஆ ஹா! இன்னும் சற்றுநேரம் விழித்திராமல் போய்விட்டேனே. எப்படியாகிலும் இன்றிரவு விழித்திருந்து அன்னவனைக் கண்டு தெளிவேன். அவனோ நான் வெறுக்கத்தக்கவனாக இருக்கமாட்டானென்பது திண்ணம். ஏனெனில் முதல்நாளிரவே என்னைக் கண்டவுடன் அவன் என்னுடைய நித்திரைக்குப் பங்கம் வரும்படிச் செய்து மன்மதனால் பீடிக்கப்பட்டவனாகி ஆற்றாது என்னை பலவந்தஞ்செய்திருப்பான். அல்லது நேற்றிரவாகிலும் அவ்வாறு செய்திருப்பான். அவன் என்னை விட சுந்தரபுருடனாகவும், நல்ல குலத்தி லுதித்தவனாகவே யிருக்க வேண்டுமென்பது தெற்றென விளங்குகிறது. சகி! நீ அந்த மஞ்சத்தைச் சிங்காரித்துவை. நான் நித்திரைச் செய்பவள்போல் விழித்திருக்கிறேன்.

(சயனித்துக்கொள்ளல்.)

8-வது அத்தியாயம்.

பூபாலன் புவனசுந்தரியை காந்தர்வமணம் செய்தல்.

பூபாலன்.—ஓ ஹோ! இன்னும் இக்காவலர்கள் நித்திரையி லிருக்கிறார்கள். இம்மங்கையோ இன்றுகூட நித்தி ரையி லிருக்கிறாள். (சற்று உரத்தத் தொனியுடன்) ஏ! சுந்தராங்கி! இரண்டுநாளாக நான் இவ்விடம் வந்து உன்னுடைய சௌந்தரியத்தைப் பார்த்து சகிக் கக்கூடாத மன்மதனுடைய கொடுஞ் செயல்களுக் குட்பட்டிருக்கிறேன். நான் வந்து போன சங்கதி உனக்குத் தெரிவிக்கவேண்டுமென்று முதல் தினம் களப, கஸ்தூரி முதலிய வாசனைகளையும், இரண்டாம் நாள் நின் கழுத்தி லணிந்திருந்த இரத்தின மாலையை யும் அபகரித்துச் சென்றேன். அவைகளைப்பற்றி நீ கவனிக்கவில்லையோ? அல்லது புருடனை இச்சிக்கலா காதென்னும் வைராக்கியத்தினால் என்னை வெறுத்தி ருக்கின்றனையோ? யாது மறிகிலேன். என் மனதுக் கிசைந்த சுந்தராங்கி! நின் அழகியகண்களால் என்னைச் சற்று ஏறெடுத்துப் பார்த்து ஒரு வார்த்தையாகிலும் என்னிடம் வசனிக்கக்கூடாதா? ஆ! என்ன ஆச்சரி யம், நான் இவ்வளவு நேரம் என்னுவலைப் பலவாறு மொழிந்தும் இம்மடநல்லாள் விழித்தாளில்லை. நல் லது இன்றைய தினம் இவள் புஜத்தி லணிந்திருக்கும் இரத்தினவங்கியைக் கழற்றிச்செல்வேன். இது தப்

பாமல் இவளுக்கு நினைப்பு மூட்டாமற் போகாது. ஆகையால் இதைக் கழற்றுகிறேன். என்னே! இக் கரத்தினது வனப்பு! இக்கரத்தினது உருட்சி மூங்கிலைத் தோற்கடிக்கின்றது.

புவனசுந்தரி.—(பூபாலன் கையைப் பிடித்துக்கொண்டு) மங்கையர் மனங்கவரும் சுந்தராங்கா! யாவரும்வருவதற் கியலாத இவ்வாழி மத்தியில், கடுங்காவலைக் கடந்து, அதிக தீரத்துடன் இவண் வந்ததாம் யார்? எனக்கறிவிக்க விரும்புகிறேன்.

பூபாலன்.—ஆயிழையே! அறிவிப்பேன் கேட்பாயாக. யானே விதர்ப்பநாடாளும் கீர்த்திசீல மகாராஜாவின் ஏகபுத்திரன். என் நாமதேயம் பூபாலன். யான் முடி சூட்டிக்கொள்ளுமுன் பிரபஞ்சத்தின் இயற்கை சுபாவ மறியவேண்டி என் தவப்பயனால் கிடைத்த அஸ்வத்தின்மேல் என் மனைவி சுந்தரவல்லியுடனும், மந்திரிகுமாரன் சுபுத்தியுடனும் ஆகாயமார்க்கமாகச் செல்கையில் எனது மனைவியும், நண்பனும் ஆழியில் விழ, அன்னவர்களுடைய பிரிவாற்றாமையால் யான் மூர்ச்சித்து அஸ்வத்தின்மீது சாய்ந்துவிட்டேன். பிறகு நின் தேசமாகிய மாவிந்தநகரத்தில் சமுத்திர தீரத்திலிறங்கி, தாகவிடாய்த் தீர்த்துக்கொள்ள சமீபத்திலிருந்த ஓர் குளத்தை நாடிச் சென்று நீரை யருந்தி மூர்ச்சையடைந்தேன். அவ்விடம் ஓர் தனவந்தனுடைய குமாரனை தனஞ்செயன் என்பவனால் தேற்றப்பட்டு அரசனுடைய இல்லம் அடைந்து அவனால் ஆதரிக்கப்பட்டு வருகையில், நின் விருத்தாந்த மனைத்தையும் அவனால் சொல்லக்கேட்டு நின்னைக்

காணவந்தேன். அன்றையதினம் நீ நல்ல நித்திரையிலிருந்தபடியால் நின்னை எழுப்பலாகாதெனை உன் சமீபம் வைத்திருந்த வாசனைத் திரவியங்களைக் களவாடிச் சென்றேன். மறுநாளும் நீ நித்திரையிலிருந்தபடியால் உன் இரத்தினமாலையைக் கவர்ந்துச் சென்றேன். இன்றும் நீ நித்திரையிலிருந்தபடியால் உன் புஜத்திலணிந்திருக்கும் இந்த இரத்தின வங்கியைக் கழற்றுகையில் நீ விழித்துக்கொண்டனை. அமிருத கலைகளால் அகிலலோகங்களையும் ஆனந்திப்பிக்கின்ற பூர்ணேந்துவையொத்த வதனமுடைய ஹே சுமுகி! உனது அங்க சௌந்தரியம் முற்றும் பார்க்கப் பதினாயிரங் கண்களிருப்பினும் போதா! கொடிய பாவி மதனன் என்னைக் கொல்கிறான். என்மேல் கிருபை செய்து என்னுடைய அழகிய கைகளால் என்னைத் தழுவி யாதரிக்கவேண்டும். நீ தனியாய் இவ்விடமிருப்பதில் யாது சுகம். தந்தியில்லாத வீணையும், சக்கிரமில்லாத இரதமும்போலுமன்றோ பதியில்லாத ஸ்திரீகளின் வாழ்க்கை.

புவனசுந்தரி.—(தனக்குள்) ஹா! என்ன இம்மன்னவனது சுந்தரம்?

"திருக்கிளர் முகமும் வேர்வும் சிறந்தசெம் பவளவாயும்
மருக்கிளர் மாலைமார்பும் மகரகுண் டலமுங்காதும்
சுருக்கிய மருங்குங்கண்டாற் றுடியிடை மடவாராவி
இருக்கினு மிருக்குநில்லா திறக்கினு மிறக்குமன்றே,"

ஹா! இவரது,

"சிரந்தர வுரோமரேகை நீலமும் வயிறுமார்பும்
புரந்தர சாபமொத்த புருவமு நுதலும்பட்ட

மாந்தழைத்திட நகைக்கு முறுவலு மாயன்றன்பால்
கரந்தவா ரமுதச்சொல்லும் கந்தர்க்கு மில்லையன்றே."

(பகிரங்கமாய்) மங்கையர் மனங்கவரும் மன்னவா! தாம் முதல்நாளிரவு இங்குவந்து வாசனைத் திரவியங்களையும், இரண்டாநாளிரவு யான் கழுத்திலணிந்திருந்த இரத்தின மாலையையும் களவாடிச்சென்ற காரணம் யாது?

பூபாலன்.—ஆயிழையே! அப்படி யான் செய்ததற்குக் காரணம் யாதெனில், யான் உன்னுடைய மனநிலையை நாடாமல் திடீரென உன்னையான் எழுப்புவேனாகில் ஒருவேளை நீ சீற்றங்கொண்டு காவலாளிகளுக்குத் தெரிவிக்க நேரிடின் யான் அதிகத் துன்பத்துக்குள்ளாக வேண்டுமே என்னும் எண்ணத்துடன் யான் இவ்வாறு செய்யத்துணிந்தேன். இனி உன் இன்ப ரசமான கோகிலத்தொனியையும், மாறனை மருட்டும் வில்லைப்போன்ற உன் புருவத்தினழகையும் யான் பார்த்தவுடன், இனி அவ்வித சிட்டைக்கு யான் அஞ்சேன். ஆரணங்கே! உன் அன்பான கடாக்ஷமென்னும் மாலைகள் என் மனதைப் பலாத்காரமாய்க் கட்டி உன்னையணைய இழுக்கின்றன. திருமாலையும் மயங்கச் செய்வதான வசீகரத்தையுடைய ஸ்ரீதேவி வாசம் பண்ணுகின்ற சிவந்த இதள்களையுடைய செந்தாமரை மலரும், விரிவான பெருமையையுடைய வேதசாஸ்திரங்களைச் சொன்ன சதுர்முகப் பிரமதேவன் உற்பத்தியான வெண்டாமரை மலரும் உன் வதனத்துக்கு ஈடாகமாட்டாது.

மந்தகமனை!

"அறந்திகழ் தவமினி யகிலமு மிதனை
வழியுமென் றயன்படைத் திலனோ

சிறந்தவேல் விழியை முன்படைத் தயர்ந்து
செங்கரஞ் சேர்ந்ததோ திகைத்து
மறந்ததோ காந்து வைத்ததோ களப
வனமுலைப் பொறை சுமந்துருகி
இறந்ததோ உளதோ இல்லையோ இனிமே
லெய்துமோ வுன்னுட னிடைதான்."

பெண்ணரசே! உன் மாசற்ற வடிவைக்கண்டுதான் சந்திரன் நாணமுற்று தன் கிரணங்களை யெல்லாம் மறைத்து நாளுக்குநாள் தேய்ந்து நலிந்துவிடுகின்றனனோ? உன் வசனாமிருதத்தையுண்டுதான் குயிலினங்கள் அஞ்சுகின்றனவோ? உன்னடையைக்கண்டுதான் அன்னப்பேடுகள் அசர்ச்சிக் கொள்ளுகின்றனவோ? ஏ பத்மாக்ஷி! என் மீது கருணைபுரிந்து எந்தனை யாலிங்கனஞ் செய்து நினது அதராமிருதத்தைத் தருதியேல் யான் எனது உடல், பொருள், ஆவி மூன்றையு முனக்கே ஒப்புவித்து நினக்கே அடிமை செய்வேன்.

புவனசுந்தரி.—என் ஆருயிர்க் காதலா! தாங்கள் இவ்வளவு பரவசம் செய்ததே போதுமானது. நான் இவ்வளவுதூரம் கேட்டேனென்று நீர் ஆயாசப்படவேண்டாம், தங்களுடைய குணாதிசயங்களையும், சுந்தரத்தையும், நீர் செய்த சோரகிருத்தியங்களாலேயே யான் அறிந்தேன். இனி நாமிருவரும் மனமொத்து காந்தருவமணமாகக் கூடுவோம்.

(இருவரும் பள்ளியறைக்கு நிட்கிரமித்தல்.)

பூபாலன்.—ரமணீ! உதயக்காலம் சமீபிக்கிறது. யான் மூன்றுதினங்களாக என் மித்திரன் நித்திரையி லிருக்

கும்போது யான் இங்கணுகி, பின் உதயகாலத்தில் அவன் விழித்துக்கொள்ளுமுன் யான் அவன் பக்கலில் சயனித்துக் கொள்வது வழக்கம்: ஆகையால் இன்றும் அவ்வாறே செல்லவேண்டும். உத்தரவு கொடுப்பாயாக.

புவனசுந்தரி.—நாதா! தாங்கள் என்னைவிட்டுப் பிரிவதென்றால் என்மனம் சகிக்கவில்லை. ஆனபோதிலும் நாம் இருவரும் இவ்விடம்விட்டு தங்களுடைய நாட்டைச் சேரும் வரையில் யாருக்கும் தெரியாமலிருக்கவேண்டுமாகையால் அப்படியே தாங்கள் பகற்காலத்தில் தம்முடைய சினேகரிட மிருந்து இரவானதும் இங்கு வந்துக்கொண்டிருக்க வேண்டியது. தாங்கள் அடுத்த இரவு அதிதீவரமாக வந்து என்னை யாதரிக்க வேண்டும்.

(நிட்கிரமித்தல்.)

தனஞ்சேயன்.—என்ன விந்தையா யிருக்கிறது. என் நண்பன் தருமநந்தனைக் காணும். இந்த இரவில் எங்கு சென்றிருப்பான். இப்போதே இரவு 3-மணியாகின்றது. அவன் செல்லக்கூடிய இடம் இன்னகரத்திலெங்குள்ளது? எனக்குத் தெரிவிக்காமலும் எங்கு சென்றிருப்பான்? ஒருவேளை நான் அவனுக்குத் தெரிவித்திருந்த புவனசுந்தரியி னிருப்பிடம் சென்றுனோ? அவ்விடம் சென்றிருப்பாளுகில் தப்பாது ஆங்கு துன்பம் நேரிட்டிருக்கும். என்ன என் துர் அதிர்ஷ்டம்! நல்ல குணமமைந்த நண்பன் எனக்குக் கடவுளுடைய கிருபையால் கிடைத்தானென்று மகிழ்ந்

திருந்தேன். என்னுடைய வாக்கினாலேயே நான் கெட்டேன். அந்த புவனசுந்தரியைப்பற்றி நான் அவனுக்குத் தெரிவிக்காமலிருந்தால் அவன் அவ்விடம் போகான். இனி என்ன செய்வது? அவனுக்கு என்ன ஆபத்துகள் அவ்விடம் ஏற்பட்டதோ? யாதுமறிகிலேன். ஆ! இதோ என் நண்பன் அதிதீவிரமாக வருகின்றான். நண்பா! இன்றிரவு நீ எங்குசென்றனை? உன்னைக்காணாது மிகவும் வருந்தினேன்.

பூபாலன்.—நண்பா! உன்னிடம் நடந்த சவிஸ்தாரத்தை யுரைக்காவிடில் இனியாருடன் சொல்லப்போகிறேன். நீ புவனசுந்தரியின் ரூபலாவண்யத்தைச் சொன்னது முதல் எனக்கு அவள்மேல் அதிக தாபமுண்டாகி மூன்று நாளிரவில் நீ சயனித்து நித்திரைப்போனவுடன் யான் ஆழிமத்தியகிரகம் சென்று புவனசுந்தரி அதிக நித்திரையிலிருந்தமையால் எழுப்பின் என்ன ஆபத்து விளையுமோவென அஞ்சி, அவள் மனதைச் சோதிக்கக்கருதி அவள் சமீபம் வைக்கப்பட்டிருந்த சுகந்தபரிமளங்களைக் கவர்ந்து வந்தேன். இரண்டாநாளிரவில் மறுபடியும் ஆங்குச்சென்று, அக் கட்டழகி முன்போல் நித்திரையி லிருந்தமையால் அவள் கழுத்திலணிந்திருந்த இரத்தினமாலையைக் கழற்றிக் கொண்டுவந்து விட்டேன். இவ்விரண்டு இரவிலும் நீ நித்திரையைவிட்டு எழாமுன் நான் உன் சமீபம் வந்து சயனித்துக்கொண்டேன். இன்றிரவோ ஆங்குச் சென்றதில் அவ்வணங்கு நித்திரையிலிருப்பதாக வெண்ணி கையிலணிந்திருக்கும் இரத்தின வங்கியைக் கழற்றுகையில் அக்கன்னி என் கரத்தைப் பற்றிக்

கொண்டாள். பின் என்விருத்தாந்தங்களைத் தெரிவித்தபின் என்மேல் விருப்பமடைந்து என்னைக் காந்தர்வ மணம் செய்துக்கொண்டாள்.

தனஞ்சேயன். நண்பா! உனக்கு மங்களமுண்டாகுக. நீ அவளுடைய நேசத்தைப்பெற்று அவளைக் காந்தர்வ மணம்புரிந்ததைப்பற்றி நான் மிகவும் சந்தோஷிக்கிறேன். உனக்கு அவ்விடம் ஏதாகிலும் ஆபத்துக்கிடமாகுமென்றே நீ அங்கு செல்லக்கூடாதென்று முன் நான் தடுத்தேன். ஆனால் நீ இவ்வளவு சாமார்த்தியமாய் அவளிடம அணுகக் கூடியவரென்று நான் உணர்ந்திலேன். இனி நீ இன்றுமுதல் பிரதிதினமும் இரவில் அவ்விடம்சென்று பகலில் என் மனைக்கே வந்து விடவேண்டும். ஏனெனில் பகற்காலத்தில் அவ்விடம் காவற்காரர் முதலியோரால் நீ கண்டுபிடிக்கப்படின் புவனசுந்தரியின் சிற்றன்னையான ரூபாவதியினால் கொடுந்தண்டனைக்குள்ளாவாய்.

(நிஷ்கிரமித்தல்.)

புவனசுந்தரி.—சகி! வனஜாக்ஷி! பார்த்தாயா என் சாமர்த்தியத்தை? இரண்டு நாள் கள்ளத்தனமாக வந்துச்சென்றவரை கையும்பிடியுமாகப் பிடித்து விட்டேன்.

வனஜாக்ஷி.—சகி! நீ ஒன்றும் எனக்கு விஸ்தாரமாகச் சொல்லவேண்டுவதில்லை. அன்றிரவு நடந்த சங்கதிகள்யாவும் நான் திரைமறைவிலிருந்து அறிந்தேன். உனக்கேற்ற புருஷனென்றும் அவன் சவுந்தரியத்தையும் கண்டு மகிழ்ந்தேன். மற்றச் சேடியர்க

ளுக்கும், காவற்காரர்களுக்கும் அவர் இங்குவந்து போவது தெரியாதிருத்தல்வேண்டும். இராவிடில் உன் சிற்றன்னையால் கொடுந்தண்டனை நமக்கு சம்பவிக்குமென்பது திண்ணம்.

பூபாலன்.—என் கண்மணியை இப்பகல்முழுதும் பார்க்காமலிருப்பது மிகவும் கஷ்டத்துக்கிடமாக விருக்கிறது. இப்போதுதான் சூரியபகவானும் மெதுவாக மேற்றிசையாகும் மங்கையர் செவியில் அணியும் செங்குவளை மலர்போல் இவ்வுலகம்விட்டு சாய்கின்றான். பங்கயப்பூக்கள் பகலில் பானம்செய்த வெயில் அனைத்தையும் அடியோடு அகற்றும்பொருட்டு உள் நுழையும் இதழ் இதழான இருள்களுக்கேற்க வண்டுகளின் இனங்கள் செந்தாமரைமலர்களின் உட்புறங்களிற் புகுந்துகொண்டன. அந்திப்பொழுதின் செவ்வானமும் மெல்ல மெல்ல மறைந்துவருகின்றன. சந்தனக்குழம்பின் வெள்ளத்தை வாரி யிறைக்கின்றது போலும், அமுதக்கடல்பெருக்கைக் கொப்பளிப்பது போல் சந்திரமண்டலம் தனது நிலவினால் இவ்வுலகமனைத்தையும் நனைந்துவிட ஆதிவராகனது கோரப் பல்லின் வலயத்திற்கொப்பான சந்திரனால் பாற்கடலிலிருந்து பூமண்டலம் பெயர்த்தெடுக்கப் படுவது போல் தோன்றுகிறது. இனி யான் என் நாயகிபாற் செல்கின்றேன். காதலி! இன்று பகற்பொழுதைக் கழிப்பது எனக்கு மிகவும் பிரயாசையாய் ஏற்பட்டது இப்படியே பிரதிதினமும் காலத்தைக்கழிப்பதென்றால் வெகு கஷ்டத்தை யான் அனுபவிக்க நேரிடும்போல் தோன்றுகிறது. ஆகையால் கூடியசீக்கிரத்

தில் என்னூட்டிற்கு உன்னையழைத்துச்செல்ல முயலு வதே தகுதி.

புவனசுந்தரி.—நாதா! என்மனதிற் றோன்றியதை தாமே மொழிந்தீர். பகற்காலங்களிற் தம்மைவிட்டுப் பிரிந்திருத்தல் மிகக்கடினமாக விருக்கிறது. இன்றுமுழுதும் அந்தப்புரத்து உப்பரிகையில் ஏறி தோழிமாரையும் விட்டுவிட்டு நான் ஒருத்தியாகவே மணிமயமான சாளரத்தின்கண் முகம்வைத்தவளாய் நீர் சென்றிருக்குந் திசையைப் பார்த்துக்கொண்டே யிருந்தேன். அத்திக்கிலிருந்துவரும் வாயுவினிடமிருந்தும், வனத்தின் மலர்களது மணத்தினிடமிருந்தும், பறவைகளின் தொனியினிடமிருந்துங்கூட உம்முடையவிருத்தாந்தத்தைக் கேட்க ஆவலுள்ளவளாக விருந்தேன். வெகு தூரத்திலிருக்கும் கதிரவனுக்கு எதிராக மலரும் கமலம்போல் எதிர் முகமாக விருந்தேன். ஆகையால் உம்மைப் பிரிந்திருப்பதில் எனக்கு வருத்தத்தை யுண்டாக்குகிறது. தம்முடன்கூட தம்முடைய நாட்டிற்குவர சித்தமாயிருக்கிறேன்.

பூபாலன்.—காரிகையே! இன்று உதயம் யான் நகரஞ்சென்று என் நண்பன் தனஞ்செயனிடம் விடைபெற்றுக்கொண்டு வருகிறேன். நாளைக்கே நம்முடைய நகரஞ்செல்வோம். சென்றுவருகிறேன்.

(நகரஞ்சேர்தல்)

தனஞ்செயன்.—நண்பா! பிரதிதினமும் நீ ஆழிமத்திய கிரகம் சென்று வருமளவும் நான் உயிரைவிட்ட உடல்

போல் இருக்கிறேன் எந்தசமயத்தில். உனக்கென்ன ஆபத்து நேரிடுமோ என்னும் வியசனம் எனக்கதிகரித்திருக்கிறது. அறியவேண்டியவை யனைத்தையும் அறிந்து, கல்விகளை எல்லாம் கற்ற உந்தனுக்கு உபதேசிக்க வேண்டிய விஷயம் சிறிது மில்லது, என்றாலும் வாலிபப்பருவத்தி லுண்டாகும் அஞ்ஞானமாகிய இருளோ தீபங்களின் ஒளிகளால் நீக்கக்கூடாததும், சூரியனாலும் விலக்கமுடியாததுமான அவ்வளவு மிகவும் அடர்த்தியானது. விருதாப்பியகாலத்திலும் தணியாததான செல்வச்செருக்கினால் உண்டாகும் இருமாப்பு மிகக்கடுமையானது. பிரபுத்தன்மையென்னும் இம்மாசு படர்ந்த அந்தகத்தன்மையானது எவற்றாலும் அகற்றக்கூடாததா யிருக்கின்றதென்பது மற்றொரு துன்பமாகுமெனக் கருதியே உமக்குத் தெரிவிக்கிறேன். பிறவிச்செல்வம் வாலிபப்பருபம் நிகரில்லாவடிவழகு மானிடத்தன்மைக்கும் மேலான திரமை என்கிற இவையாவும், மஹத்தான தீங்குகளின் பரம்பரைகளல்லவா? இவைகளில் ஒவ்வொன்றுமே அவ்விஷயம் அனைத்திற்கும் ஆதாரமாகும். ஆனதால் அவ்வெல்லாவற்றினது சேர்க்கையதென்பதைக்கூரவும் வேண்டுமோ? யௌவன ஆரம்பத்தில் அறிவானது சாதாரணமாய் சாத்திரங்களென்னும் நீரினால் அலம்பப்பெற்று நிர்மலமற்று இருந்தபோதிலும் கலங்கி விடுகின்றது. மண்ணைச் சுழற்றி வாரிக்கொண்டு சிதறிக்கிடக்கும் இலைச்சருகுகளை இழுத்துச் செல்லும் சுழற்காற்றுப்போல பிரகிருதியென்னும் மாயையானது இரஜஸ் என்னும்

குணத்தினு லுண்டாகும் ப்ரவாகத்தை யுண்டுபண்ணி தனதிஷ்டப்படி புருடனை இளமைப் பருவத்தில் வெகுதூரம் வலுவில் இழுத்துவிடுகின்றது. சிற்றின்பங்களி லுண்டாகும் பெரும் பற்றனது திக்பிரமை போல் துன்மார்க்கங்களில் செல்லத்தூண்டி, மனிதனை மிகவும் நாசமடையச் செய்கின்றது. பிரகாசம் பொருந்திய படிகமணியில் சந்திர கிரணங்கள்போல மாசற்ற மனத்திலல்லவோ உபதேச குணங்களெல்லாம் நன்றாகநுழையும். மூத்தோர்சொல்லும் வார்த்தை நிர்மலமாகவே யிருப்பினும் அது கேடுண்ட மானிடரின் காதுகளில் நீரைப்போல சென்று, அவர்களுக்கு மிகவும் துன்பத்தையே தருகின்றது மற்றவர்களுக்கோ யானைகளுக்குக் கன்னத்திலிட்ட ஆபரணம்போல் சோபையை மிகுதியாய் உண்டாக்குகின்றது. மிகவும் மலினமான இருள் அனைத்தையும், அந்திப்பொழுதிலுதிக்கும் அம்புலிபோல், உபதேசமானது சமஸ்த தோஷங்களையும் நீக்கும் மன்மதபாணங்கள் தாக்கிச் சிதறுண்ட இருதயத்தில் உபதேசிக்கும் யாவும் சில்லிக்கலத்திலிட்ட நீர்போல் ஒழிகிவிடும். ஆதலால் நண்பா ! நீ இன்று முதல் புவனசுந்தரியினிடம் போகாமல் அவள் நட்பை மறந்துவிடு. மற்றோர் சங்கதியை உன்னிடம் சொல்ல மறந்தேன். அதாவது, என்பிதா வயோதிகத்தினுல் அவர் இதுவரையில் செய்திருந்த வியாபாரத்தைச் செய்ய அசக்தராய் என்னை அத்தொழில்செய்ய உத்தரவிட்டமையால் யான் சென்றுவருகிறேன். நான் வருமளவும் நீ இவ்விடத்தைவிட்டகலாமல் இரவும் பகலும் இவ்

விடத்திலிருக்கும் ஐசுவரியத்தைப் பாதுகாத்திருத்தல் வேண்டும். அப்படிச் செய்யாவிடில் கள்ளர் முதலியோரால் இவ்விடத்தி லிருக்கும் சொத்துக்களெல்லாம் அபகரித்துக் கொள்ளக்கூடும். இது விஷயமாக உம்முடைய அபிப்பிராயம் இன்னதெனத் தெரிய ஆவலுள்ளவனா யிருக்கிறேன்.

பூபாலன்.—(தனக்குள்) ஆ! நாம் ஒன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்ததே! நாம் நமதாருயிர்ப் பிரியையுடன் இன்றிரவு நமது நகரஞ் செல்வதாய், நண்பனிடம் சொல்லி விடைபெற்று வருவதாயும், பிரயாணத்திற்குச் சித்தமாயிருக்கத் தெரிவித்திங்குவர, நண்பன் தெரிவித்த சங்கதியைக்கேட்க ஒன்றும் தோன்ற வில்லையே! அவனுடைய வார்த்தையை மறுப்பதோ அழகல்ல. நான் நண்பன் திரும்பி வருமளவும் நாயகியினிடம் செல்லமுடியாது. நாயகியோ என் வரவை யெதிர்பார்த்து மிகத் துன்பப்படுவாள். இதற்கென்ன செய்யலாம்? நண்பன் சொன்னப் பிரகாரம் அவன் திரும்பி வருமளவும் இங்கிருந்து பிறகு நம் காதலியினிடம் சென்று சமாதான முரைத்துப் பின் நகரஞ் செல்லலாம். இதைவிட வேறு செய்யத் தக்க தொன்றுமில்லை. (பஹிரங்கமாய்) நண்பா! உன் வார்த்தையையும் யான் தடுத்து மறுமொழி பகர்வேனோ? நீ எனக்குச் செய்த உதவிக்கு நீ பணித்த இச்செயலை யான் செய்வது பெருங்காரியமா? அப்படியே நீ வியாபாரம் செய்துத் திரும்பி வருமளவும் கொடிப்பொழுதேனும இவ்விடம்விட் டகலமாட்டேன். நீ சுகமாகச் சென்று வரலாம்.

(நிட்கிரமித்தல்.)

புவனசுந்தரி.—சகி, வனஜாக்ஷி! என்னை நகரத்திற் கழைத்துச் செல்வதாக சொல்லிப்போன மன்னன் இதுவரையில் வராத காரணம் யாதொன்றும் விளங்கவில்லை. என் மனம் மிக்க கவலைப்படுகின்றது. இன்னது செய்வதென்று எனக்குப் புலப்படவில்லை. அவர் இங்கு வந்துச்சென்று மூன்று தினங்களாகின்றன. என்னைச் சிநேகித்த நாள் முதல் இது வரையிலும் ஒரு நாளாகினும் இவ்விடம் வராம லிருந்ததில்லை. நானோ இப்போது கர்ப்பவதியாய் விட்டேன். இந்த நிலையில் அவர் என்னைவிட்டு நீங்குவாராயின் என் கதி என்னமாகும்? ஒருவேளை அவர் தன் நகரம் சேர்ந்தனரோ? என் கதி என்னமாய் முடியுமோ? என் சிற்றன்னையால் எவ்வித கஷ்டங்களை யனுபவிக்கவேண்டி இருக்கிறதோ? சகி! அவர் வார்த்தையை நினைக்குந்தோறும் என் மனம் பதைக்கின்றது. என்னாயகன் என்னைவிட்டுப் பிரிந்தபிறகு யான் உயிர் வைத்திருப்பானேன். ஆகையினால், சகி! யான் இவ்வாழியில் விழுந்து ஆழ்ந்து இறப்பதே தகுதி. இனி அரைக்கணமும் உயிர் வைத்திரேன்.

வனஜாக்ஷி.—தேவி! போதும், போதும். முகாந்தரமேதுமின்றி மரணத்திற்காக ஏன் முயல வேண்டும்? ஸ்தோத்திரிக்கப்படாமலே அருள்புரிந்த அனங்க பகவானாலேயே உமக்கு வரன் கொடுக்கப்பட்டது. இதில் யாரையும் நிந்தித்தாவதில்லை. மன்மதனே குருவைப்போல் கன்னிகையை (விவாகத்திற்கு) சங்கல்பிக்கிறான். தாயைப்போல் அநுபோதி பளிக்கின்றான். தந்தையைப்போல் காமதம் செய்கின்றான்.

தோழியைப்போல் காதலையுண்டாக்குகின்றான் தாதியைப்போல் வாலிபப் பருவத்தில் காமோபசாரத்தைக் கற்பிக்கின்றான். சுயமாகவே உன்னைப்போல் கணவரை வரித்துக்கொண்டவர் அநேகரிருக்கின்றார்கள். அங்ஙனமில்லையேல் தர்மசாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ள சுயம்வர விதியானது பொருளற்றதாகவே யாகும். ஆகையால் தேவி! மரிக்க வேண்டுமென முயற்சித்ததை நீக்குவாயாக. இத்தகைய சபலமான செய்கைகளெல்லாம் துன்மார்க்கனை அம் மன்மதனுடையதே. தேவி! மன்மதன் வடிவமும் உருவமுமிழந்த நெருப்பு ஜ்வாலைகளின் வரிசையை விளக்கிக் காட்டாமலே இவன் தாபத்தைத் தருகின்றனன். புகையை வெளிப்படுத்தாமலே கண்ணீரை வீழ்த்துகின்றான். இவனுடைய பாணங்களின் இலக்குக்கு இதுவரையில் அகப்படாமற் போனது, அல்லது அகப்பட்டுக் கொண்டிராதது, அல்லது இனி அகப்படாமலிருக்கப் போகின்றது என்கிற அத்தகைய தேதுமே இவ்வளவு பெரிதான மூவுலகிலு மிலது. இவனிடமிருந்து தப்பித்துக்கொண்டவர் எவருமிலர். புஷ்பமயமான உமது பாத பங்கஜங்களைப் பரிசித்து சபதம் கூறுகின்றேன். கட்டளையிட்டு என்னை யனுப்பும். நான் சென்று உமது மணாளனை யழைத்து வருகிறேன்.

(நகரம் செல்லல்.)

பூபாலன்.—வனஜாக்ஷி! நான் இருக்குமிடம் எவ்வாறு தெரிந்துக் கொண்டனை? என்னுள்ளம் பிடிக்கிசைந்த புவனசுந்தரி சுகமா?

வனஜாக்ஷி.—இராஜகுமாரா! தாங்கள் புவனசுந்தரியை உம்முடைய நகரத்திற் கழைத்துப்போவதாக வாக்களித்து இத்தனைநாள் வரையிலும் வராமற் போனதற்காக மிகவும் துயரப்பட்டுக்கொண் டிருக்கிறாள். இதுவரையிலும் புவனசுந்தரி உயிரோடிருக்கின்றனளோ என்னமோ தெரியாது, அப்படி உயிர் துறந்திருப்பாளேயாமாயின் அப்பெண் கொலை உம்மைத்தான் சேரும். இனி நான் இவ்விடம் காலஹரணம் செய்வதில் பயனில்லை. நான் சென்று வருகிறேன்.

பூபாலன்.—வனஜாக்ஷி! என் நாயகிக்குத் துயரத்தை யுண்டுபண்ணி உயிர் துறக்கத் துணியச்செய்தேனாகையால் இனி யான் உயிரோடிறேன். இதோ என் வாளால் சிரச்சேதம் செய்துக்கொள்ளுகிறேன்.

வனஜாக்ஷி.—(இராஜகுமாரன் கையை பிடித்துக்கொண்டு) ஆரியபுத்திரா! அவசரப்படவேண்டாம் புவனசுந்தரி ஜீவனுடனிருக்கிறாள். உம்முடைய மனதைச் சோதிக்க அவ்வாறு மொழிந்தேன். தாங்கள் இதுகாறும் அங்கு வராமையால் தங்களுக்கு என்ன ஆபத்து சம்பவித்ததோ என்னும் துயரத்தால் மாத்திரம் வருந்துகின்றாள். நான பலவாறு அவளுக்குத் தேறுதல் சொல்லி உம்மை நேரில் கண்டு சங்கதி தெரிவிப்பதாகச் சொல்லி வந்தேன். தாங்கள் அங்கு வாராமலிருக்கும் காரணமென்ன?

பூபாலன்.—வனஜாக்ஷி! என் நண்பன் வியாபார நிமித்தமாக வெளியிற் சென்றமையால் அன்னேன் திரும்பி

வருமளவும் அரைக்கணமேனும் வீட்டை விட்டகலாமல் இருக்கப் பணித்தமையால் இங்கு இருக்க நேரிட்டது. ஆபத்தில் காப்பாற்றிய நண்பனுடைய வேலையை அசட்டை செய்யலாமா? ஆனால் சொற்ப தினங்களுக்குள் புவனசுந்தரி அவ்வளவு துயரத்திற்குள்ளாவாளென்று நான் நினைத்ததில்லை, இன்னும் 3-தினங்களில் நான் அங்குவந்து புவனசுந்தரியை என் நகரத்திற் கழைத்துச் செல்கின்றேன். ஆகையால் அதுவரையிலும் என் காதலியைத் துயரப்படாமலிருக்கும்படி தெரிவிப்பாய். இதோ கடிதமும் எழுதித் தருகிறேன். அதை புவனசுந்தரியினிடம் பத்திரமாய்ச் சேர்க்கவேண்டும்.

(நிட்கிரமித்தல்.)

வனஜாக்ஷி.—சகி! நீ இனி துயரத்தைவிடு. நின் மனதுக்கிசைந்த மணாளனைக் கண்டேன். நீ துயரப்படுவதாக யான் தெரிவித்ததும் உடனே அவர் உயிர் துறக்க முயன்றார். நான் தடுத்து அவருடைய மனதைத் தேற்றினேன். இன்னும் 3-தினத்தில் உன்னைத் தன் நகரத்துக் கழைத்துப் போவதாகவும் அதுவரையிலும் துயரப்படாம லிருக்கும்படிச்சொல்லி இக்கடிதமும் வரைந்துத் தந்தார். (கடிதத்தைப் பஹிரங்கமாய் வாசித்தல்.)

"என் அன்பிற்கிசைந்த ஆசைநாயகி புவனசுந்தரிக்கு நாயகன் பூபாலன் வரைந்த லிகிதம். பிரியே! நின்னை என் நகரத்திற்கு அழைத்துப் போவதாகச் சொல்லிவந்த பிறகு என் நண்பன் வியாபார நிமித்தம் வெளியிற் சென்ற

மையால் அவன் உத்தரவின்படி அவன் வருமளவும் இவ்விடம் இருக்கநேரிட்டது. இன்றைக்கு மூன்றும்நாள் கட்டாயம் உன்னை வந்தழைத்துக்கொண்டு என் நகரம் செல்கின்றேன். அதுவரையிலும் நீ பொறுத்துக்கொண்டிருக்கவும்.''

(ஜெயசீலனும், ரூபாவதியும் புவனசுந்தரியைப் பார்க்க அவ்விடம் வரவும், கடிதத்தை வாசிக்கும் சப்தம் கேட்டு மறைவாக நின்று உற்றுக்கேட்டுப் பிறகு நகரஞ் செல்லல்)

ரூபாவதி.—நாதா! நாம் நமது புத்திரி புவனசுந்தரியைப் பார்த்து வரலாமென்று ஆழிமத்திய கிரகத்தையடைந்ததும் அங்கு அவள் வாசித்துக்கொண்டிருந்த அவள் சோரநாயகனுடைய சங்கதியை நினைக்குந்தோறும் என் மனம் கொதிக்கின்றது. தமது கீர்த்திக்குப் பங்கத்தை யுண்டுபண்ணி, தானே சுயமாக ஓர் நாயகனை வரித்துக்கொண்டு அன்னவனுடன் சேர்ந்து நகரஞ் செல்ல ஆயத்தமாயிருக்கிறாள். தாங்கள் சக்கிரவர்த்தியா யிருந்தென்ன. இதைவிட அவமானம் வேறு வேண்டுமோ. அவளே என் வயிற்றில் பிறந்தவளாயிருக்கின் இப்போதே அவள் உயிரைப் போக்கியிருப்பேன்.

''கற்பூரப் பாத்திகட்டி கஸ்தூரி யெருபோட்டுக்
கமழ்நீர் பாய்ச்சி
பொற்பூர வுள்ளியினை விதைத்தாலும் மதன்குணத்தைப்
பொருந்தக் காட்டும்

சொற்பேதை யருக் கறிவிங் கினிதாக
வருமெனவே சொல்லினாலு
நற்போதம் வாரா தாங்கவர் குணமே
மேலாக நடக்குந்தானே.”

என்பதுபோல அவளுக் கறிவு உண்டுபண்ணா வெண்ணி ஆழிமத்தியில் வீடு ஏற்படுத்தி ஆடவர் அணுகாவண்ணம் காவல் நியமித்து வைத்தபோதே ஒரு சோரநாயகனை சம்பாதித்துவிட்டாள். இதுகாறும் அரண்மனையில் அவளுடைய இச்சையின் வண்ணம் விட்டிருந்தால் இன்னும் எத்தனை சோரநாயகர்களை அடைந்திருப்பாளோ? இவ்விதமாக நம் குடும்பத்திற்கு அவமானம் விளைத்தவளை தாங்கள் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறீர்?

ஜெயசீலன்.—காதலி ! இது விஷயத்தில் என்னைக் கேட்பானேன். உனக்கே எல்லா சுதந்தரமும் யான் கொடுத்திருக்கையில் உன் அபிப்பிராயப்படிச் செய்யலாம். எனக்குக் காலஹரணமாகின்றது, யான் சபைக்குச் செல்கின்றேன்.

ரூபாவதி.—அரசனே எல்லா அதிகாரத்தையும் நமக்குத் தந்து விட்டனர். இனி அவள் சுகமாக நாயகனுடன் நகர் செல்லுவதைப் பார்க்கிறேன். சகி ! அதிசீக்கிரம் சென்று புவனசுந்தரியை இங்கழைத்துவா.

வனஜாக்ஷி.—புவனசுந்தரி ! இன்று நாமிருவரும் உன் நாயகனுடைய கடிதத்தை வாசித்துக்கொண்டிருக்கையில் உன் தந்தையும், உன் சிற்றன்னையும் நாமிருந்த அறைக்குச் சமீபம்வந்து மறுபடியும் திரும்பிப் போய்விட்டதாக காவற்காரனா லறிந்தேன்.

உன்னைப் பார்க்காமல் ஏன் திரும்பி விட்டார்களோ தெரியவில்லை.

புவனசுந்தரி.—சகி! இனி என்ன செய்யப்போகிறேன். நான் என் நாயகருடைய கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கையில் ஒருவேளை அவர்கள் கேட்டுத் திரும்பிவிட்டார்கள் போலும். என் சிற்றன்னையாகிய அப்பாதகி இனி என்ன செய்வாளோ!

"அத்தியின்மலரும்வெள்ளை யாக்கைகொள்காக்கைதானும்
பித்தர்தன்மனமும்நீரிற் பிறந்தமீன்பாதந்தானும்
அத்தன்மால்பிரமதேவ னலளவிடப்பட்டாலும்
சித்திரவிழியாள்நெஞ்சந் தெரிந்தவரில்லையாமே."

ஆகையால் என்மனம் வருந்துகின்றது.

வனஜாக்ஷி.—நீ யாதொன்றுக்கு மஞ்சவேண்டாம். உன் சிற்றன்னை ஏதாகிலும் உனக்குத் துன்பம் செய்வாளாயின் உன் நாயகர் சாமான்னியரன்று. அவர் உன் துயரத்தை நீக்குவார். அதோ உன் சிற்றன்னையின் சகி வருகிறாள். நீ தைரியமாக விரு.

சகி.—புவனசுந்தரி! நமஸ்கரிக்கின்றேன். உன் சிற்றன்னை உன்னை யழைத்துவரச் சொல்லினள்.

புவனசுந்தரி.—சகி! ஏது நல்லகாலம். இதுவரையிலும் என்னைக் கொடிய காவலில் வைத்திருந்தவள் இப்போது அழைத்துவரச் சொன்னதின் காரணம் ஏதோ அறிகிலேன். என் நன்மைக்கோ அல்லது தீமைக்கோ தெரியாது. எப்படியாகிலும் வருவது வந்தே தீரும். வா போகலாம். (தனக்குள்) நான் நினைத்த வண்ணமே என் கணவனுடைய கடிதத்தை நான் வாசித்துக்கொண் டிருக்கையில் என சிற்றன்னைக்கு

கேட்டே யிருத்தல் வேண்டும். நம்மை ஏதோ தண்டிக்கவே அழைக்கின்றனள் போலும். எல்லாவற்றிற்கும் கடவுளிருக்கின்றார். நம்மாலாகும் காரியம் ஒன்றுமில்லை.

"இன்னவினை யின்னதலத் தின்னபொழு தின்னபடி
யின்னதனை லெய்து மெனவறிந்தே—யன்னதற்
யன்னதலத் தன்னபொழு தன்னபடி யன்னதமுற்
பின்னமறக் கூட்டும் பிரான்."

என்றபடி வினையானது இன்ன ஊரிலே, இன்னகாலத்திலே, இன்ன விதமாக இன்ன முன்னிலையில் வருமென்றறிந்து அவ்வினையை யவ்வூரில் அக்காலத்து அவ்விதமாக அதன் முன்னிலையில் சிறிதும் மாறுபாடின்றி நடத்துவிக்கிறவன் இறைவனுரும் அல்லாமலும்,

"சும்மா தனுவருமோ சும்மா பிணிவருமோ
சும்மா வருமோ சுகதுக்கம்—நம்மான்முன்
செய்தவினைக்கீடாச் சிவனருள் செய்விப்பதென்று
லெய்தவினை நாடி யிரு."

என்றிருக்கிறபடியால் சர்வேஸ்வரனுடைய அடியையே சிந்தித்துச் செல்கின்றேன். சிற்றன்னையே! நமஸ்கரிக்கின்றேன். என்னை இவண அழைத்தக்காரண மென்னை?

ரூபாவதி.—அடி! புவனசுந்தரி! நம்முடைய குலத்திற்கு அவமானத்தை விளைவிக்கவா உன் தாயார் உன்னைப் பெற்றனள். அவளும் உன்னைப்போன்ற துன்மார்க்க நடத்தை யுள்ளவளாயிருத்தல் வேண்டும். "தாயைப் போல் பெண், நூலைப்போல் சீலை" என்ற வசனத்தை உன்னால் உணர்ந்தேன். நல்லது உன்னுடைய சுகத்தைக் கெடுத்தல் பொருட்டு நான் இருக்கையில் நீ எவ்வாறு என்னிடத்திலிருந்து தப்புவாய். நீ அந்த கள்ள

புருடனுடன் அவன் நகரத்துக்குச் செல்வதை நான் பார்க்கிறேன். அவ்வாடவனுடைய தீரத்தையும் நான் அறிகிறேன். சகி! இப்பாதகியைக் கொண்டுபோய் அந்தப்புரத்திலுள்ள ஓர் சிறையிலடைத்துவிடு.

(சிறையிலடைத்தல்.)

ரூபாவதி.—காவலர்களே! நீங்கள் அதி சீக்கிரமாக ஆழி மத்தியகிரகம் சேர்ந்து நாளையதினம் அஸ்தமித்தவுடன் அங்குவரும் ஆடவனைக் கட்டிப்பிடித்து இங்குக் கொண்டுவரவேண்டும்.

காவலர்கள்.—தாயே! தங்களுடைய உத்திரவின்படியே நாங்கள் செய்வோம்.

(செல்கின்றார்கள்.)

9-வது அத்தியாயம்.

பூபாலன் காவலர்களுக்கு தப்பித்துக்கொள்ளுதல்.

பூபாலன்.—(தனக்குள்) நாம் இன்றையதினம் ஆழிமத்திய சிரகம் சென்று புவனசுந்தரியை நமது நாட்டுக்கு அழைத்துச் செல்ல தீர்மானித்தபடி நம்முடைய சினேகிதனும் வியாபாரத்தினின்றும் திரும்பிவந்து விட்டான். இரவு 10-நாழிகையாய் விட்டது. நண்பனோ நித்திரைச் செய்கின்றான். ஆகையால் புவனசுந்தரியி னிருப்பிடம் செல்கின்றேன். என்ன! ஆச்சரியமாயிருக்கின்றது! அரண்மனையில் தீபம் ஒன்றும் புலப்படவில்லை. எங்குப் பார்த்தாலும் அந்தகாரத்தால் மூடப்பட்டிருக்கிறது. புவனசுந்தரி சயனித்திருக்கும் அரையிலும் வெளிச்சமில்லை. ஹா! இதென்னவிந்தை? நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்ததே! நம்மை எப்பக்கமும் அசையவொட்டாமல் வீரர்கள் பிடித்துக்கொண்டார்களே! இனியென்னசெய்வது? இவர்களிடமிருந்து எவ்வாறு தப்புவது? இங்கு என்ன நடந்திருக்கிறதென்பதும், புவனசுந்தரி எங்கு சென்றிருப்பதும் ஒன்றும் தெரியவில்லை. இக்காவலர்கள் யாரால் அனுப்பப்பட்டார்களோ? ஆகிலும் இவர்களை நல்ல வார்த்தைகளினால் சங்கதியைத் தெரிந்துகொள்ளலாம். (பஹிரங்கமாய்) காவலர்களே! நீங்கள் என்னை அசையவொட்

டாமல் பிடித்துக்கொண்டபடியினுலே நான் உங்களுக்கு அடங்கினவனுகிவிட்டேன். இனி உங்களுடைய காவலுக்கு மீறமாட்டேன். ஆனல் என்னை நீங்கள் பிடித்துக்கொண்ட காரணம் இன்னதென்பதும் உங்களை இங்கு அனுப்பினவர்கள் யாவரென்பதும் எனக்கறிவிக்க வேண்டுகிறேன்.

காவலர்கள்.—ஐயா ! இவண் இருந்த புவனசுந்தரியை எங்களரசி தன அரண்மனைக்கழைப்பித்துச் சிறையிலிட்டனள். உம்மையும் கட்டிப் பிணித்துவர உத்தரவு செய்தபடி இதோ பிடித்துக்கொண்டோம். இனி உம்மைக் கட்டி எங்களரசியிடம் கொண்டுபோக வேண்டும்.

பூபாலன்.—(தனக்குள்) புவனசுந்தரி அவளுடைய சிற்றன்னையின் கொடூரத் தன்மையை முன்பே நமக்குத் தெரிவித்திருக்கிறுள். நம்மையும் அவள் என்ன கெடுதி செய்ய உத்தேசித் திருக்கின்றுளோ அறியோம். ஆகையால் இக்காவலர்கள் நம்மைக் கட்டுமுன்னமே நாம் தப்பித்துச் செல்லவேண்டும். (மெதுவாகத் தன் மடியிலிருந்த வாளை உருவி காவலாளர்களை வெட்டுதல். ஒருவன் மாத்திரம் தப்பியோடுகிறுன்) சரி, நாம் தப்பினேம் இனி நமது நண்பனுடைய கிரகம் சென்று புவனசுந்தரியினுடைய சிறையை நீக்கும் உபாயம் யோசிப்போம்.

(நிட்கிரமித்தல்.)

காவலாளி.—நல்லகாலத்தின் பயனுய் நான் தப்பிப்பிழைத்தேன். என் நண்பர்களெல்லாம் அவ்வீரனுடைய

வாளுக்கு இரையானார்கள். இச்சங்கதியை நம்முடைய அரசிக்குத் தெரிவிப்போம். தாயே! நமஸ்கரிக்கின்றேன்.

ரூபாவதி.—நான் பிடித்துவரச்சொன்ன ஆடவனெங்கே; நீ தனியாக வந்த காரணம் யாது? மற்றக்காவலாளிகள் அவ்வாடவனைப் பிணித்துக்கொண்டு வருகின்றார்கள்போலும். நீ முன்னதாக சங்கதி தெரிவிக்க வந்தனையே? என்ன மௌனமாய் நிற்கின்றாய்?

காவலாளி.—அன்னையே! யான் என்ன சொல்லப்போகிறேன். அவ்வாடவனை நாங்கள் பிடித்துக்கொண்டு கட்டுவதற்குள் அவனிடமிருந்த வாளை வீசி எல்லாரையும் எமனுலகம் சேர்த்தான். தெய்வாதீனமாய் நான் தப்பியோடி சங்கதி உமக்குத் தெரிவிக்கவந்தேன்.

ரூபாவதி.—இனி என்ன செய்வது? நம்முடைய எண்ணம் முன்னுக்கு வராமல் போய்விட்டதே. நல்லது இனி என்ன நடக்குமோ பார்ப்போம்.

புவனசுந்தரி.—சகி, வனஜாட்சி! ஈசனுடைய செயல் எவ்வாறு நடந்துவிட்டது பார்த்தனையா? கடைசியில் என் சிற்றன்னையால் சிறையிலடைக்கப்பட்டேன். நேற்றியதினம் என்னுடைய காதலர் ஆழிமந்திரகிரகம் போயிருப்பார், அவருக்கு அவ்விடம் என்ன ஆபத்து நடந்ததோ தெரியவில்லை ஆகையால் அங்கு யாரையாகிலும் உனக்குத் தெரிந்தவர்களை யனுப்பி சங்கதி தெரிவிக்க வேண்டுகிறேன்.

வனஜாக்ஷி.—புவனசுந்தரி! நீ அஞ்சற்க. என் தங்கை பானுமதி என்பவளிருக்கின்றாள். அவள் மிகவும் சாமார்த்தியமுள்ளவள். அவளைக்கொண்டு உன்நாயகனுடைய சங்கதியை தெரிந்துவரச் செய்கிறேன்.

(பானுமதியை அனுப்புதல்.)

பானுமதி.—அம்மா புவனசுந்தரி! என் தமக்கைத் தெரிவித்தபடி நான் ஆழிமத்தியகிரகம் சென்று பார்த்தேன். அங்கு சிலர் வெட்டுண்டு கிடக்கின்றார்கள். அவர்கள் இன்னாரெனத் தோன்றவில்லை. இதைத் தவிர அங்கு சங்கதிதெரிவிக்க யாரும் காணப்படவில்லை.

புவனசுந்தரி.—ஆ! ஈசா! இனி என்னசெய்வேன். என்னை ஆதரவற்றவளாகச் செய்தாயே. என் சிற்றன்னை என்னை இங்கு சிறைபிட்டவுடனே காவலர்களையனுப்பி என் காதலர் அங்கு சென்றவுடனே கொலை செய்துவிடும்படி உத்திரவு செய்திருக்கவேண்டும். அவ்வண்ணமே காவலர்கள் அவரைக் கொன்றிருக்க வேண்டும். ஆளனைப்பிரிந்து இனி அவனியிலிருப்பதால் என்னபயன்? எல்லாவற்றிற்கும் உயிர்துறப்பதே தகுதி.

வனஜாக்ஷி.—நீ உன் துயரத்தையகற்று. உன்நாயகர் க்ஷத்திரியகுல அரசனகையால் அல்ப காவலர்களால் கொலை செய்யப்பட்டிரார். அவரோ மிகவும் தீரர். யான் இந்தக்ஷணமே உன் நாயகர் வசித்துவந்த தனஞ்செயனுடைய வீட்டுக்குச்சென்று சகல சங்கதி

யும் தெரிந்துவருகிறேன். நீ ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். நான் துரிதமாகச் சென்றுவருகிறேன்.

(தனஞ்செயனுடைய வீட்டில் நுழைதல்.)

பூபாலன்.—அம்மா வனஜாட்சி! என்ன சமாசாரம்? நான் துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கும் காலத்தில் எனக்கோர் பற்றுக்கோலாக நீ இங்கு விஜயஞ்செய்தாய். சூரியனைக்கண்ட பனிபோல் என் துயரம் நீங்கிற்று. என்காதலி சுகமா? அன்னவளுக்கு என்ன சம்பவித்தது? நான் உனக்குத் தெரிவித்திருந்தபடி புவனசுந்தரியை நகரத்திற் கழைத்துச்செல்ல ஆழிமத்தியகிரகம் சென்றேன். அங்கு காவலர்கள் என்னைப் பிடித்துக் கட்ட ஆரம்பித்தவுடனே நான் அஞ்சி என் உடைவாளால் அவர்களை வெட்டித் துணித்துப் தப்பி வந்தேன்.

வனஜாக்ஷி.—அரசே! அன்று நீர் என்னிடம் தந்த நிருபத்தைப் புவனசுந்தரி வாசித்துக்கொண்டிருக்கையில் அவள் சிற்றன்னையும் தந்தையும் மறைவாய் கேட்டிருந்துப் பின் நகரஞ்சென்று புவனசுந்தரியை வரவழைத்து சிறைச்சாலையிலடைத்து உம்மைப் பிணித்துவர ஆட்களை அங்கு அனுப்பினர். உமக்கு அங்கு என்ன சம்பவித்ததோவென வறிய என் தங்கை பாருமதியை அனுப்பினேன். அவள் சென்று அங்கு சிலர் வெட்டுண்டு கிடப்பதைத் தெரிவித்தனள். புவனசுந்தரி இச்சங்கதியைக் கேட்டதும் நீரும் அங்கு மடிந்திருக்க வேண்டுமென்றும், ஆகையால் தானும் உயிர் துறப்பதே உசிதமெனவும் மொழிந்தனள்.

நான் அனேகவிதமாய் தைரியமுறைத்து உம்மை நேரில் கண்டுவந்து தெரிவிப்பதாக மொழிந்து இங்கு வந்தேன். தாங்கள் புவனசுந்தரியை எப்போது உமது நகரத்திற்கழைத்துச் செல்வதும் தெரிவித்தால் நான் அவளுக்குத் தெரிவிக்கிறேன். இனி காலதாமதம் செய்யலாகாது.

பூபாலன்.—சரி! நாளையதினம் ஊர்புறத்திலிருக்கும் காளிகாதேவியின் ஆலயத்துக்கு புவனசுந்தரியை நீ அழைத்துவரின் நான் நகரத்திற் கழைத்துச் செல்கின்றேன்.

வனஜாக்ஷி.—அரசே! அப்படியே எந்த உபாயத்தினலாகிலும் நான் அவளை அழைத்துவருகின்றேன். நான் சீக்கிரம் செல்கின்றேன்.

(நிஷ்கிரமித்தல்.)

புவனசுந்தரி.—நான் இன்னும் எவ்வளவு காலம் இக்காவலிலிருக்க வேண்டுமோ தெரிகிலேன். என்பிராண நாதருடைய சங்கதியோ வொன்றும் தெரியவில்லை. என் சகி அவரைக் கண்டனளோ? அவர் அவளைக் கண்டு சம்பாஷித்தனரோ? யாதும் தெரியவில்லை. அல்லது என் பிராணநாதரைக் காணுது வருந்தி என்னிடம் வரத் துணியாமல் என்சகி எங்கேயாகிலும் சென்றனளோ? ஆ! தெய்வமே! என்னை இவ்வித துன்பத்தில் ஆழச்செய்வது நீதியோ! இதோ என்சகி வருகின்றனள். சகி! என்நாதர் உயிருடனிருக்கின்றனரா?

சகி.—புவனசுந்தரி! ஏன் வீணே வருந்துகின்றனை? இனி நீ சஞ்சலத்திற் கிடங்கொடாதே. என்பிரிய தோழி!

உனது மணாளன் உன்னைப்பிரிந்த சோகத்தால் தவிக்கின்றனர். ஊண், உரக்கத்தையும் நீத்தனர். யான் அவரை அவரது நண்பருடைய கிரகத்தில் தனியாய்க் கண்டு பேசினேன். என்னை அவர் கண்டவுடன் அக மகிழ்ந்து ஆனந்தக்கண்ணீருதிர்த்து உன் சங்கதியை வினவினர். உனக்கு நேர்ந்த விபத்தை யெல்லாம் நான் ஆதியோடந்தமாய்த் தெரிவித்த பின்னர் நாளையதினம் இவ்வூர் காளிகோயிலண்டை வரும்படிக்கும், உன்னை அவ்விடமிருந்து தன் நகரத்திற் கழைத்துக்கொண்டு போவதாகவும் தெரிவித்தார்.

புவனசுந்தரி.—சகி! இவ்விடம் அருஞ்சிறை யிருக்கும் யான் என் நாதர்பால் செல்வது எவ்வாறு சாத்திய மாகும்?

சகி.—தோழி! இது விஷயத்தில் நீ ஆலோசிக்கவேண்டிய தில்லை. நான் வேறு சாவியைக்கொண்டு நீ இருக்கும் இவ்வறையைத் திறந்துவிடுகிறேன். பின்னர் உன்னை யழைத்துக்கொண்டு கோவில் வரையில் வந்து உன் நாயகருடன் உன்னைச் சேர்த்து நான் திரும்பிவிடுகி றேன். பின்னால் உன் சிறந்தன்மையால் எனக்கு எவ் வித சங்கடம் வந்தாலும் வரட்டும், நான் அனுபவிக் கச் சித்தமாயிருக்கிறேன். நீ பிரயாணத்திற்குச் சன் னித்தையாயிரு.

புவனசுந்தரி.—சகி! நீ கதவைத் திறந்தமையால் வெளியில் வந்தேன். நடுநிசியானதால் காவலர்கள் தூக்கத்தி லிருக்கின்றனர். இதோ உன்பின்னால் வந்துகொண் டிருக்கிறேன். நீ துரிதமாய்ச் செல்வாயாக.

சகி.—இதோ காளிகோவில் சேர்ந்துவிட்டோம். உன் நாயகரும் கூடிய சீக்கிரத்தில் வந்துவிடுவார்.

புவனசுந்தரி.—சகி! இக்கோயிலை இதுகாறும் யான் கண்டதில்லை. தாழம்பூ முனைபோல் மிக வெண்ணிறமான காட்டானையின் தந்தங்களாலாக்கிய கதவினால் மூடப்பெற்று, இரத்த சாமரங்களின் வரிசைகளையும் பவளத்தை உருக்கிரும்புகளாற்செய்த மாலைபோன்ற கண்ணாடிகளின் பந்திகளையும் பெற்றிருக்கும் இரும்புமயமான தோரணவாயிலுடன் கூடியதுமான இக்கோயிலைப் பார்த்தனையா? சிவந்த சந்தனக்குழம்பில் நனைந்த கரதலங்கொண்டு முத்திரையிடப் பெற்றிருக்கின்றமையால் உதிரத்தினால் சிவந்த கூற்றுவனது கையினால் அடிக்கப்பட்ட சின்னத்துடன் கூடியது போல் காண்பதும், சிவந்த நேத்திரங்களை யுடையதாயிருத்தலால் அவற்றை உதிர பிந்துக்களென எண்ணி அதில் அவாக்கொண்ட நரிகளால் நக்கப்பெற்றதுமான இரும்பினாலாக்கிய எருமைக்கிடாவானது இக்கோயிலுக்கு எதிரில் ஒரு கருங்கல் மயமான மேடையின்மீது அமைக்கப் பெற்றிருக்கின்றது. அதோ பார், ஒருபக்கத்தில் மான்களின் கோடிக்கணக்கான கோணக் கொம்புகளின் முனைகளால் முளைமுளைத்திருப்பது போலவும், அறுத்தெரியப் பெற்றிருக்கும் ஈரமுள்ள நூற்றுக்கணக்கான நாக்குகளால் செந்தளிர் தளிர்த்திருப்பது போலவும், பல்லாயிரம் சிவந்த கண்களால் பூப்பூத்திருப்பதுபோலவும், அரிந்தெரியப்பெற்ற சவங்களின் மண்டைகளாற் கனிவர்க்

கங்களுடன் கூடியது போலவும் பலியிடுவதிற்செய்த கொலைகளின் கோலங்கள் காணப்படுகின்றன. இதோ மரக்கிளைகளின் இடைகளில் செங்கோழிகள் பதுங்கியிருத்தலால் மிகப்புயந்து அகாலத்திற்பூத்த பூங்கொத்துகளுடன் கூடினவைகள்போல காணப்படும் இரத்தாகோச மரங்களால் இக்கோயிலின் ஓர் பாகம் அலங்கரிக்கப் பெற்றிருக்கின்றது. தீபத்தின் தூமம் பட்டு காவிபடிந்து தொங்கிக்கொண்டிருக்கும் திரைச்சீலையுடன் கூடியதும், மயில்களின் தொண்டை முருந்துகளின் வலயங்களால் தொடுக்கப்பெற்றத் தோரணத்தை யுடையதும், மரக்குழம்பினுல் வெண்மையாக்கப்பட்ட மணிகளின் மாலைகளுடன் கூடியதுமான மூலஸ்தானத்தின் வாயிற்படியில் பித்தளையினுற் செய்த சிங்கமுகத்தி னுருவங்கொண்ட தாளையின் மத்தியில் இரும்பு தாழ்ப்பாளிடப் பெற்றதும். தந்தத்தினுல் செய்த உழல் மரத்தடியை யுடையதும், பொன்னிறம், நீலநிறம், சென்னிறம் என்கின்ற பல வர்னங்கள் பொருந்திய வரிசைவரிசையான கண்ணுடிக்குமிழ்களால் விளங்குபவையுமான இரு கதவுகள் அமைக்கப்பெற்றிருத்தலைப் பார்த்தனையா? சகி! நீ செய்த உதவிக்கு யான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். அதோ பார்த்தனையா, என் நாதர் அதோ வந்துகொண்டிருக்கிறார்.

பூபாலன்.—என் கண்மணி! நீ இதுகாறும் துயருற்றதைக் கேட்டு மிக வருந்தினேன். உன் கஷ்டங்களுக்கெல்லாம் நானே காரணமா யிருந்தேனல்லவா?

புவனசுந்தரி.—நாதா! நான் இது வரையில் பட்டிருந்த கஷ்டங்களெல்லாம் இப்போது உம்மைப் பார்த்தவுடன் சூரியனைக்கண்ட பனிபோல் பறந்தோடின. இனி நாம் இவ்விடம் தாமதிக்கப்படாது. சகி! வனஜாக்ஷி! உன்னை யான் பிரிய காலமாய் விட்டது. ஆனபோதிலும் சீக்கிரத்தில் உன்னை என் கணவருடைய நகரத்திற்கு அழைத்துக்கொள்ளுவேன் என்னைப் பார்ப்பதுபோல் இதோ என் கணையாழியைத் தருகிறேன். அதை நீ அணிந்துக்கொள்வாயாக.

(நிஷ்கிரமித்தல்.)

ரூபாவதி.—ஹா! என்ன விபரீதம். நான் எவ்வளவோ பத்திரத்துடன் புவனசுந்தரியை காவலில்வைத்து அவளுடைய கர்வத்தை அடக்க எண்ணி அரசனையும் என் வசப்படுத்தியிருந்தும் எவ்விதமாகவோ காவலிலிருந்து தப்பிப்போய் விட்டதாகக் காவலர்கள் தெரிவித்தார்கள். அப்பாதகிக்குத் தோழியாயிருந்த வனஜாக்ஷியினால்தான் அவள் விடுவிக்கப்பட்டிருக்கவேண்டும். நல்லது அத் தோழியை அரசன் முன் நிறுத்தி அவளுக்குத் தகுந்த தண்டனையும் செய்விப்பதல்லாமல் புவனசுந்தரி இருக்கும் இடத்தையும் தேடச்செய்து மறுபடியும் அவளைக் கஷ்டத்துக்குள்ளாக்குவதே சரி. (அரசனிடம் சென்று) பிராணநாயகா! தங்களருமைக் குமாரத்தியாகிய புவனசுந்தரியை அவள் தோழியான வனஜாக்ஷி நான் முன்னர் தங்களுக்குத் தெரிவித்திருந்தபடி ஓர் ஆடவனுடன் கூட்டி அனுப்பிவிட்டாள். இவ்வாறு ஓர் ராஜகுமாரத்தியை சோர புருஷனுடன் சேர்த்தனுப்பிய இச் சண்டாளிக்குத் தகுந்த தண்டனை விதிக்கவேண்டும்.

அரசன்.—அப்படியா? அடா சேவகா! வனஜாக்ஷியை சீக்கிரம் இங்கு கொண்டுவா.

சேவகன்.—அரசே! இதோ அழைத்துவந்தேன்.

அரசன்.—வனஜாக்ஷி! அதிக புத்திசாலியென்று நான் இது வரையிலும் நினைத்திருந்து என் அருமைக் குமாரத்தியினிடம் உன்னைத் தோழியாக அமர்த்தின பலன் இதுதானோ? இவ்வளவு அக்கிரமமான விஷயத்தில் உன்மனம் எவ்வாறு பிரவேசிக்கத் துணிந்தது? புவனசுந்தரியைச் சோர புருஷனுடன் அனுப்பினையா? சீக்கிரம் தெரிவி.

வனஜாக்ஷி.—அரசே! புவனசுந்தரி தான் இச்சித்த ஆடவனை விவாகம் செய்துக் கொள்ளுவதாக சொல்லியிருக்க அவளுடைய சிற்றன்னையான தங்கள் மனைவி தங்களுடைய மேலான மனதை பொய் வார்த்தைகளினால் தன்பால் திருப்பி அவளை அருஞ்சிறை அமைக்க, அரசனின் அருமைத் திருக்குமாரன் பூபாலன் அவ்வாழி மத்தியகிரகம் நண்ணி, தங்கள் குமாரத்தியை காந்தர்வமணம் செய்துக் கொண்டனன். பூபாலன் தங்கள் குமாரத்தியை அழைத்துச்செல்வதாக எழுதியிருந்த நிருபத்தைக் கேட்ட தங்கள் மனைவி தங்களுடைய புத்தியை மாற்றி, அந்தப்புரத்தில் அருஞ்சிறைப் படுத்தினள். என்னுடைய உதவியால் புவனசுந்தரி காவல் கடந்து தன் நாயகனுடன் நகருஞ் சென்றாள். நான் அவளிடம் வைத்திருந்த பிரீதியினால் அவளுடைய கஷ்டங்களைப் பார்க்க சகிக்காமல்

காவலிலிருந்து தப்பும்படிச் செய்தேன். இதற்காகத் தாங்கள் என்ன சிட்சை விதிக்கினும் ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.

அரசன்.—எவ்வளவு காரியங்கள் எனக்குத் தெரியாமலே நடந்திருக்கின்றன. எல்லாம் புவனசுந்தரியின் இஷ்டப்படி ஆழிமத்திய கிரகத்திலும், பின் தன் தாய் வீட்டிலும் இருப்பதாக நினைத்திருந்தேனே யொழிய சிறையி லிருப்பதாக உணர்ந்திலேன். ரூபாவதி! உன்னாலேயே எல்லா விபரீதங்களும் நடந்திருக்கின்றன. நான் உன்னுடைய வஞ்சனை மொழிகளைக் கேட்டு மோசம்போனேன். அடி சண்டாளி! நான் என் குமாரத்தியைப் பார்க்குமளவும் என் முன் நீ வரப்போகாது.

10-வது அத்தியாயம்.

பூபாலன் புவனசுந்தரியைப் பிரிதல்.

பூபாலன்.—எனதாருயிற் காதலி! நீ ஒருவாறு சோர்ந்திருப்பதின் காரணம் யாது.

புவனசுந்தரி.—நாதா! எனக்குப் பிரசவ வேதனையா யிருக்கிறது. ஆகையால் இச்சமுத்திர தீரத்தி லிறங்கவேண்டும். இனி பிரயாணம்செய்ய சாத்தியப்படாது.

பூபாலன்.—ரமணு! இதோ இவ்விடத்தில் பிரம்புகளாலும் இலைகளாலும் ஓர் குடிசை அமைத்தேன். அதில் நீ பிரசவிப்பாயாக. பிரம்பினாலேயே ஓர் தொட்டிலும் அமைத்தேன்.

(ஆண்குழந்தை பிரசவமாயிற்று.)

பூபாலன்.—காதலி! இதற்குச் சமீபத்தில் ஓர் நகரம் தென்படுகின்றது. அங்குச் சென்று மருந்து சாமான்கள் வாங்கி வருகின்றேன். நான் வருமளவும் ஜாக்கிரதையாய் இருக்கவும். நான் சென்று வருகிறேன்.

புவனசுந்தரி.—என் நாதர்போய் வெகுநேரமாகியும் இன்னும் திரும்பி வரவில்லை. எனக்கு தாகவிடாய் அதிகமாகின்றது. சமீபத்தில் ஜலம் எங்கு கிடைக்குமோ தெரியவில்லை. அதோ சமீபத்தில் ஓர் காட்டாறு போவதுபோல் தோற்றுகிறது, போய் நீருந்தி வருகிறேன்.

(காட்டில் வேட்டையாட வந்திருந்த கீர்த்திசீலனுடைய வேட்டை நாய் குடிசையில் நுழைந்து குழந்தையை தொட்டிலுடன் கௌவிச்சென்றது.)

புவனசுந்தரி.—இந்த காறுற்றின் நீர் எவ்வளவு நன்று யிருக்கிறது. என் தாகவிடாய் முழுதும் தீர்ந்துவிட்டது. குழந்தையைத் தனியாய் குடிசையில் தொட்டியில் போட்டுவந்தேன். சீக்கிரம் செல்கின்றேன். ஆ தெய்வமே! குழந்தையைக் காணேமே! இதென்ன கொடுமை! என் நாதரும் இன்னும் வந்திலர்! ஐயோ! நீர் வேட்கையால் நான் வெளியிற் செல்லவும், குழந்தை தொட்டிலுடன் அபகரிக்கப்பட்டதே! ஏ வத்ஸலா! என் கண்மணி! என் செல்வமே! நான் என்னசெய்வேன்? எவ்விடம் தேடிப்பார்ப்பேன்? வனதேவதைகள் தூக்கிச்சென்றதோ? பேய் பிசாசுகள் எடுத்துக்கொண்டு போயினவோ. இந்த நிர்மானுஷியமான இடத்தில் எங்குசென்று பார்ப்பேன். ஐயோ! என்செய்வேன்? என்னுடல் பதறுகின்றதே. கண்மணி! குழந்தாய்! குடிசையைவிட்டு வெகுதூரமளவு சுற்றிச்சுற்றிப் பார்த்தும் என் கண்மணியைக் காணேனே. ஆ செல்வமே! நீ பிறந்தின்னமொரு தினங்கூட ஆகவில்லையே, என் கற்பகமே! என்ன ஆபத்து விளைந்தது. நான் ஜன்மமெடுத்ததுமுதல் கஷ்டமடைகிறேனே யொழிய சுகப்படவில்லையே. என்ன செய்வதும் தோன்றவில்லையே. அக்காட்டில் வெகுதூரம் வந்துவிட்டேனே. குடிசை எத்திக்கிலுள்ளதும் தெரியவில்லை. நகரஞ்சென்ற என் காதலர் திரும்பி குடிசையை நாடி என்னையும், குழந்தையையும் காணுது என் செய்கின்றனரோ. புத்திரகளத்திர வியோகத்தால் என்நாதர் நிச்சயமாய் உயிர் துறப்பார். சூரியனும் நான்படும் துயரைப்பார்க்க

மனமில்லாமல் அஸ்தமித்து விட்டான். குழந்தாய்! நின்ஜீவ னிதுகாறு மிருக்கின்றதோ இல்லையோ? ஜெகதீசா!

(மூர்ச்சித்தல்.)

(மச்சதேசத்து அரசன்மனைவி அம்புஜாக்ஷி தன் தோழிகளுடன் காட்டைச் சமீபித்து நந்தன வனத்தில் பிரவேசிக்கிறாள்)

அம்புஜாக்ஷி.—தோழிகாள்! நாம் நெடுநேரம் இந்த நந்தன வனத்தில் விளையாடினமையால் எனக்கு தாகம் அதிகரித்திருக்கிறது. ஆகையால் அதோ தெரிகிற தடாகத்தை நாடி வேட்கையைத் தணிக்கலாம். ஆ! இதென்னவாச்சரியம்? இத்தடாகத்தின்கரையில் ஒருமாது நல்லாள் மூர்ச்சித்துக் கிடக்கின்றாள், அன்னவளுக்கு உயிர் இருக்கின்றதோ? இல்லையோ? தெரியவில்லை. இவளுடைய மூர்ச்சையைத் தெளிவித்துப் பின்னர் இவளுடைய சவிஸ்தாரத்தைத் தெளிந்துகொள்ளலாம்.

(மூர்ச்சையைத் தெளிவித்தல்.)

புவனசுந்தரி.—அன்னையே! மகாபாவியான நான் என் நாதரையும், குழந்தையையும் இழந்து இங்கு மூர்ச்சித்த சோபத்தைத்தீர்த்த தாம் யார்? வனதேவதையா? அன்றேல் அரி, அயன், அரன் இவர்கள் பாகத்தமர்ந்த பச்சைப்பசுங்கொடிப் பாவையரோ? தாம் யார்? அன்னையே!

அம்புஜாக்ஷி.—அம்மணி! நன்குமொழிந்தீர். உமது சௌந்தரியத்தைப்பார்த்து நான் ஆச்சரியமடைந்து பிரம

தேவன் தன் முழுசாமர்த்தியத்தையும் உலகினற்குக் காட்டவெண்ணி உம்மை இவ்வளவு அழகுடன் சிருஷ்டி செய்திருக்க வேண்டுமென்று எண்ணி உம்முடைய களையை ஆற்ற நீர் என்னைத் துதிப்பது நீதியாகுமா? தாம் யார்? தமக்கு இவ்வாபத்து சம்பவித்த காரணம் யாது?

புவனசுந்தரி.—அம்மணி! யானிருப்பது கலிங்கதேசம். யானும் என் நாதரும் குழந்தையுடன் என்பெற்றோர் வசிக்கும் நகரம் செல்லாநிற்க, வழியில் என் நாதர் என்னை ஓரிடத்திலமர்த்தி உணவுப்பொருள்வாங்கிவர சமீபத்திலுள்ள ஓர்பட்டணம் செல்லவும், நான் தாக விடாய் தீர்த்துவரச் சமீபத்திலுள்ள ஓர் காணாற்றுக்குத் தொட்டிலுடன் குழந்தையைவிட்டுச் சென்று மறுபடியும் திரும்பிவந்து பார்க்கையில் குழந்தையைக்காணாது பரதவித்து, காட்டிலலைந்து எங்கும் என் குழந்தையைக் காணாமையால் வருந்தி இங்கு மூர்ச்சையடைந்தேன். என் நாதர் எவ்வாறாயினரோ? குழந்தை என்ன வாயிற்றோ? அறிகிலேன்.

அம்புஜாக்ஷி.—கண்மணி! இனி நீ துயரப்படாதே. நினக்கு எவ்வளவு துயரிருப்பினும் அதை யகற்று. நின் நாதர் எங்ஙன மிருப்பினும் என்னுடைய சேவகர்களால் தேடச்செய்து அன்னவரை யழைத்துவந்து நின் மனமகிழ நின்னுடன் சேர்ப்பேன். அதுவரையில் என் குமாரத்தியைப்போல் இவண் வாசஞ்செய்.

கீர்த்திசீலன்.—எனது புத்திரன் பூபாலன் உலகியல்பறியச் சென்றவனிதுகாறும் வரவில்லையே, யான் என்செய்

வேன்? எங்ஙனஞ் சென்றனனோ? எவ்வாறாயினனோ? பூபாலன் சென்றநாள்முதல் நிமிஷமொரு யுகமாகக் கழித்து வருகிறேன். இது என்ன விந்தை! நான் வேட்டையாட இக்காட்டுக்கு வந்து நெடுநேரமாகி யும் என்னுடைய வேட்டைநாய் என்னைவிட்டுப் பிரிந் திருக்கிறது. ஒருவேளை மிருகங்களைத் தொடர்ந்து சென்று வழிதப்பிப் போயிருக்கவேண்டும். என்ன புதுமை! அதோ என்வேட்டை நாய் பிரம்பினால் முடையப்பெற்ற ஏதோ ஒன்றைத் தன்வாயில் கௌவிக்கொண்டு வருகிறது. என்ன ஆச்சரியம்! அது ஓர் தொட்டிலாகக் காணப்படுகிறது. இதில் ஒரு குழந் தையும் இருக்கின்றதே. ஆ! இது யாருடைய குழந் தையோ? இந்நாய்க்கு இது எங்ஙனம் கிடைத்தது. யாராகிலும் வழிப்போக்கர்கள் தொட்டிலுடன். குழந்தையை எறிந்து போயிருப்பார்களா? குழந் தையோ ஜீவனுடனிருக்கின்றது. இக்குழந்தையின் பெற்றோர்கள் மிருகங்களால் பட்சிக்கப்பட்டனரோ? ஒன்றும் அறிகிலேன். நல்லது இங்கு என்னு டன் வந்திருக்கும் வேடர்களைக்கொண்டு இக்காட் டில் இக்குழந்தையின் பெற்றோர்களைத் தேடச்செய் கிறேன். வேடர்களே! இதோ! இக்குழந்தையைப் பாருங்கள். இது தொட்டிலுடன் என் நாயினால் கொண்டுவரப் பட்டிருக்கின்றது. இதனுடைய பெற் றோர்கள் உயிருடனிருக்கில் இக்காட்டின் சமீபத்தில் தான் இருக்கவேண்டும். ஆகையால் உடனே நீங்கள் சென்று அறிந்துவாருங்கள்.

வேடர்கள்.—அண்ணே! நம்முடைய அரசனுக்குத் தெய் வச்செயலாய் ஓர் குழந்தை அகப்பட்டது. நம்

மாசனுடைய நாயோ எவ்வளவு சாமர்த்தியமாய் தொட்டிலுடன் அக்குழந்தையைக் கொண்டுவந்தது பார்த்தாயா ? அது யாருடைய குழந்தையோ. அதைப் பெற்றவர்கள் என்னவானூர்களோ ? நாம் விரைந்து இக்காட்டில் முழுதும் தேடி அவர்களைக் கண்டுபிடிப்போம். என்ன! இக்காட்டில் நாம் நுழைந்துபார்க்காத இடமில்லை. மனித சஞ்சாரத்தை எங்கும் காண்கிலேம். நாம் இன்னும் காலதாமதம் செய்தால் நம் அரசன் கோபிப்பார். ஆகையால் திரும்பிச் செல்வோம். அரசே! இக்காட்டில் நாங்கள் தேடிப் பார்க்காத இடமில்லை, யாரும் எங்கள் கண்களுக்குப் புலப்படவில்லை.

கீர்த்திசீலன்.—நல்லது, இனி நாம் என்னசெய்வது? பூபாலனைப் பிரிந்த சோகம் தணிய நமக்கு கடவுள் இக்குழந்தையைத் தந்தனர்போலும். நாட்டைச் சேர்ந்து என் காதலியான கமலாவதிக்கு இக்குழந்தையைக் கொண்டுபோய் கொடுக்கிறேன். அவளும் என்னைப் போல் குமாரனுடைய சோகத்திலிருந்தும் நீங்குவாள்.

(அரண்மனையைச் சேர்தல்.)

கீர்த்திசீலன்.—ஏ எனது அன்பு நிறைந்த காதலி! இந்த விந்தையைப் பார்த்தனையா! கடவுளின் மகிமையை என்னென்று சொல்வது. இத்தொட்டிலி லிருக்கும் ஆண் குழந்தையைப் பார்த்தனையா? நான் வேட்டையாடச் சென்றிருந்த காட்டில் நம்முடைய வேட்டை நாயினுல் யாதொரு தீங்கு மின்றி இக்குழந்தை சவுக்கியமாய் கொண்டுவரப்பட்டது.

கமலாவதி.—(கரத்தில் குழந்தையை எடுத்துக்கொண்டு) காந்தா! ஆ ஹா! இக்குழந்தையைக் கண்ணுற்றதும் என் மனம் துயரத்திற்குள் ளாகிறது. நாதா! நன்ருய்க் குழந்தையை உற்றுப் பாருங்கள். நமது கண் மணியான பூபாலனைப்போ லிருக்கின்றதே.

கீர்த்திசீலன்.—பிரியே! நீ சொல்வது உண்மையே. பூபாலனைப் போலவேதான் இக்குழந்தை வடிவமிருக்கின்றது. இதைச் சற்று ஆலோசிக்குங்கால் பூபாலன் இவ்வாண் மகவைப் பெற்று தனது மனைவியுடன் நம் நகரத்தை நாடி வருங்கால் ஏதாகிலும் விபத்து நேரிட்டதோ? ஒன்றுந் தோன்றவில்லையே.

கமலாவதி.—பிராணபதி! இக்குழந்தை என் கண்மணியான பூபாலனுடைய தென்பதற்குச் சிறிதும் ஐயமிலது. ஆனல் பூபாலனுக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ. உயிருட னிருக்கின்ருனே? இல்லையோ? நான் என் செய்வேன், என் மனம் துடிக்கின்றது, ஆவியும் சோறுகின்றது. இனி எக்காலத்தில் என் குமாரனைப் பார்க்கப்போகின்றேன். ஐயோ! தெய்வமே.

கீர்த்திசீலன்.—மாதே! நீ துயரப்படாதே. எல்லாம் கடவுளின் செயலின்படி நடக்கும். நீ துயரப்படுவதிலும், பூபாலனைத் தேடுவதிலும் யாதொரு பயனுமிலது. இக்குழந்தையை எவ்வாறு கடவுள் நம்மிடத்தில் சேர்த்தனரோ அப்படியே நம்முடைய குமாரனையும் நம்மிடம் சேர்ப்பார். அத்தன் அருளை யாரறியக் கூடும்? மேலும் நம்மால் என்னசெய்யக்கூடும்.

"வருந்தி யழைத்தாலும் வாராது வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தானினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்."

என்னும் ஆன்றோர் வாக்கியப்படி வருவது வந்தே தீரும். வரும்விதி வழியில் நிற்காது. தெய்வகதியைத் தடுக்க எவராலுமாகாது. ஆதலால் விசனத்தை விட்டொழி. நாம் இக்குழந்தையை நன்றாய்ப் பாது காத்து வருவோம்.

பூபாலன்.—(தனக்குள்) என் கண்மணியான புவனசுந்தரி இக்காட்டில் எவருடைய துணையுமின்றிப் பிரசவித்த னள். நாட்டிலிருக்கின் எவ்வித பணிவிடைகள் நடக்கும். கடவுளின் அபாரசக்தியை அறிபவரார் எக்காலத்தில், எந்த இடத்தில் என்ன நடக்கவேண்டுமோ அது நடந்தேதீருகின்றன. நான் புவனசுந்தரியைத் தனியாகக் குடிசையில்விட்டு வந்து வெகுநேரமாயிற்று. ஆகாரமின்மையால் எப்படி வருந்துகின்றனளோ? சீக்கிரம் செல்கின்றேன். என்ன விபரீதம்! குடிசையில் என் நாயகியைக் காண்கிலேன். எவ்விடத்திற்குக் குழந்தையை எடுத்துச் சென்றிருப்பள்? எனதாருயிர்க் காதலி! கண்மணி! புவனசுந்தரி! எங்குசென்றாய்? நான் வெகுநேரமாகியும் வரவில்லையென்று தேடிச்சென்றனையோ? அப்படியிருக்கின் குழந்தையும் தொட்டிலுடன் காணப்படவில்லையே. நின்னைக்காணாது தவிக்கின்றேனே. பிராணப்பிரியே! என்ன ஆச்சரியம்! எவ்விடம் சுற்றிச்சுற்

றித் தேடினும் இக்காட்டில் காணப்படவில்லையே. அந்தோ! என்னசெய்வேன்? ஒன்றும் தோன்றவில்லையே. நான் உலகவியற்கையை அறிய தெய்வீக அஸ்வத்தைப் பெற்ற பயன் இதுதானோ? நண்பனை சுமதியையும், என் கண்மணியான சுந்தரவல்லியையும் ஆழிக்கிரையளித்தது போதாதென்றோ என் மனதுக்கிசைந்த புவனசுந்தரியையும். குழந்தையையும் பிரியச்செய்தேன். நல்லது அஸ்வத்தின்மேலமர்ந்து அதிசீக்கிரத்தில் இக்காடு, மலை, வனாந்திரம் முதலியவைகளிலெல்லாம் சுற்றிப் பார்த்து என் நாயகியையும், குழந்தையையும் கண்டுத் தெளிவேன். என்ன கொடுமை! வழக்கம்போல் அஸ்வத்தை நினைத்ததற்கு அது என்முன் தோன்றவில்லையே. சரி! இதற்கென்ன செய்வேன். முனிபுங்கர் எனக்குத் தெரிவித்திருந்தபடி எனக்கு ஆபத்து வருங்காலத்தில் அது என்னை விட்டகலு மென்றனரே, அது சரியாக முடிந்துவிட்டது. இனி பாதசாரியாய் நடந்து என் காதலியைத் தேடுகின்றேன். முள்ளுங் கல்லும் நிறைந்த இக்காட்டில் நடக்க முடியவில்லையே! ஈசா! ஐயோ, சரீரம் முட்களால் கீரப்பட்டு உதிரம் பெருகுகின்றதே. சுகமாக முடிசூட்டிக்கொண்டு நகரத்திலிராமல் உலகவியற்கையைக் காணவேண்டி பிதாவின் வாக்கை மீறினதற்குச் சஞ்சலப்படுவேனோ? அன்றேல் காதலி சுந்தரவல்லியும், நண்பன் சுமதியும் ஆழியில் முழுகி இறந்ததைப் பற்றிச் சஞ்சலப்படுவேனோ? அன்றி, புவனசுந்தரியும் பாலகனும், காட்டில் பிரிந்ததைப்பற்றி நோவேனோ? அன்றேல், முனிவர் அரு

ளிய அஸ்வம் என்னைவிட்டு நீங்கினதற்காக அழுதே னோ? அன்றி, என்னை நடக்கவொட்டாமல் முள்ளும் கல்லும் என் உடம்பில் தைத்து வதைப்பதற் கழுவே னோ? என் செய்வேன்.

(மூர்ச்சையடைதல்.

இராஜசேகரன்.—யான் எனது தந்தை இறந்தபின் இவ் வைந்து வருடங்களாக இந்த பீமாபுரியை ஆண்டு வந் ததற்கு இதுவரையில் காட்டு மிருகங்களால் நாடு நாசமாக்கப்பட்டதாகக் காணவில்லை. இப்போதோ குடிகளின் குறையை நீக்க இக்காட்டிலுள்ள மிருகங் களை யெல்லாம் வேட்டையாடிச் சிதரவடித்தேன். இனி என் பட்டணம் செல்கின்றேன். ஆ! இது என்ன விந்தை! இக்காட்டில் யாரோ ஒரு குமரன் படுத்திருக்கின்றனன். அவன் சரீரம் முள்ளுகளால் கீரப்பட்டு மிகவும் வாடி இருக்கின்றனன். ஐயோ! யார் பெற்றப் புத்திரனோ? இவனுக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ? அப்பா! நீயார்?

(தட்டி எழுப்புதல்.)

பூபாலன்.—ஐயா!

“ஜனிதாசோபநீதாச
யச்சவித்யாம்பிரயச்சதி
அன்னதாதாபயித்திராதா
பஞ்சைதே பிதாரஸ் மீருதஹ”

என்னும் நீதி நூலின்படி எனக்கிருக்கும் ஆபத்தைப் போக்கி எனக்குயிர்ப்பிச்சை யளித்தீர். நீர் என் பிதாவுக் குச் சமானமாவீர். ஆகையால் உமக்கு என் வர்த்தமா

னத்தைச் சொல்லுகின்றேன். யான் கலிங்கநாட்டிறை
மதலை. என் நாமதேயம் புஜபலன். என் பெற்றே
ளென்னைப் பிரிந்தனர். அப்போது பகையரசர்கள்
இராச்சியத்தை யபகரித்து என் மனைவி மக்களைச் சி
யாகப் பிடித்து என்னையும் வதைக்க முயல, யான் பகை
கண்களுக்குத் தப்பி இவ் வனத்தின் வழியாக வர முள்
ளால் என் சரீரம் பலமாகக் கிறப்பட்டமையால் களை
இங்கு சோர்வுற்றேன்.

இராஜசேகரன்.—குழந்தாய்! புஜபலா! யான் புத்திர
லாதப் பாவியா யிருக்கின்றேன். யானே சீமாட
கரசன். நீ என்னரண்மனையிலே என்று மிருப
சகல சொத்துக்களையும் இராச்சியத்தையும் உடை
உரிமையாக்குவேன். நின் அபிப்பிராயம் யாது?

பூபாலன்.—(தனக்குள்) இவ் வரசன் சொற்கள் நன்மை
கவே காணப்படுகின்றன. இவரது வார்த்தை
படி சம்மதித்திருப்பின் கடவுளின் கருணையால்
மனைவியையும் குழந்தையையும் ஒருக்கால்
காணக்கூடும். தெய்வச்செயல் பிறகு என்னமாயு
யுமோ பார்ப்போம். "அடுத்து முயன்றாலு மா
ளன்றி யெடுத்த கருமங்களாகா", ஆகையால் இ
டைய சம்மதியின்படியே இங்கிருந்து என் மனை
யையும், குழந்தையையும் பற்றித் தெரிந்துகொ
ளுவேன். அரசே! அநாதையாகிய என்னை பெ
பொருட்டாயெண்ணி அருமையுடன் மொழிந்தவ
தையைக் கேட்க மகிழ்ந்தேன். உம்முடைய
தின்படியே நடக்கச் சித்தமா யிருக்கிறேன்.
ளைத் தவிர என்னைக் காப்பாற்றுவார் யாருமிலர்.

MAHABALA ...